
# பொருளியல் நோக்கு

ஓகஸ்ட் 1977







மக்கள் வங்கி வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் கடல் வாழ் விலங்கினம்




1. சிங்க இறால்
2. கடல் நண்டு
3. சங்கு
4. முத்துச் சிப்பி
5. இறால்
6. கடல் ஆமை
7. கடல் அட்டை
8. காரல்
9. கீரி மீன்
10. வாளை
11. பறக்கும் மீன்
12. நெத்தலி
13. சாலை
14. கல் நகரை
15. சாவாலை
16. வரி நாம்பன்
17. சாவல்
18. கிளாத்தி
19. பேத்தை
20. கள்ளன் மீன்
21. புளினி மீன்
22. பாத மடி
23. குருவில்லை
24. கலவாய்
25. தினன்
26. அடல்
27. பராத்தி
28. சீலா
29. கும்பளா
30. அறுக்குளா
31. கெளுறு
32. பாரை
33. சூரை
34. சூரை
35. கொப்பரன்
36. மயில் மீன்
37. சுறா
38. கொம்புத் திருக்கை
39. கொம்பன் சுறா
40. வாள் சுறா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளியல் நோக்கு

மக்கள் வங்கியின்
ஆராய்ச்சிப்பகுதி வெளியீடு,
18, பார்க் வீதி,
கொழும்பு 2, இலங்கை

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No. 1259

மலர் 3 இதழ் 5 ஓகஸ்ட் 1977

## பொருளடக்கம்

### சிறப்புக் கட்டுரைகள்

ஏ. ஏ. ஜஸ்டின் டயஸ் 19 கிராம அபிவிருத்தி: ஒரு புதிய அணுகல்

பொன்னு விக்னராஜா 21 அபிவிருத்திக்கான விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் — கண்ணுக்கு எல்லைகள்

ஜக்ஸ் பக்னிகோர்ட் 26 பயனேது மற்ற சுற்றுலாத்துறை

### தலைமைக் கட்டுரை

3 மீன் வளங்கள் பயன்படுத்தப்பட்டவையும் பயன்படுத்தப்படாதவையும்

### நிரல்கள்

2 நிகழ்ச்சிக் குறிப்பேடு

15 பொருளாதாரம்

17 விவசாயம்

பொருளியல் நோக்கு கருத்துக்களையும் அறிக்கைகளையும் புள்ளி விபரங்களையும் உரையாடல்களையும் பல்வேறு கோணங்களிலிருந்து அளிப்பதன் மூலம் பொருளாதாரத்திலும் பொருளியல் வளர்ச்சி முறையிலும் ஆர்வத்தை உண்டாக்கி அறிவினை வளர்ப்பதைக் குறிக்கோளாகக் கொண்டது.

பொருளியல் நோக்கு மக்கள் வங்கியின் ஒரு சமுதாயப் பணித் திட்டமாகும். எனினும் அதன் பொருளடக்கம் பல்வேறு ஆசிரியர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைக் கொண்டதாகும். அவை வங்கியின் கொள்கைகளையோ உத்தியோக பூர்வமான கருத்துக்களையோ பிரதிபலிப்பனவல்ல. எழுத்தாளரின் பெயருடன் பிரசுரிக்கப்படும் சிறப்புக் கட்டுரைகள் அவ்வாசிரியர்களின் சொந்தக் கருத்துக்களேயாம். அவை அவர்கள் சார்ந்துள்ள நிறுவனங்களைப் பிரதிபலிப்பனவுமல்ல. இத்தகைய கட்டுரைகளும் குறிப்புக்களும் வரவேற்கப்படுகின்றன.

பொருளியல் நோக்கு மாதந்தோறும் வெளியிடப்படும். அதனைச் சந்தா செலுத்துவதன் மூலமோ, விற்பனை நிலையங்களிலிருந்தோ பெற்றுக் கொள்ளலாம்.

**அடுத்த இதழில்:**

- இலங்கையின் இரத்தினக்கல் கைத்தொழில் — அதன் வளர்ச்சியும், பொருளாதாரத்தின் மீதான தாக்கங்களும், சமூகவியல் தாத்பரியங்களும்
- தேசிய நகர அமைப்பு — தெளிவான கொள்கையொன்றின் அவசியம்
- வலு நெருக்கடி — இலங்கைக்கான உடனடித் தீர்வுகள்

**அட்டைப்படம்:**

இலங்கை நுண்கலைக் கல்லூரியில் டிப்ளோமாச் சான்றிதழ் பெற்றுள்ள ஓவியர் எஸ். எச். சரத்தினால் வரையப்பட்டது. எண்ணெய் வர்ணங்கள் இவரது சிறப்புத்துறையாகும். தற்பொழுது திரைப்படங்களில் கலைத்துறை இயக்குனராகப் பணிபுரியும் இவர், தன் படைப்புக்களைக் கொண்ட இரு பொருட்காட்சிகளை வெளிநாடுகளில் நடத்தியுள்ளார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்ச்சிக் குறிப்பேடு

ஜூலை

1 நீர்கொழும்பிலுள்ள படகுத்துறையொன்றினுல் நாரிலும், பலாப்பலகையினுலும் தயார் செய்யப்பட்ட 25 படகுகள் சோமாலியாவுக்குக் கப்பலேற்றுவதற்காகக் கொண்டுவரப்பட்டன.

புகலிடம் பெற்றவர்களை மீண்டும் ஒப்படைக்கும் சட்டத்துக்கிணக்கும் முதலாவது நாடாக ஸ்ரீலங்கா இருக்குமென்றும் இதற்கிணங்க நாணயமாற்று மோசடிகளில் சம்பந்தப்பட்டிருக்கும் ஏனைய பொது நலவாய நாடுகளைச் சேர்ந்தவர்கள் சட்டத்தின் முன்கொண்டுவரப்படுவார்களென்றும் நீதியமைச்சின் செயலாளர் அறிவித்தார்.

இந்திய எரிபொருள் இயற்கை வாயு ஆணைக் குழுவினுல் மேற்கொள்ளப்படும் பம்பாய் எண்ணெய் இயற்கை வாயு நிலையங்களின் வேலைகளுக்கான அபிவிருத்திச் செலவின் ஒரு பகுதியாக 15 கோடி டாலர் கடன் வழங்கப்படுமென உலக வங்கி உத்தியோக பூர்வமாக அறிவித்தது.

1971 ல் வங்காள தேசப் பிரச்சினையின்போது நிறுத்தப்பட்ட உதவிகளை, ஐக்கிய அமெரிக்கா மீண்டும் இந்தியாவுக்கு வழங்குவது பற்றிய அதிகார பூர்வமான அறிக்கையொன்றை எதிர்பார்ப்பதாக சென்னை 'ஹிந்து' குறிப்பிட்டது.

5 வளர்முக நாடுகளுக்கு உதவுமுகமாக சர்வதேச வங்கி ஒன்று அமைக்கப்பட வேண்டுமென்ற கொழும்பு மாநாட்டுத் தீர்மானத்தை அமுல் நடத்தும் பொருட்டு நகல் திட்டமொன்றைத் தயாரிப்பதற்காக அணிசேரா நாடுகளின் நிதியமைச்சர்களும், மத்திய வங்கி ஆளுனர்களும், அடுத்த வருடம் ஜூன் 27 ம் திகதி டியூனிசியாவில் கூடுவார்களெனக் கொழும்பில் அறிவிக்கப்பட்டது.

9 ஜனவசம உற்பத்தி செய்யும் தேயிலையின் வர்த்தக நடவடிக்கைகள் வழங்கப்படும் என்ற உத்தரவாதத்துடன் புதிய தரகர் நிறுவனமொன்று அமைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

12 குளிர்சாதன வசதிகளையும் 335 அடி நீளமான துறைமுக மேடையையும் கொண்ட தங்காலை கடற்றெழில் துறைமுகம் செயலாற்றத் தொடங்கியது.

நிதித்துறையில் பாரிய சீர்திருத்தங்களைச் ஏற்படுத்த வேண்டுமென்ற அரசாங்கத்தின் தீர்மானத்தினுலும், பிஸெட்டா நாணயத்தினை 20 சதவீதம் பெறுமதியிறக்கம் செய்திருப்பதனுலும் ஸ்பெயினின் வர்த்தக வட்டாரங்கள் பெரிதும் பீதியடைந்திருப்பதாகத் தெரிகின்றது.

பதவியேற்ற ஒரு வாரத்தின் பின்னர், ஜூலை 12 ல் நாணயப் பெறுமதியிறக்கத்தைச் செய்த அடொல்போ அவாரஸின் மந்திரிசபை ஐரோப்பியப் பொருளாதார ஒன்றியத்திலும் சேர்வதற்கு உடனடியாக விண்ணப்பிக்கப் போவதாக அறிவித்துள்ளது.

இந்தியா இவ்வருடத்தில் உணவுத்தானியங்களை இறக்குமதி செய்யாது என விவசாய அமைச்சர் பர்ஞலா லோக சபையில் அறிவித்தார். இந்தியாவில் 2 கோடி தொன் உணவுத்தானியம் இருப்பிலிருக்கின்றது.

13 இன்று ஸ்டொக்ஹோமில் முடிவுற்ற 13 ஒபெக் நாடுகளின் எண்ணெய் அமைச்சர்களின் 2 நாள் மாநாட்டில், 1978 ல் எண்ணெய் விலை அதிகரிப்பதா இல்லையா என்பது பற்றி டிசம்பரில் முடிவெடுப்பதாகத் தீர்மானிக்கப்பட்டது.

15 வெளிநாட்டுப் பயணச் சீட்டுக்களைப் பெற்றுக்கொள்வதற்குத் தினமும் சராசரி 300 பேர் விண்ணப்பிக்கின்றனர். விண்ணப்பதாரர்களில் பெரும்பான்மையினர் வெளிநாடுகளில் குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகளில் தொழில் நாடுவோராக இருக்கின்றனரென குடிவரவு குடியகல்வுத் திணைக்கள அதிகாரி ஒருவர் கூறினர்.

16 மூன்று மாத காலத்துக்குக் கோப்பி ஏற்றுமதியினை இடைநிறுத்திவைப்பதாகக் கொலம்பியா அறிவித்ததுடன் சர்வதேசக் கோப்பியின் நிலை சிக்கலான கட்டமொன்றை அடைந்துள்ளது. தன் வெளிநாட்டுச் செலாவணி பெருமளவில் கோப்பியிலேயே தங்கியிருப்பதனுல் நியாயமான விலைகள் பெற வேண்டுமென்ற அவாவில் கொலம்பியா எடுத்த இத்தீர்மானம் முன்னெப்போதும் நிகழாத தொன்ருகும்.

18 ஐரோப்பிய வர்த்தகத்தில், டொயிஷ் மார்க், யென் நாணயங்களோடு ஒப்பிடுகையில் அமெரிக்க டாலர் வரலாற்றில் முதன் முதலாக மிகக் குறைந்த பெறுமதியையடைந்தது.

19 இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பருத்தித் துணி வகைகளுக்கும், கைத்தறி உற்பத்திப் பொருட்களுக்கும் ஐரோப்பியப் பொருளாதார ஒன்றியம் தடைவிதித்தது குறித்து, இந்தியா, வர்த்தக சுங்கத் தீர்வைகளுக்கான பொது உடன்பாட்டுக் குழுவின் (GTTA) துணிவகைகள் பாதுகாப்புப் பிரிவு நிறுவனத்திடம் முறையீடு செய்துள்ளதாக வர்த்தக அமைச்சர் மோகன் தாரியா ராஜ்ய சபையில் தெரிவித்தார்.

21 ஸ்ரீலங்காவின் தேசிய அரசுப் பேரவைக்கான உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக நடைபெற்ற எட்டாவது பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி 139 தொகுதிகளைப் பெற்று மிகக் கூடிய பெரும்பான்மையுடன் வெற்றியீட்டியது.

23 இருபது பேரைக் கொண்ட புதிய அமைச்சரவை சத்தியப் பிரமாணம் செய்துகொண்டது.

25 முதலாவது அலுவல் தினத்தில் தத்தமது காரியாலயங்களுக்குச் சென்ற அமைச்சர்கள், அரசியல் வேறுபாடுகளை மறந்து கடின உழைப்பில் ஈடுபடுமாறு சகல ஊழியர்களுக்கும் வேண்டுகோள் விடுத்தனர்.

26 புதிய தரகர் நிறுவனத்திடம் ஒப்படைக்கிருந்த தேயிலையை மீளப்பெற்று ஏனைய ஐந்து தரகர் நிறுவனங்களுக்கும் வழங்குமாறு பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சர் தேயிலைச் சபை மூலமாக ஜனவசமாவுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கியுள்ளார்.

27 அரசாங்கம் அதன் முதல் "சுதந்திர வர்த்தக வலயத்தை" கட்டுநாயக்காவில் அமைக்குமென்றும், திருகோணமலையில் இரண்டாவது வலயம் நிறுவுவது பற்றிக் கவனஞ் செலுத்தப்படுமென்றும் மாநாடொன்றில் நிதியமைச்சர் தெரிவித்தார்.

நெதர்லாந்து அரசாங்கம் ஸ்ரீலங்கா அரசுக்கு 20.5 கோடி ரூபா நிதியுதவியளிக்குமெனத் திட்டமிடல் பொருளாதார அலுவல்கள் அமைச்சருக்கு அறிவித்துள்ளது. இவ்வுதவியில் 18 கோடி ரூபா பசளைகள், களைகொல்லிகள், இயந்திரச் உதிரிப்பாகங்கள், கிழங்கு விதைகள் போன்ற வகையால் வழங்கப்படுமென அமைச்சின் வெளிநாட்டு வளப்பிரிவு அறிவித்தது.

28 உலகின் ஐந்து பிரதான கோதுமை ஏற்றுமதி நாடுகளின் கையிருப்பு 5.6 கோடி தொன்களாக இருக்கின்றதென வும், இது கடந்த வருடத்தை விட 50 சதவீதம் அதிகமாகுமென்றும் நம்பத்தகுந்த மேற்கத்திய கணிப்பீடுகள் சுட்டிக்காட்டுவதாக சென்னை 'ஹிந்து' குறிப்பிட்டது.

29 காபியா, தசாலியா போன்ற இடங்களில் எட்டு உப நிலையங்களை நிறுவுவதற்காக, எகிப்திய கிராமிய மின்மயமாக்கல் நிறுவனத்துக்கு ருமேனியா, 2 கோடி டாலர் கடன் வழங்குமென 'மத்திய கிழக்குப் பொருளாதார மஞ்சரி' தெரிவித்தது.


உலகின் மிகப் பெரிய எண்ணெய் உற்பத்தி நாடான சோவியத் யூனியன் 1976 ல் அதற்கு முன்னைய வருடத்தை விட 14 சதவீதம் அதிக எண்ணெய்யையும், எண்ணெய் உற்பத்திப் பொருட்களையும் ஏற்றுமதி செய்தது. இவ்வேற்றுமதிகளின் மிகப் பெரும்பாகம் மேற்கத்தைய கைத்தொழில் நாடுகளுக்கே சென்றது. ஐரோப்பிய பொருளாதார ஒன்றியத்துக்கான ஏற்றுமதி 42 சதவீதமாக இருந்தது என பிரித்தானியாவின் பினான்சியல் டைம்ஸ் குறிப்பிட்டது.

30 மேற்கத்திய கம்பனிகளின் மூலமாகவன்றி நேரடியாக எண்ணெய்யை விற்பனை செய்ய வேண்டுமென்ற ஈரானின் தீர்மானம் சோவியத் நாட்டில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. சோவியத் யூனியன் முதன் முதலாக வாங்கும் 10 லட்சம் தொன் சுத்திகரிக்கப்படாத எண்ணெய் கருங்கடல் கரையிலுள்ள ஆலைகளுக்கு எடுத்துச் செல்லப்படுமென பிரித்தானிய 'கார்டியன்' தெரிவித்தது.

ருமேனியாவில் பன்றிஇறைச்சி உற்பத்தியை அதிகரிப்பதற்கும், தொழிற்சாலைகளை நிறுவுவதற்கும் 7.1 கோடி டாலர் கடன் வழங்கப் போவதாக உலக வங்கி அறிவித்தது. பன்றிப்பண்ணைகளை நவீன மயமாக்கல், இறைச்சி பதனிடலைத் துரிதமாக்கல் போன்ற வேலைகளுக்கு இக்கடன் பயன்படுத்தப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாரம்பரிய முறையில் மீன்பிடித்தல்

மாந்தறைக் கருகாமையிலிருக்கும் பரவைக் கடலில் மீன் பிடிப்பதற்கென நடப்பட்டிருக்கும் கழிகளில் குந்தி தூண்டி விடும் மீனவர்கள்

# மீன் வளங்கள்

## பயன்படுத்தப்பட்டவையும் பயன்படுத்தப்படாதவையும்

1950 ஐ அடுத்த ஆண்டுகளில, இலங்கையின் அபிவிருத்திக்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்ட போது கைத்தொழில், விவசாயத் துறைகளின் முன்னேற்றம், தொழில் நுட்பத் துறையின் அபிவிருத்தி என்பனவற்றுடன் ஒப்பிடுகையில், மீன்பிடித் துறையானது மிக இலகுவான ஒரு காரியமாகவே, திட்டமிடல் நிபுணர்களுக்குத் தென்பட்டது. ஆனால், உண்மையில், நாட்டை எதிர் நோக்கிய ஏனைய பிரச்சினைகளுடன் ஒப்பிடுகையில், இது கடினமான ஒன்றாகவே இருந்தது. முழுமையான அபிவிருத்திக்கு நவீனமயமாக்கல் அவசியமாகும். மீன்பிடித் துறையின் உலகளாவிய முக்கியத்துவத்தின் தளத்தில் நின்று கண்ணோட்டமிடும்போது பாரம்பரியத் தொழில்துறை அடிப்படையிலிருந்து அதனை ஒரு நவீன துறையாக மாற்றியமைக்க இலங்கை மேற்கொண்ட முயற்சிகள் முக்கியத்துவம் பெறுகின்றன.

கடல் வளங்களைப் பயன்படுத்தும் நடவடிக்கைகள் ஐம்பதுக்களின் நடுப்பகுதி முதல் பாரிய அடிப்படையில் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன; இது ஓர் இலவச வளமாகவே காணப்படுவதால், பல்வேறு நாடுகளும் இதனைப் பெற்றுக்கொள்ள முனைகின்றன. இவ்வகையில் போட்டியடிப்படையிலமைந்த ஒரு மிகப் பெரும் சர்வதேச வர்த்தக நடவடிக்கையாக இதனைக் கொள்ளலாம். சுறுமீன் பிடித்தலைத் தவிர, 19 ம் நூற்றாண்டு வரை மீன் பிடித்தலானது உலகெங்கும் பாரம்பரிய அடிப்படையிலேயே — அதாவது, சொந்தப் பாவனைக்கான கரையோர மீன்பிடித் தொழிலாகவே — காணப்பட்டது. கைத்தொழில் மயமாக்கம் இத் தொழில் துறையில் இருமுக மாற்றத்தைக் கொணர்ந்தது. தொழில் நுட்ப ரீதியாக இயந்திரம் பொருத்தப்பட்ட வள்ளங்களும் படகுகளும் பாவனைக்கு வந்தமையின் மூலம் இத் தொழில் துறையின் பரப்பை விஸ்தரிக்க உதவிய அதே வேளை, குளிரூட்டல் வசதிகள் கண்டுபிடிக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டமையானது, படகுகள் ஆழ் கடலுக்குச் சென்று மூன்று நான்கு வாரங்கள் வரை தங்கி மீன்பிடிக்கக் கூடிய வசதிகளை ஏற்படுத்தின. இரண்டாவதாக, அது பாரம்பரிய மீன்பிடித் துறையிலிருந்து முற்றிலும் மாறுபட்ட — நவீனமானதும், பேரளவிலான வர்த்தக அடிப்படையிலமைந்ததுமான— மீன்பிடித் துறையை அறிமுகப்படுத்துதிற்று. கைத்தொழில் மயமாக்கத்தின் துணைகொண்டு, மேற்கத்திய நாடுகளே முதலில் தங்கள் மீன் பிடித் துறையை நவீனமய மாக்கின. இத்துறையில் முன்னோடியாகத் திகழ்ந்த பிரிட்டனைப் பின்பற்றி, ஐக்கிய அமெரிக்கா, கனடா, நோர்வே, டென்மார்க், போர்த்துக்கல், பிரான்ஸ் ஆகிய நாடுகளும் தங்கள் மீன்பிடித்துறையை இலாபகரமானதாக்கிக் கொண்டன. பின்னர் ஜப்பானும் தன் மீன்பிடித் தொழிலை இயந்திர மயமாக்கிக் கொண்டது. இதன் விளைவாக, பல நூற்றுண்டு காலமாக அதிகரிப்புக்கள் எவையுமின்றிக் காணப்பட்ட உலக மீன்பிடியானது, 1850 க்கும் 1950 க்கும் இடையே பத்து மடங்காக அதிகரித்தது.


சமுத்திரங்களில் காணப்படும் மீன் வளமும் மீன் உற்பத்தித் துறையில் இம் மேற்கத்தியக் கைத்தொழில் நாடுகளுக்குச் சாதகமாகவே இருந்தது. உலகின பிரதான மீன்பிடித்தளங்கள் இடைவெப்ப அகலக் கோட்டுப் பகுதிகளிலேயே காணப்படுகின்றன.

புவியின் 71 சதவீதமான பகுதி கடலாற் சூழப்பட்டிருந்தாலும், கடல் வாழ் உயிரினங்களில் 90 சதவீதமானவை, கண்டத் திட்டுக்கள் காணப்படும் பகுதிகளிலேயே உள்ளன. இன்று ஆழமற்ற கடற்பகுதிகளாகும். இப் பகுதிகளிலேயே மீன்களுக்கான புரதம் மிக்க உணவுகள் அதிகம் காணப்படுகின்றன. இக் கண்டத் திட்டுகளின் ஆழமற்ற தன்மை காரணமாகச் சூரிய ஒளி கடலடி வரை பாய்வதால், மீன்களுக்குகந்த கடற் தாவரங்கள் பெருமளவில் இங்கு வளர்கின்றன. இதே போன்று, ''பைற்ரோ - பிளாக்டன்'', ''டயாற்ரோம்'' போன்ற மீன் உணவுகளும் இங்கு பல்கிப் பெருகுகின்றன. இக் கண்டத் திட்டுக்களை அண்டிக் காணப்படும் குளிர், வெப்ப நீரோட்டங்களும் இதற்குக் காரணமாக அமைகின்றன. இவற்றின் காரணமாகவே இன்று வட, தென் அமெரிக்காக் களின் மேற்குக் கரையோரங்கள், வட அத்திலாந்திக் சமுத்திரத்தின் ஐரோப்பாக் கண்டம் சார் பகுதிகள், போர்த்துக்கல், ஜப்பான், நியு பவுண்லாந்து ஆகிய நாடுகளை அண்டிய கடற் பகுதிகள் இன்று உலகின் அதி முக்கிய மீன்பிடிப் பிரதேசங்களாக விளங்குகின்றன.

அயனப் பகுதிக் கடல்களில் பல்லாயிரக் கணக்கான இன மீன்கள் காணப்படுவது யாவருமறிந்ததே; ஆனல், உயரகலக் கோட்டுப் பகுதிக் கடல்களிற் காணப்படுவது போன்ற பெருந்தொகையில் இவற்றுள் ஓரினமாவது இல்லை. வட அத்திலாந்திக்கின் 'கொட்', அமெரிக்கக் கடற்கரைக் கப்பாற் காணப்படும் 'சாடின்', 'சமன்', பெரு நாட்டின் கரையோரத்துக்கப்பால் காணப்படும் ''அங்கொவி'' எனபன இவற்றுட் குறிப்பிடத்தக்கன.

1850 க்கும் 1950 க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் உலக மீன்பிடி 10 மடங்காக அதிகரித்தது என்று கூறினலும், 2 ம் உலக யுத்தத்தின் பின்னரே, இத்துறையில் மிகப் பெருமளவிலானஅதிகரிப்புக் காணப்பட்டது. 1951 ல் 21 மில்லியன் மெற்றிக் தொன் மீன் பிடிக்கப்பட்டது. இக்கால கட்டத்தில் ஐரோப்பாவிலும், ஐரோப்பாவுக்கு வெளியேயும் ஏராளமான நாடுகள் தங்களது மீன்பிடிக் கப்பல்களைக் கட்டுவதில் போட்டி போட்டுக் கொண்டு ஈடுபட்டன. பாவித்த மீன்பிடிக் கப்பல்களைக் கூட இன்னெரு நாட்டுக்கு விற்கக் கூடாதெனச் சட்டம் மூலம் தடை விதிக்கப்பட்டதிலிருந்து, இப்போட்டி எவ்வளவு மும்முரமாகக் காணப்பட்டதென்பதனை அறியலாம். 1970 ல் உலக மீன்பிடி 70 மில்லியன் மெற்றிக் தொன்னை எட்டியது; இதன் பெறுமதி சுமார் 1800 கோடி டொலராக இருந்தது; அத்துடன் மீன்பிடித்தல் உலகின் இரண்டாவது மிகப் பெறுமதி வாய்ந்த கடற்பாவனையாக மாறியது. (முதலாவதாக கடற் போக்குவரத்தும், மூன்ருவதாக, கடலடி எண்ணெய், வாயு அகழ்வு நடவடிக்கைகளும் காணப்பட்டன.)

உலகில் பிடிக்கப்படும் மீன்களுள் 90 சதவீதமானவை சாதாரண மீன்களாகவும், ஏனையவை சுறு போன்ற துடுப்பு இல்லாத மீன்களாகவும் காணப்படுகின்றன. பீலியுள்ள மீனினங்களுள் CLUPLOIDS குடும்பத்தைச்



**சம்புட வலை**

பழைய முறையிலான சம்புட வலையின் இழுவைக்கோல் முறையில் இவ்வலை இயங்குகின்றது. படகு தூறு போன்ற மீன் கூட்டமொன்றை வளைத்து வந்து தான் போகும் பாதையில் வலையைப் போட்டுச் செல்லும். வலையின் மறு கோடியைப் பிடித்திருக்கும் சிறு வலைப்படகு இதற்கு உதவிவரும். மீன் கூட்டம் சுற்றி வளைக்கப்பட்டதும் பெரிய கப்பலின் பாய் மரத்தோடு பிணைக்கப்பட்டுள்ள கப்பி மூலம் வலையின் கீழ்ப்பகுதி உயர்த்தப்படுகின்றது. இவ்வாறு உயர்த்தப்படுகையில் மீன்கள் தப்பிச் செல்ல முடிவதில்லை. இப்படி அகப்பட்டுக் கொண்ட மீன்களில் பெரிய மீன்களை உள்ளே இறக்கப்படும் சிறிய வலையொன்று கோலிக் கொள்ள சிறிய மீன்கள் உறிஞ்சு குழாய் மூலம் மேலிழுக்கப்படுகின்றன.

சார்ந்த ஹெரிங், பில்சார்ட் அங்கொவி முதலியன உட்பட கடலின் மேற்பகுதியில் வாழும் வேறு சில சிறிய இன மீன்கள் 45 சதவீதமாகக் காணப்படுகின்றன; சமுத்திர நீரோட்டங்களை அண்டிக் காணப்படும் ''கொட்'', 'ஹெடொக்', 'ஹேக்' என்பன இன்னெரு குடும்பத்தைச் சார்ந்தனவாகும். இவை — 'கேடொய்ட்ஸ்' குடும்பத்தைச் சார்ந்தன — 25 சதவீதமாகவும், கடல் அடியில் வாழும் பிளாண்டர், சோல், மலட் முதலியன 15 சதவீதமாகவும் காணப்படுகின்றன. டியூனு, மெக்கரல் என்ற மீனினங்கள் இவற்றுள் 7 சத வீதமாகக் காணப்படுகின்றன.


மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ள நாடுகளிடையே பிணக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் அடிக்கடி ஏற்படுவது வழக்கம்.

தனது கடல் எல்லையை 3 மைலிலிருந்து படிப்படியாக 200 மைலாக அதிகரித்ததன் மூலம், ஐஸ்லாந்து, பிரிட்டிஷ் மீனவர்கள் தனது கடற் பிராந்தியத்தில் மீன் பிடித்தலைத் தடை செய்து விட்டது. பிரிட்டனில் தாங்கள் பிடிக்கும் மீனின் விலையைக் குறைக்கும் என்பதற்காக நோர்வே நாட்டு மீன் இறக்குமதிக் கெதிராகப் போராடி வெற்றிகண்டனர் பிரிட்



இழுவை வலை

சகல வர்த்தக வலைகளிலும் பொதுவானதொன்று இழுவை மீன் பிடி வலையாகும். உஷ்ண வலயக் கடல்களின் அடித்தளத்திலிருக்கும் மீன்களை இது கோலி வரும். இவ்வலை நிலத்தோடு அழுந்தி வருகையில் இரு பெரிய இரும்புத் தூண்டுகள் பூட்டிய கழிகள் இவ்வலையை மடங்காது விரித்து வைத்துக் கொள்ளும் அதே வேளையில், கீழ்த்தாம்பு நன்ருக அடி மணலைக் கிண்றி மீன்களை விரட்டி வலையின் கூம்பு பொறிப்பகுதிக்குள் செலுத்தும். போதியளவு மீன்கள் அகப்படும் வரை இவ்வலை நீருக்குள் விட்டு வைக்கப்பட்டு பின்னர் (400-500 பாகம் வரை ஆழத்திலிருந்து) இவை மேலே தூக்கப்படும்.

டிஷ் மீனவர்கள். இதே போன்று, அமெரிக்கக் கடற் பகுதிகளில் ரஷ்யர்கள் மீன் பிடிப்பதை அமெரிக்க மீனவர்கள் எதிர்த்தனர்; இவை போன்ற பல பிணக்குகள் முன்னர் காணப்பட்டன; தற்போதும் காணப்படுகின்றன. கடற்கரையோர நாடுகள் எல்லாமே மீன்பிடித் தொழிலில் ஈடுபடுகின்றன என்ருலும், உலக மீன்பிடியில் மூன்றில் இரு பங்கை 15 நாடுகளே பிடிக்கின்றன. பெருமளவு மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் முதல் 5 நாடுகளின் வரிசையில், சீஞ மாத்திரமே தனது சொந்தக் கடற் பிராந்தியத்தில் மீன் பிடிக்கும் ஒரே நாடாகும்; எனினும், உலகில் மூன்ருவது இடத்தை இது பெறுகிறதென்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன், சிங்கிறுல், நண்டுகள், கூனி இறுல் போன்றன இங்கு பெருமளவிற் பிடிக்கப்படுவதால், உலகின் மிகப் பெறுமதி வாய்ந்த மீன் இனங்கள் சீஞவில் பிடிக்கப்படுகின்றன என்பது கவனிக்கத்தக்கது.

இன்றைய வர்த்தக ரீதியான மீன்பிடித் தொழிலில் உபயோகிக்கப்படும், மீன்பிடித் தொழில் நுட்பங்கள், மிகவும் முன்னேற்றகரமானதாயும், முதலீட்டுச் செறிவு மிக்கனவாயும் உள்ளன. மீன் கூட்டங்களை அடையாளம் காண ஹெலிகொப்டர்களை உபயோகித்தல், மீன்களின் எண்ணிக்கையைத் தூரத்தில் வைத்தே கணிக்க உதவும் கருவிகள், மீன்களைக் கவர்ந்திருக்க ரஷயா கண்டுபிடித்துள்ள மிக நவீன கருவிகள், என்பன இவற்றுட் சிலவாகும்; இதே போன்று மீனைப் பதப்படுத்தும் பெரும் தொழிற் சாலைகளைக் கொண்ட பாரிய இழுவைப் படகுகள், பல்லாயிரம் மைல் தூரம் சென்று நீண்ட காலம் (சுமார் 6 மாதம் வரை) நின்று சுமார் 50,000 தொன் மீனைக் கூடப் பதப்படுத்தும் வசதிகள் கொண்ட ஆலைகளைக் கொண்ட கப்பல்கள் என்பனவும் இன்று பாவிக்கப்படுகின்றன.

நவீன தொழில் நுட்பப் பாவனையிலும், உபகரணங்களைக் கண்டு பிடித்தலிலும் பெருமளவு பணத்தைச் செலவிடுவதிலிருந்தும் இத் துறையில் ஏராளமான நிபுணர்களைப் பயன்படுத்துவதாலும், விரைவில், உலகின் அதிக தொகை மீனைப் பிடிக்கும் நாடாக ரஷ்யா மாறிவிடுமென எதிர்பார்க்கப்படுகிறது; இன்று இந்த இடத்தை ஜப்பான் பெற்றுள்ளது. ஏனைய நாடுகளில் மீன்பிடி வர்த்தகத்தின் மூலமான வருமானம் மிகவும் குறைவாகவிருக்கும் அதே வேளை, ரஷ்யாவில் இது கூடிய வருமானம் தரும் வர்த்தகத் துறைகளுள் இது நாலாவது இடத்தைப் பெறுகிறது.

கைத்தொழில் துறைக்குப் பயன்படும் மீன்களைப் பிடிப்பவர்களுக்கும், கப்பற் சொந்தக்காரர்களுக்கும் குறைந்த வருமானமே கிட்டுகிறது; ஆனுல், அவற்றைப் பதப்படுத்தும் தொழிலில் ஈடுபடுபவர்கள் பெரும் இலாபத்தை ஈட்டுகின்றனர். உணவுக்கான மீன்களைப் பதப்படுத்தலிலும் இதே அம்சமே காணப்படுகிறது. மீன் வர்த்தகத் துறையில், சீரின்மையைக் காட்டுகிறது.

மீன் பதப்படுத்தலில் பெரும் சர்வதேசக் கம்பெனிகளே ஈடுபடுகின்றன. இவை தமக்குச் சொந்தமான கப்பற் தொகுதிகளையும் கொண்டுள்ளன. 1977 ல் ஐக்கிய அமெரிக்காவில் நுகரப்பட்ட மீன்களுள் மூன்றில் இரு பங்கு இறக்குமதி செய்யப்பட்டதாகும்; இது மீன்பிடித்துறை வர்த்தகத்தில் 150 கோடி டொலர் பற்ருக்குறையை ஏற்படுத்தியது. 1960 ஐத் தொடர்ந்த காலத்தில் பல அமெரிக்க மீனவர்கள், தங்கள் தொழிலைக் கைவிட்டனர்; ஆனுல், இதே காலத்தில் அமெரிக்கப் பெருஞ் சந்தைகளில் பெருந்தொகையில் விற்பனையாகும் ஒரு பண்டமாக மீன் மாறியது. புள்ளி விவரங்களின்படி, மீன்பிடியின் மூலம் ஐக்கிய அமெரிக்க மீனவர் 89 கோடி டொலரை வருமானமாகப் பெற்றனர்; ஆனுல், மொத்த விற்பனைச் சந்தையில் இத் தொகையின் பெறுமதி 200 கோடி டொலராகவும், சில்லறைச் சந்தையில் 300 கோடி டொலராகவும் உயர்ந்தது.

கால்நடைப் புரதச் சத்தின் முக்கிய ஒரு மூலமாக மீன் திகழ்கிறது. கல்சியம், பொஸ்பொஸ், பொட்டாசியம், மெக்னீசியம், இரும்புச் சத்து முதலிய உயர் வாழ அத்தியாவசியமான கனிப் பொருட் சத்துக்களையும் அது கொண்டுள்ளது. அத்துடன் விட்டமின் ஏ. டீ. என்பனவற்றைத் தாராளமாகக் கொண்டுள்ள மீனில் இறைச்சியை விடக் காணப்படும் இன்னெரு நன்மை யாதெனில், உடலுக்குத் தேவையான கலோரி எல்லையை உரிய அளவிற் கொண்டுள்ளதாகும். அதை உண்ணும் ஓர் இருத்தல் கால்நடையை உருவாக்க, 10 இருத்தல் உணவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவைப்படுகிறது; இதே போன்று, 100 இரு. ஹெரிங் மீனை உருவாக்க 10,000 இரு. டயாட்டொம் மீன் உணவு தேவை; இதன் மூலம் 10 இரு. மெக்கரல் மீனையும், அதன் மூலம் 1 இரு. டியுனு மீனையும், அதனை மூலம் மனித நிறையில் 11/0 ஐயும் உருவாக்கலாம்.

முற்று முழுதாக இலாப நோக்குடன் இயங்கும் உலக மீன்பிடித் தொழிலின் ஏற்றுக் கொள்ள முடியாத ஓரம்சமாக இருப்பது, பிடிக்கப்படும் மீனில் ஒரு சிறு பங்கே மனித நுகர்வுக்குப் பயன்படுத்தப்படுவதாகும். பெருந்தொகையான மீன் இன்று, கால்நடை, கோழி, பன்றி முதலியவற்றுக்கான புரதமிக்க ஆகாரமாகவும், பசளை, மீன், மாவு, எண்ணெய் வகைகள், சவர்க்காரம் என்பன செய்யவும் பயன்படுகிறது. 2 ம் உலக யுத்தத்திற்கு முன்னர் 10 சத மீனே இங்ஙனம் பயன்படுத்தப்பட்டது; இத்தொகை 1967 ல் 50 சதவீதமாக அதிகரித்தது. இன்று உலகில் பிடிக்கப்படும் மீன் முழுதும் மனித நுகர்வுக்கே பயன்படுத்தப்படுமாயின், ஒரு பிள்ளைக்கு வருடாந்தம் 8 டெரலா வீதம், உலகச் சிறார்களின் புரதச் சத்துணவுத் தேவையில் மிக முக்கிய ஒரு பங்கை நிறைவு செய்யும்.

கடந்த இருபதாண்டுகளில் மீன்பிடி நடவடிக்கைகளில், வளர்முக நாடுகள் காட்டும் அக்கறை அதிகரித்து வருவது ஊக்கம் தரும் ஓர் அம்சமாகக் காணப்படுகிறது; இவற்றுட் பல இன்று தன்னிறைவுப் பாதையில் அடி எடுத்து வைத்துள்ளன; அண்மைக் காலம் வரை பல ஆபிரிக்கக் கரையோர நாடுகள் கூடத் தங்களுக்குத் தேவையான மீனை இறக்குமதி செய்தே வந்தன. மீன் வளமிக்க கடற் பிராந்தியம் இருந்தும், நைஜீரியா தனது கடலுணவுத் தேவைகளை நோர்வேயிலிருந்து இறக்குமதி செய்து வந்தது; கியூபா தனது கரும்புச் சீனித் தொழிலில் கவனம் செலுத்தியதே ஒழிய மீன்பிடித் தொழிலை அபிவிருத்தி செய்வதில் அக்கறை காட்டவில்லை. 10 வருடங்களுக்கு முன்னர், ஆக 14 நாடுகளைத் தவிர, ஏனையன அனைத்தும் 3 முதல் 12 மைல் தூரக் கடற் பிராந்தியத்தையே கொண்டிருந்தன. இன்று, இவற்றுட் பெரும்பாலானவை தமது எல்லையை 200 மைல்கள் தூரம் வரை அதிகரித்து விட்டன. 1957 க்கும் 67 க்கும் இடைப்பட்ட காலத்தில் உலகச் சந்தையில் விற்பனையான மீன் தொகை இருமடங்காக அதிகரித்தது; அத்துடன், இவ் வர்த்தகத்தில் வளர்முக நாடுகளின் பங்கும்15 சதவீதத்திலிருந்து 25 சதவீதமாக அதிகரித்தது. துரதிர்ஷ்ட வசமாக, இவற்றின் வர்த்தகம், தாம் பிடிக்கும் கடலுணவுகளை வட அமெரிக்காக, ஐரோப்பா, ஜப்பான் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அங்கிருந்து கைத்தொழில் உற்பத்திப் பொருட்களைப் பெற்றுக் கொள்வதாகவே அமைந்தது; இது, அபிவிருத்தி யடைந்த நாடுகளுக்கு மிகச் சாதகமானதாக அமைந்தது.

அதன் புவியியல் நிலைமைகளின் மூலம், கிட்டும் சாத்தியங்களைப் பயன்படுத்திப் பெருந்தொகை மீனை அரசாங்கத்தின் உதவியின் கீழ் பிடிக்க இன்று இலங்கை முயல்கிறது; இவ்வகையில் இலங்கை ஒரு குறைவிருத்தி நாடாகவே உள்ளது; பாரம்பரிய மீன்பிடி முறைகளிலிருந்து நவீன முறைகளுக்கு மாறி, பாரிய வர்த்தக அடிப்படையிலமைந்த ஒன்றாக இத் தொழிலை மாற்றியமைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆனால், இத்துறையை எதிர்நோக்கும் சில பிரச்சினைகள், இதில் பூரண வெற்றியைத் தரவில்லை. தேவையான மாற்றங்களைத் தரவல்ல வகையில், இத்துறை உருவாக்கி எடுப்பதற்குப் பின்வரும் காரணிகள் பற்றிய விளக்கமின்மை தடைகளாகவுள்ளன:

(அ) பாரம்பரிய மீனவர்களது சமூக-பொருளாதார அமைப்பு பற்றி விளங்கல்;

(ஆ) இது தொடர்பாக ஆக்கப்பட்ட பல தேசியத் திட்டங்களில் குறிக்கப்பட்டுள்ள இலக்குகளை அல்லது நோக்கங்களை இனங் காணல்;

(இ) இவற்றை எய்துவது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளை ஆராய்தல்.

### பாரம்பரிய மீன்பிடி

அனுராதபுர பொலநறுவைக் காலங்களில் நிலவிய அரசாங்கங்களைத் தொடர்ந்து மத்திய மலைநாட்டில் கண்டிய அரசும், கரையோரங்களில் வெளிநாட்டு ஆதிக்கமும் தோன்றியதுடன், இலங்கை மக்களின் முக்கிய புரத உணவுப் பொருளாக மீன் இருந்து வந்துள்ளது. கண்டிப் பகுதியில் கருவாடாக இருந்து வரப்பட்டது. கரையோரப் பகுதிகளில் காணப்பட்ட சமூக அமைப்புக்களின் கீழ் புத்தளம் முதல் அம்பாந்தோட்டை வரை காணப்பட்ட பல கிராமங்களில் வாழ்ந்த 'கராவ' இன மக்களே மீனை விநியோகிப்பவர்களாக இருந்தனர்.

வடக்கே தனியானதொரு மீன்பிடித்துறை இயங்கி வந்தது. இதே போன்று கிழக்கிலும் சில மீன்பிடி கிராமங்கள் காணப்பட்டன. எனினும் எத்தகைய நவீன மீன்பிடி முறைகளோ உபகரணங்களோ காணப்படாதமையின் பிடிக்கப்படும் மீன் உள்ளூர் கிராமங்களிலேயே நுகரப்பட்டது. இத்தொழில் அன்றாட வாழ்க்கைக்கான ஒன்றாகவே காணப்பட்டதால் இதில் எதுவித குறிப்பிடத்தக்க லயநோக்கமும் இருக்கவில்லை. இத் தொழிலின் அபிவிருத்தியில் காணப்பட்ட இன்னொரு தடையாதெனில் பருவப் பெயர்ச்சிக் காற்றுகளின் செல்வாக்கின் காரணமாக அது ஒரு பருவ கால தொழிலாக காணப்பட்டதாகும்.

பாவிக்கப்பட்ட தொழில் நுட்பம் மிகவும் பழமையான ஒன்றாகக் காணப்பட்டது. இந்து சமுத்திரம், வங்காள விரிகுடா, அரபுக் கடல் முதலிய மீன் வளமிக்கக் கடற் பகுதிகளாற் சூழப்பட்டுள்ளதாக இலங்கை காணப்பட்டாலும், அக்காலை பாவிக்கப்பட்டு வந்த மரப்பலகைகளிலாலான சிறு வள்ளங்கள் போதிய மீன்களைப் பிடிக்க எவ்வகையிலும் உதவவில்லை; அத்துடன் அக்கலாத்தில் எமக்கு இத்துறையிலான கடற்துறைப் பாரம்பரியமும் இருக்கவில்லை. வட பகுதியில் தவிர, நாட்டின் ஏனைய பகுதியைச் சுற்றிக் காணப்படும், கண்டத் திட்டும் மிகக் குறுகிய ஒன்றாக, அகலத்தில் 15 மைலுக்கும் குறைந்த ஒன்றாகவே இருக்கிறது; எனவே, பாரம்பரிய மீனவர்கள் தமது நடவடிக்கைகளைக் கண்டத் திட்டுப் பகுதிகளிலேயே மேற்கொண்டதுடன், தமது மீன்பிடி உபகரணங்கள் வள்ளங்களையும் சூழலுக்கேற்ப அமைத்துக் கொண்டனர். தென் மேற்குக் கரையோரப் பகுதிகளில் பலா அல்லது ஈரப்பலா மரங்களிலாலான குல்லாக்கள் (''ஒறு'') விரும்பப்பட்டன. பாரை, ''தம்புவ'', ''மலட்'', ''கொஸ்ஸ'', ''படான்'' போன்ற நல்ல கிராக்கியுள்ள மீன்கள் இவற்றின் மூலம் பிடிக்கப்பட்டன. யாழ்ப்பாணப் பகுதிகளில் வள்ளங்கள் முக்கிய மீன்பிடி கருவியாக விளங்கின; அத்துடன் இங்கு 'படகு' என்ற பெயரில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைக்கப்பட்ட பெரு வள்ளங்கள் (சுமார் 45 அடி நீளமானவை) மீன்பிடிக்கப் பயன்பட்டன. குடா நாட்டைச் சூழவுள்ள ஆழமற்ற கடற் பகுதிகளில் மீன் பிடிக்கப்பட்ட ''கட்டுமரங்கள்'' பயன்படுத்தப்பட்டன. இந்தியாவின் சோழமண்டலக் கரைகளில் பாவிக்கப்படுவனவற்றைப் பின்பற்றி, சில மரக் கட்டைகளை ஒன்றிணைத்து இவை அமைக்கப்பட்டன. இதனை அமைக்கவும், பராமரிக்கவும் மிகவும் சிறிய ஒரு தொகையே செலவாயிற்று. கடற் பயணத்தின் பின்னர் இம் மரக் கட்டைகள் அவிழ்க்கப்பட்டுக் கரைகளில் காயவிடப்படும்; இக் கட்டுமரங்களின் சிறிய அமைப்பே ''தெப்பம்'' ஆகும்.

இவை இயந்திரங்கள் எதுவும் பொருத்தப்படாதிருந்தாலும் கூட, இவை குறிப்பாகக் கட்டுமரம் திறமைமிக்க தொழில் நுட்பத்தைக் கொண்டிருந்ததாக ''கராவ'' இன மக்கள் பற்றி 1961 ல் மதிப்பீடொன்றை மேற்கொண்ட எம். டி. ராகவன் கூறுகிறார்.

தென் மேற்குக் கரையோரப் பகுதிகளில், பெருங் கூட்டமாக வரும் மீன்களைப் பிடிக்கவென, ''கரை வலை'' (''மா - தெல்'') முறை பின்பற்றப்படுகிறது. சுமார் 10 முதல் 15 அடி நீளமான பையைக் வலையின் அடிப்பாகத்திற் கொண்டுள்ள இக் கரை வலை மூலம் 1½ தொன் முதல் 2 தொன் மீன்களைப் பிடிக்கலாம். வலையின் மேற்புறக் கண்கள் சிறிது பெரிதானவையாயும், பையை நெருங்க நெருங்க சிறிதானவையாயும் காணப்படுகின்றன. சிறியதும் பெரியதுமான பல்வேறு அளவிலான மீன்கள் இதன் மூலம் பிடிக்கலாம்; ஹெரிங், மெக்கரல், டியூனா, சார்டின் முதலியன இதன் மூலம் பிடிக்கப்படுகின்றன.

உள்நாட்டு மீன்பிடித் தொழிலானது அதற்கேயுரிய தனித்தான சில பண்புகளையும் பாரம்பரியங்களையும் கொண்டு காணப்படுகிறது. கரைவலை மீன்பிடி, மக்கட் கூட்டுறவை விளக்கும் ஒன்றாகத் திகழ்கிறது. இதில் ஒரு மீனவர் ஆக 15 முதல் 25 ரூபாவுக்கு ஒரு பங்கை வாங்கிக் கொள்ளலாம். சிக்கல்மிக்க ஒரு தொழிலுக்கான ஆரம்ப ஊக்கத்தை இத் தொழில் ஒரு சிறுவனுக்கு வழங்குவதுடன் மீன்பிடித் துறையில் முற்று முழுதாக ஈடுபட முடியாத ஒருவருக்கு ஓரளவு வருமானத்தையும் வழங்குகிறது. இத் தொழில் புரிவோரிடையேயும் ஒரு விசேட அமைப்பு உருவாகிக் காணப்படுகிறது. இதன் சொந்தக்காரர் ''தண்டல்'' எனப்படுகிறார்; இவரே படகின் பிரதானியாவார். இவருக்கு சமயாசமய அடிப்படையில் இயங்கும் மூன்று உதவியாளர்கள் உள்ளனர். தொழில் காலத்தில் இவர்கள் எதுவித எதிர்ப்புமின்றி, தண்டலுக்குப் பணிந்து நடப்பர்; பிடிக்கப்படும் மீன் ஏலத்துக்கு விடப்பட்டு கிடைக்கும் பணம் ஐந்து பங்குகளாகப் பிரிக்கப்படுகிறது. ஒவ்வொருவருக்கும் ஒரு பங்குபோக, மீதி ஒரு பங்குப் பணம், படகின் பராமரிப்புச் செலவுக்கென, அதன் சொந்தக்காரருக்கு வழங்கப்படும்.

தென் மேற்குப் பருவப் பெயர்ச்சிக் காற்று வீசத் தொடங்கியவுடன், இப்பகுதி மீனவர்கள் கிழக்கு அல்லது வட மேற்குக் கரைகளுக்குத் தங்கள் தொழிலை மேற் கொள்ளச் செல்ல வேண்டியுள்ளது. இது பெரும் செலவை ஏற்படுத்தும் ஒன்றாகும். இவ்விடத்தில் தரகராக மீன் முதலாளி தோன்றுகிறார். பருவ காலம் தொடங்கு முன் இம் முதலாளிகள், மீனவர் கிராமங்களுக்குச் சென்று, மீனவர்களுக்கு வட்டி யெதுவுமின்றி முற்பணமாக ஒரு தொகையைச் செலுத்தி அவர்களைத் தமக்குத் தொழில் செய்யச் சேர்த்துக் கொள்கிறார். ஒரு வகையில், இது ஒரு வர்த்தக உறவாகத் திகழ்கிறது. இவர்கள் குறித்த காலத்தில், தங்களது ஊரையும், குடும்பத்தையும் விட்டு, மேற் கூறிய இடங்களிலுள்ள வாடிகளுக்குச் சென்று தங்கி, கடற்றொழிலில் ஈடுபடுகின்றனர். பிடிக்கும் மீனையும் மேற்படி முதலாளிகளுக்கே ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட ஒரு விலைக்கு வழங்குகின்றனர். வாடியில், மீனவர்களுக்குத் தேவையான செலவுகளை முதலாளியே செய்கிறார்; பருவத்தின் முடிவில் கணக்குகள் சரி செய்யப்படுகின்றன.

இம் முறையின் கீழ், மீனவர்கள் முதலாளிகளால் வெகுவாகச் சுரண்டப்படுகிறார்கள் என்பது நன்குணரப்பட்ட ஒரு பொது அபிப்பிராயமாகும்; மீனவரின் வறுமை, முதலாளிகளுக்குக் கடன்பட்டிருத்தல், தொழிலில் வளமற்ற நிலை முதலியன இதற்குக் காரணமெனக் கூறப்படுகிறது. இதில் உண்மை இருப்பினும், நிலைமைகளை ஆராய்ந்து பார்க்கையில் முழு உண்மை இருப்பதாகத் தெரியவில்லை. மீன் பிடி ஒரு கடினமான தொழிலாகும். வர்த்தகர்களே விநியோக சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருதல் உலக வழக்கமாக உள்ளது. நீர்கொழும்பு, சிலாபம் போன்ற நகரங்களில் பெண்கள் இத் தொழிலைச் செய்கின்றனர்; அல்லது பிடிக்கப்படும் மீன் ஏலத்தில் விடப்படுகிறது. நகர மக்கள் பொதுவாக, சந்தைகளில் மீனை வாங்கினாலும், உடனடியாக அதனைப் பாவனையாளர் கொள்வனவு செய்ய வழி செய்யுமுகமாக, வீடுகளுக்குச் சென்று விநியோகிக்கும் பாரம்பரிய முறையும் உண்டு. சில்லறை வியாபாரம் விசேஷமாக நகரப் பகுதிகளில் இன்னும் சைக்களில் சென்று, அல்லது நடந்து சென்று கூவி விற்கும் வியாபாரிகளிடமேயே காணப்படுகிறது. இவர்கள் மொத்த வியாபாரிகளிடமும், ஏலத்திலும் மீன்களைப் பெற்று இச் சில்லறை வர்த்தகத்திலீடுபடுகின்றன.

சொந்த ஊரிலிருந்து வேறு பகுதிகளுக்குச் சென்று மீன்பிடித் தொழிலிலீடுபடுபவர்கள் மிகவும் பின்தங்கிய கிராமங்களிலேயே தொழில் செய்கின்றனராதலின் அவர்களது சந்தைப்படுத்தல் நிலைமைகளும் வேறுபட்டதான ஒன்றாகவே உள்ளது. நவீன குளிரூட்டல் வசதியற்ற நிலையில், இப் பகுதிகளில் பிடிக்கப்படும் மீன்கள் யாவும் கொழும்புக்குக் கொண்டு வரப்படுகின்றன. இதில் ஏற்படக் கூடிய கஷ்ட நஷ்டங்களையும் கருத்திற்கொண்டு, இம் மீன் முதலாளிகள் சாதுரியமாக இவ்வேலையைச் செய்து வருகின்றனர். இவர்கள் கொழும்பு சென் ஜோன்ஸ் மார்க்கெட்டின் கமிஷன் வியாபாரிகளிடம் முற்பணத்தைப் பெற்று அவர்களுக்கே மீன் வழங்குகின்றனர். பல சந்தர்ப்பங்களில் குறித்த ஒரு பகுதி மீனவர்களே தொடர்ந்து ஒரு குறித்த முதலாளியின் கீழ் பணி புரிவதும்உண்டு; மீனவர்கள் முதலாளியிடமிருந்து முற்பணம்பெற்றுக் கொள்வதால், குறித்த ஒரு பருவத்தில் மீன் போதியளவு படாததன் காரணமாக, நட்டம் ஏற்பட்டு, மீனவர்கள் சில வேளை அம் முதலாளிக்குப் பணம் கொடுக்க வேண்டி நேரிடலாம்; இத்தகைய தருமதிகளை முதலாளி கோராது விடும் சந்தர்ப்பங்களிலும், நல்ல வருமானம் கிடைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும் காலங்களில் விசேட போனஸ் போன்ற கொடுப்பனவுகளை வழங்கும் பட்சத்திலும் குறித்த அம்முதலாளியின் கீழ் அடுத்தடுத்த வருடங்களிலும், குறித்த அம்மீனவர்கள் தொழில் செய்ய முன்வருவர். அத்துடன், மீனவர்களது திருமணம், மரணச் சடங்குகள், வைபவங்கள் போன்ற சுக துக்க நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு, முதலாளி தாராளமாகப் பண உதவிசெய்ய வேண்டுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. கஷ்டமும் நஷ்டமும் மிக்க கடற்றொழிலில் உயிரைப் பணயம் வைத்துச் செல்லும் மீனவர்களுக்கு ஒரு சமூகக் காப்புறுதியை அவசியமாக்கும் மனிதாபிமான அடிப்படையிலமைந்த ஒரு சமூக, பொருளாதார உறவே இவ்விரு பிரிவினருக்குமிடையே நிலவுகின்றதென்பது புலனாகின்றது.

**கடந்த கால் நூற்றாண்டில் மீன் பிடித் துறையிலேற்பட்டுள்ள அபிவிருத்தி**

1950 ம் ஆண்டு காலங்களில் மீனைப் பொறுத்தளவில் இலங்கை சுயதேவைப் பூர்த்தி நினைத்தும் பார்க்க முடியாத ஒரு நிலையிலிருந்தது. 1957 ல் உள்ளூர் உற்பத்தி 39,000 தொன்னாகக் காணப்பட்ட அதே வேளை, இறக்குமதி 1,06,522 தொன்னாகக் காணப்பட்டது. இவ் இறக்குமதிகளினுள் இந்தியா, பாகிஸ்தான், மாலைதீவு ஆகிய நாடுகளிலிருந்து இறக்குமதியான கருவாடு, மாசி என்பன முக்கிய இடம் பெற்றன. இரண்டு பொருளாதாரக் காரணிகள் இதற்கு ஏதுவாக இருந்தன: (1) குளிரூட்டல் வசதிகள் இன்மை காரணமாக, நாட்டின் உட்பகுதிகளில் மீனை எடுத்துச் சென்று விநியோகித்தல் முடியாதிருந்தது; இத்துடன், கிராமப் பகுதிகளின் குறைந்த தர வருமான மட்டத்திலுள்ளோர் வாராந்தச் சந்தைகளில் வாங்கக் கூடியதும் பாதுகாத்து வைப்பதில் அவ்வளவு அக்கறை செலுத்தத் தேவையில்லாததுமான கருவாட்டை வாங்கிக் கொள்வதையே விரும்பினர்; (2) 1963 ல் கூட இலங்கையின் தலா வருமானம் 490 ரூபாவாகவும், மீனவக் குடும்பமொன்றின் சராசரி வருடாந்த வருமானம் 1,720 ரூபாவாக விருந்தபோது, இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் தலா வருமானம் முறையே 325 ரூபா, 250 ரூபாவாக உள்ளன. மீனவர் குடும்பங்களின் வருமானமும் மிகக் குறைந்ததாகவே உள்ளது. இவ்வகையில், இலங்கையில் விற்பனையான வெளிநாட்டுக் கடலுணவுப் பொருட்களின் விலைகள் சார்பு ரீதியாகக் குறைவாக விருந்தமையின், நுகர்வாளர்களுக்கு இவற்றை வாங்கல் மலிவாகக் காணப்பட்டது. கற்பிட்டி, மன்னார் போன்ற சந்தையிலிருந்து மிகவும் தூரத்திலுள்ள மீன்பிடி இடங்களில் பிடிக்கப்பட்ட மீன்கள், கருவாடாக்கப்பட்டன; எனினும், இறக்குமதியானவை மிக மலிவானதாகக் காணப்பட்டதால், இது உள்ளூர் மீனவர்களுக்குச் சிக்கனமற்றதென்றாகவே காணப்பட்டது. சரியான புள்ளிவிவரங்கள் இல்லாவிட்டாலும், அட்டவணை '1' அக்காலப் பகுதியில், உபயோகமான உத்தேச மீன் பிடிச் சாதனங்கள் பற்றிய விளக்கத்தைத் தருகிறது.

அட்டவணை 1

**பாவிக்கப்பட்ட இயந்திரங்களும் மதிப்பீடு செய்யப்பட்ட மீன் பிடியும் — 1957**

| இயந்திரவகை | இருக்கும் தொகை | பாவிக்கப்படும் தொகை | பாவிக்கப்படும் ஒவ்வொரு இயந்திரத்துக்கும் வருடாந்த சராசரி மீன்பிடி | மொத்த மீன்பிடி ('000 ரூத்தல்கள்) | மொத்த மீன்பிடி தொன்களில் |
|---|---|---|---|---|---|
| தோணிகள் ... ... | 6,306 | 3,784 | 6,000 | 22,704 | 10,135 |
| வள்ளங்கள் ... ... | 2,369 | 1,421 | 6,000 | 8,526 | 3,806 |
| கட்டுமரங்கள் ... ... | 1,343 | 808 | 5,000 | 4,040 | 1,803 |
| தெப்பங்கள் ... ... | 3,946 | 2,368 | 5,000 | 11,840 | 5,285 |
| ஏனைய இயந்திரங்களும் ... முறைகளும் (கரைவலைதவிர) | — | — | | 2,104 | 939 |
| மொத்தம் ... ... | 13,967 | 8,381 | | 49,214 | 21,970 |
| கரைவலை ... ... | — | — | — | 32,806 | 14,647 |
| மொத்தம் ... | 13,967 | 8,381 | | 82,023 | 58,585 |

ஆதாரம் : கடற்றொழில் பணிப்பாளர்

* இருக்கும் இயந்திரங்களில் 60 சதவீதமானவை மட்டுமே ஒவ்வொரு வருடத்திலும் பாவிக்கப்படுவதாகக் கருதலாம்.

மொத்த மீன்பிடியில் 40 சதவீதம் கரைவலை மூலமே பிடிக்கப்படுகின்றது என்பதனையை கருத்திற் கொள்ளல் வேண்டும்.

அபிவிருத்தித் திட்டமிடல் அதன் ஆரம்பப் படிகளில் காணப்பட்ட 1951-58 கால நிலைமைகளைப் பின்வருமாறு சுருக்கி உரைக்கலாம்:

(அ) மீனில் இலங்கை தன்னிறைவு அடையாதிருந்தது;

(ஆ) 10-15 மைல் தூரத்துக்கப்பால் கடலில் சென்று மீன் பிடிக்க முடியாத காற்றின் உதவியுடன் செல்லும் வள்ளங்களை மீன்பிடி நடவடிக்கைகளில் பாவிக்கப்பட்டதால், நாட்டின் மீன் வளம் முற்றாகப் பயன்படுத்தப்படவில்லை;

(இ) மீன்பிடித் தொழில் நுட்பம் முற்றிலும் உள்ளூர் சார்ந்ததாகவே இருந்தது; உபகரணங்களை மீனவரே ஆக்கினர்; வள்ளங்கள், கட்டுமரம் என்பவற்றைக் கட்டுபவர்களுடன் அவர்கள் நெருங்கிப் பணி புரிந்தனர்;

(ஈ) மூலப் பொருள்கள் யாவும் உள்ளூரில் பெறப்பட்டன; அவை எவ்வகையிலும் வெளிநாட்டுச் செலாவணி அல்லது சேவைகளில் தங்கியிருக்கவில்லை;

(உ) அவர்களது தொழில் அன்றாடத் தேவைகளுக்கான ஒன்றானதாகவே காணப்பட்டதாயினும் நீண்ட கால பரம்பரை அனுபவம் காரணமாக அதில் நிபுணத்துவம் பெற்றிருந்தனர்.

**திட்டமில்**

சுதந்திரத்தைத் தொடர்ந்த பத்தாண்டு காலப் பகுதியில், வளர்முக நாடுகளைக் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு அவை தொடர்பான அபிவிருத்தி யடைந்த ஒரு நாட்டைப் பின்பற்றல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்வெனப் பொதுவாகக் கருதப்பட்டது. இதற்கென வெளிநாட்டு நிபுணர்கள் தருவிக்கப்பட்டு அவர்களது போசனைகள் பெறப்பட்டு அபிவிருத்தித் திட்டங்கள் ஆக்கப்பட்டன. இவ்வகையில் மீன்பிடித்துறையிலும் ஜப்பானிய நிபுணர் குழுவொன்றின் சிபார்சின் பேரில், அபிவிருத்தித் திட்டமொன்று தயாரிக்கப்பட்டது; அபிவிருத்தியடைந்த நாடுகளின் நிலைமைகளை ஒத்து, உற்பத்தியை நேரடியாகப் பெருக்கவும், அதன் மூலம் இறக்குமதிகளில் தங்கியிருத்தலை ஒழித்து, சுய தேவைப் பூர்த்தியை ஏற்படுத்துதற்கான வழிவகைகளைக் கூறுமாறு இந்த ஜப்பானிய நிபுணர் குழு எதிர்பார்க்கப்பட்டது. இதற்குப் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தன:

(1) உற்பத்தியைப் பெருக்க வள்ளங்கள், படகுகள் முதலியவற்றை இயந்திரமயமாக்கலும், மீன்பிடித் துறைமுகங்களை அமைத்தலும் அத்தியாவசியமாகும்;

(2) ஏற்கனவே உள்ள பாரம்பரிய மீன்பிடி முறைகள், உபகரணங்களை அபிவிருத்தி செய்தலும், புதிய முறைகள், உபகரணங்களை அறிமுகம் செய்தலும்;

(3) படகு கட்டும் துறைகளை அமைத்தல்; தேவையான சேவை வசதிகளை வழங்கள்;

(4) பெரிய, சிறிய மீன்பிடி மத்திகளையும், கடற்பாசி, சிப்பிகள் போன்ற ஏனைய கடல் வளங்கள் உள்ள இடங்களையும் அடையாளம் கண்டு, அபிவிருத்தி செய்தல்; உள்ளூர் நன்னீர் மீன் வளர்ப்பை ஊக்குவித்தல்;

(5) குடாக் கடல்கள், உப்பு நீரேரிகள் எங்கும் மீன் வளர்ப்பு நடவடிக்கைகளை ஒரு ஒழுங்கு முறையில் ஊக்குவித்தல்;

(6) டைனமைட், நஞ்சூட்டல் முதலிய மீன் வளங்களை அழிக்கும் நடவடிக்கைகளிலிருந்து அவற்றைப் பாதுகாத்தல்;

(7) ஆழ்கடல் மீன் பிடியை ஊக்குவித்தல்; பல்வேறு அளவுகளிலாலான 38 இழுவைப் படகுகள் இதற்குப் போதுமானதாகும்; இவ்விலக்கை செய்த சுறுசுறுப்பான மீனவர்களின் கூட்டு அவசியமாகும்; பங்கு முதல் அடிப்படையில் முதலீடு செய்து அவர்கள் இயங்க வேண்டும்; இவர்களுக்கான வழிகாட்டல்களை அரசாங்கம் வழங்க வேண்டும்; இத்தகைய ஒரு முயற்சிக்கான முதல் தொழில் நுட்ப உதவிகளை ஜப்பான் வழங்கத் தயாராகவுள்ளது;

(8) மீனைச் சந்தைப் படுத்தல் நிலைமைகளை புனர் நிர்மாணம் செய்தல்;

(9) ஐஸ் தொழிற்சாலை, மற்றும் குளிரூட்டல் வசதிகளை மேலும் பரந்த அடிப்படையில் வழங்கல்;

(10) மீனை எடுத்துச் செல்லும் போக்குவரத்து நடவடிக்கைகளை விஸ்தரித்தல்;

(11) பதப்படுத்தல், மற்றும் எதிர்காலத்தில் உப உற்பத்தி நடவடிக்கைகளுக்கு ஊக்கம் வழங்கல்;

தொழில் நுட்ப ரீதியில் மீனவர்களுக்குப் பயிற்சி வழங்கக் கூடிய, அவர்களுக்கு ஆலோசனை வழங்கக் கூடிய மீன்பிடிப் பயிற்சிக் கல்லூரிகளை நிறுவ வேண்டியதன் அவசியத்தையும் இக்குழு வற்புறுத்தியது; இலவச தங்குமிட வசதிகள் வழங்கி இலவசமாக போதனைகள் வழங்க வேண்டுமெனவும், பயிற்சிக் காலத்தில் ஓர் அலவன்ஸ் வழங்கப்பட வேண்டுமெனவும் அது சிபார்சு செய்தது; இங்கு வெளிநாட்டு நிபுணர்கள் ஆலோசனைகள் வழங்கவென பணி புரியலாமெனவும் குழு தெரிவித்தது.

இலங்கையின் மீன்பிடித்துறை அபிவிருத்தியை இரு கட்டங்களாகப் பிரிக்கலாம்.

**முதற் கட்டம்: 1964 வரை**

1959 ன் பத்தாண்டுத் திட்டத்தில், மீன்பிடித்துறை அபிவிருத்தி தொடர்பான அரசாங்கத்தின் இலக்கு பின்வருமாறு காணப்பட்டது: நாட்டின் வெளிநாட்டுச் செலாவணியில் குறிப்பிடத்தக்க ஒரு பகுதி மீன் பொருட்களை இறக்குமதி செய்யச் செலவாகின்றது; இதனை மாற்றியமைத்தல் முக்கிய ஓர் அபிவிருத்திக் கொள்கையாகும்; மீன் பிடித் தொழிலை இயந்திர மயப்படுத்துவதன் மூலம் 1968 ல் 44 கோடி இருத்தல் மீனைப் பிடிக்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

இப் பத்தாண்டு காலத்துள் செலவிடப்படவிருந்த பணம் 34 கோடி ரூபாவாகும். மீன்பிடித் துறைமுகங்கள், ஐஸ் தொழிற்சாலைகள், குளிரூட்டல் அறைகள் முதலியவற்றைக் கட்டல், இழுவைப் படகுகளைக் கொள்வனவு செய்தல் ஆகிய முதலீட்டுச் செறிவு மிக்க நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள விருந்தது; மீன்பிடி உபகரணங்களை வாங்க மீனவருக்கு வட்டியில்லாக் கடனை வழங்கவும் அரசாங்கம் முன்வந்தது: இக்காலத்தில் கரைவலை மூலமான மீன்பிடி வீழ்ச்சியடைந்து வந்தமை பற்றியும் இத் திட்டம் குறிப்பிட்டது. ஏ. சீ. ஜே. வீரக்கூன் (மீன்பிடி ஆய்வு நிலைய அறிக்கை — 1964) இது பற்றிய உண்மை நிலையைக் கூறுகிறார்: 1952 ல் இலங்கையின் மொத்த மீன்பிடியில் கரைவலை மூலமான பிடி 46.5% ஆகக் காணப்பட்டது; 1963 ல் அளவில் 1952ஐ விட 83% சதவீதம் அதிகரித்துக் காணப்பட்டாலும், விகிதாசாரத்தில், நாட்டின் மொத்த மீன்பிடியில் 23.9% சதவீதமாகக் காணப்பட்டது.

திட்டத்திற்கு மொத்தம் 12½ கோடி ரூபா வெளிநாட்டுச் செலாவணி தேவைப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

1957 க்கும் 63 க்கும் இடைப்பட்ட காலத்தில் மீன்பிடித் துறைக்கான உண்மை முதலீடு பின்வருமாறு:

| ஆண்டு | முதலீடு (10 இல. ரூபா) |
|---|---|
| 1957 | 3.057 |
| 1960 | 4.823 |
| 1961 | 9,471 |
| 1962 | 13.130 |
| 1963 | 12.045 |

(மூலம்: குறுங்கால அமுலாக்கற் திட்டம் — 1962)

இயந்திர மய மாக்கப்பட்ட படகுகள், வள்ளங்கள் முதலியன போன்றவற்றில் நேரடியான உற்பத்தியைத் தரவல்ல சாதனங்களில் முதலீடு செய்யப்பட்டது. இதன் கீழ் 2100 இயந்திர மய மாக்கப்பட்ட படகுகளும், வள்ளங்களும், கடன் திட்ட அடிப்படையில் மீனவர்களுக்கு வழங்கப்பட்டன. இவ்வியந்திர மய மாக்கம், புதிய வலைகளின் அறிமுகம் என்பன மீன்பிடியை 7,61,30,000 அந்தரிலிருந்து





Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்டவணை 2 இலங்கைக் கடற்றொழில் திணைக்களத்தின் வர்த்தக நடவடிக்கைகள் கணக்கு 1968/1974

| | மார்ச் 31 1968 | மார்ச் 31 1969 | மார்ச் 31 1970 | மார்ச் 31 1971 | 9 மாதங்கள் 1971.12.31 | டிசம். 31 1972 | டிசம். 31 1973 | டிசம். 31 1974 |
|---|---|---|---|---|---|---|---|---|
| மீன் ... ... | 8,276,586 | 8,582,694 | 7,431,920 | 8,499,401 | 7,657,612* | 9,046,822* | 12,450,847* | 14,598,105* |
| விற்பனைச் செலவு ... ... | 9,449,213 | 11,000,737 | 10,856,879 | 10,869,946 | 7,503,467 | 8,730,831 | 11,334,183 | — |
| பதனிட்ட மீன் ... ... | 237,145 | 562,259 | 767,325 | 603,030 | 390,860 | 406,013 | 718,659* | 2,021,098* |
| விற்பனைச் செலவு ... ... | 378,778 | 772,903 | 1,345,290 | 1,104,920 | 635,472 | 676,758 | 717,421 | 1,635,701 |
| மீன் உணவு ... ... | 44,547 | 70,981 | 131,906 | 163,199* | 125,981 | 120,725* | 343,063* | 1,012,325* |
| விற்பனைச் செலவு ... ... | 89,758 | 102,194 | 136,954 | 130,672 | 108,200 | 110,045 | 135,906 | 600,961 |
| மீன் எண்ணெய் ... ... | 144,646 | 187,140 | 130,779 | 128,837 | 100,410 | 176,136 | 272,094 | 319,036* |
| விற்பனைச் செலவு ... ... | 145,025 | 264,057 | 205,356 | 247,988 | 284,271 | 310,355 | 324,992 | 257,972 |
| படகு கட்டுதல் ... ... | — | 76,500 | 388,662 | 299,588 | 302,229 | 582,752 | 966,731 | 707,631 |
| விற்பனைச் செலவு ... ... | — | 327,505 | 720,722 | 653,441 | 609,228 | 641,524 | 1,474,392 | 1,179,357 |
| ஐஸ் ... ... | 151,920 | 219,456* | 154,328 | 141,702 | 88,987 | — | — | — |
| விற்பனைச் செலவு ... ... | 689,320 | 82,501 | 289,510 | 227,413 | 425,398 | — | — | — |
| மீன் பிடி இயந்திரம் ... | 3,743,222* | 5,348,729* | 5,700,127 | 5,077,554* | 4,312,228* | 5,738,354* | 8,172,954* | 8,565,721* |
| விற்பனைச் செலவு ... ... | 3,259,640 | 4,080,070 | 7,113,366 | 4,010,193 | 2,332,101 | 2,612,229 | 4,965,490 | 4,074,975 |
| சுறு மீன் ... ... | 17,642 | 81,520* | — | 12,087 | 53,221* | — | — | — |
| விற்பனைச் செலவு ... ... | 27,425 | 37,707 | — | 18,217 | 1,625 | — | — | — |
| கடல் தாவரம் ... ... | — | 4,953 | — | — | — | | — | — |
| விற்பனைச் செலவு ... ... | — | 3,882 | — | — | — | — | — | — |
| கடல் உணவு ... ... | — | — | 47,095* | — | — | மீன் விற்பனைக் கணக்குக்கு | | |
| விற்பனைச் செலவு ... ... | | | | — | — | மாற்றப்பட்டது | | |
| கடல் நண்டு ... ... | | | | 118,388 | — | மீன் விற்பனைக் கணக்குக்கு | | |
| விற்பனைச் செலவு ... ... | | | | 159,110 | — | மாற்றப்பட்டது | | |
| தகரத் தலைடைக்கப்பட்ட மீன் | | | | 321,195 | 630,100 | 387,436 | 637,834 | 597,971 |
| விற்பனைச் செலவு ... ... | | | | 576,468 | 641,121 | 574,451 | 1,031,982 | 937,870 |
| 11 தொன் படகு இயக்கம் ... | | | | | 244,942 | 233,202 | 325,346 | — |
| இயக்கச் செலவு ... ... | | | | | 988,901 | 839,233 | 997,197 | — |
| தூணுப்படகும், இழுவைகள் | | | | | | | | |
| இயக்கமும் ... ... | 2,781,320 | | | | | 2,781,320 | மீன் விற்பனைக் கணக்குக்கு | |
| இயக்கச் செலவு ... | | | | | | 4,572,078 | மாற்றப்பட்டது | |
| வியாபாரக் கணக்கின் இலாபம் | | | | | | 405,256 | 2,905,965 | 3,866,441 |
| வியாபாரக் கணக்கின் நட்டம் | 1,423,451 | 1,537,324 | 5,952,402 | 2,628,387 | 376,786 | — | — | — |
| செலவுகள் | | | | | | | | |
| நிர்வாகம் ... ... | 4,216,280 | 2,743,641 | 2,070,516 | 2,592,065 | 2,478,703 | 4,074,108 | 3,896,913 | 3,340,891 |
| விற்பனையும், விநியோகமும் ... | 2,357,821 | 2,795,812 | 2,500,413 | 3,428,616 | 2,480,784 | 2,149,212 | 4,993,292 | 5,556,356 |
| நிதி ... ... ... | 487,194 | 469,022 | 535,909 | 898,662 | 1,006,633 | 916,500 | | |
| வட்டி ... ... ... | | | | | | | 632,450 | 757,600 |
| வரி(B.T.T.)... ... ... | | | | | | | | 233,389 |
| நட்டம், வீணுதல், அழுகல் ... | 332,217 | 347,481 | 110,356 | | | | | |
| கழி: நானாவித செலவினங்கள் | 332,217 | 468,701 | | | 231,657 | 522,730 | 691,119 | 1,049 |
| கழி: கட்டணங்கள் ... | | | | 484,360 | | | | |
| தேறிய நட்டம் ... ... | 8,152,529 | 7,424,579 | 10,669,865 | 9,063,371 | 5,357,677 | 6,211,834 | 6,082,252 | 5,750,576 |

*ஆதாரம்: இலங்கைக் கடற்றொழில் கூட்டுத் தாபனம் ஆண்டறிக்கைகள் 1968-1974*

* *1.4.70-31.3.71 மீன்பிடி இயந்திர இலாபம் பற்றி கணக்காய்வு மா அதிபரின்குறிப்பு: ஜன. 17, 1971 ன் பின்னர் கூட்டுத்தாபனத்தால் இறக்குமதி செய்யப்படும் மீன் பிடி இயந்திரங்களுக்கு பீக்ஸ் இலிருந்து விதி விலக்கு அளிக்க வேண்டுமென்ற அரசின் தீர்மானத்தினுல் மீனபிடி இயந்திரத்தினுல் இலாபம் ஏற்பட்டது.*

o *தூணுப் படகு இழுவை நடவடிக்கைகள் கணக்காய்வு மாஅதிபரின் குறிப்பு (1972) முந்தை வருடத்துக்கான (1.4.71-31.12.71) வலை இயக்கச் செலவான ரூ. 42,98,778 மீன் வியாபாரக் கணக்குக்கு மாற்றப்பட்டுள்ளது. இவ்வருடத்தில் முந்தைய வருடங்களில் போன்று கணக்கெடுப்புச் செய்யப்பட் டிருப்பின் மீன் வியாபாரக் கணக்கு ரூ. 315,991 இலாபம் காட்டுவதற்குப் பதிலாக ரூ. 1474,767/- நட்டம் காட்டியிருக்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14,66,30,000 அந்தராக உயர்ந்தன. எனினும், வழங்கப்பட்ட கடனில் ஒரு சிறு பகுதியே திரும்பச் செலுத்தப்பட்டது. இதனைக் கருத்திற் கொண்டு, புதிய இயந்திர வள்ளங்களை வழங்குதற்குப் பதிலாக, ஏற்கனவே இருந்த பாரம்பரிய மீன்பிடி வள்ளங்கள் முதலியனவற்றை இயந்திரமயமாக்கலில் அக்கறை காட்டப்பட்டது. இதற்குப் பின்வரும் அம்சங்களும் காரணமாகவிருந்தன:

(அ) மொத்த உற்பத்தியில் 60% அவற்றின் மூலம் பிடிக்கப்பட்டன;

(ஆ) டீசல் என்ஜின்களை வழங்குதற்கான செலவு ஒப்பீட்டு ரீதியிற் குறைவு.

உற்பத்தியில் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பு காணப்பட்டபோதிலும் ''சுய தேவைப் பூர்த்தி'' என்ற இலக்கினை நாடு அண்மிக்கவில்லையென்பது காணப்பட்டது. தலைக்கு நுகர்வு வீதம் அதிகரித்துள்ளதே இதற்குக் காரணமெனக் கூறப்பட்டது. எவ்வாறுயினும் மீன்பிடித் துறையில் தொடர்ந்து முதலீடு செய்வது பயனுள்ளது எனத் தீர்மானிக்கப்பட்டதாக 1962 ன் ''குறுகிய கால திட்ட அமுலாக்க நிகழ்ச்சித் திட்டம்'' கூறுகிறது. அதற்குக் காரணமென்னவெனில் (1) முதலீட்டு - உற்பத்தி விகிதாசாரம் மீன்பிடி அபிவிருத்தித் துறையின் பல அம்சங்களில் தாழ்ந்திருப்பது. (2) இதற்காகச் செலவிடப்படும் காலப் பிரிவு மிகக் குறைவானது. ஏனெனில் முதலீடு செய்யும் அதே வேளையிலேயே இலாபம் திரும்ப ஆரம்பிக்கின்றது. (3) மூலவளத்தினை, (இங்கு சமுத்திரத்தை) ஒரு நேர் விளைவு வளமாக்குவதற்கு எதுவித முதலீடும் அவசியமில்லை. ஏனெனில் இங்கு சமுத்திர வளத்தை அள்ளிப் பெறுதல் மாத்திரமே செய்ய வேண்டியுள்ளது.

**1965 முதல் மீன்பிடித்துறை அபிவிருத்தி**

மீன்பிடி அபிவிருத்தித் துறையின் வர்த்தக அங்கங்களைக் கையாள்வதற்காக 1957 ம் ஆண்டின் அரச கைத்தொழில் யாக்கங்களின் சட்டத்தின் கீழ் 1964ம் ஆண்டு அக்டோபர் 1 ம் திகதி மீன்பிடிக் கூட்டுத்தாபனம் தாபிக்கப்பட்டது. அதே வேளையில் மீன்பிடித் திணைக்களம் அவ்வமயம் முதல் மீன்பிடிச் சட்டத்தை நிருவகித்தல், ஆராய்ச்சி, பயிற்சி விரிவாக்கப் பணிகள், நலனோம்பு வசதிகளின் ஏற்பாடுகள், விபத்து நட்ட ஈடு நிருவாகம், உள்நாட்டு மீன்பிடி அபிவிருத்தி போன்றவற்றுக்கு பொறுப்புக் காட்டப்பட்டது.

கட்டளைச் சட்டத்தில் கூறப்பட்டுள்ளபடி கூட்டுத்தாபனத்தின் நோக்கங்கள் வருமாறு:

(1) கூட்டுத்தாபனம் நேரடியாகவோ அல்லது அங்கீகாரமளிக்கப்பட்ட முகவர்கள் மூலமாகவோ செய்றபடுவதற்கான ஆழ்கடல் இழுவைக் கப்பல் மீன்பிடி உற்பட்ட மீன்பிடிச் செயலாக்கங்கள்.

(2) கூட்டுத்தாபனம் நேரடியாகவோ, அல்லது அங்கீகாரமளிக்கப்பட்ட முகவர்கள் மூலமாகவோ மீன் பதன் முறைப்படுத்தல், (டின்களில் அடைத்தல், பக்குவப் படுத்தல், உலர வைத்தல் என்பன உட்பட) மற்றும் மீன் உப பொருட்கள் உற்பத்தி என்பவற்றை மேற்கொள்ளல்.

(3) கூட்டுத்தாபனம் நேரடியாகவோ, அல்லது அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் மூலமாகவோ மீன் விநியோகம் செய்தலும், மொத்தமாகவோ சில்லரையாகவோ சந்தைப்படுத்தலும்.

(4) மீன்பிடித் துறைமுகங்கள், மீன்பிடிக் கரையோர நிலையங்கள், குளிரூட்டு அறைகள் என்பவைகளை நிர்மாணித்தல், பராமரித்தல்.

(5) மீன், மற்றும் மீன் பொருள்கள் என்பவற்றின் இறக்குமதி ஏற்றுமதி.

(6) மீன்பிடித் துறைக்கு அவசியமான கருவிகளை இறக்குமதி செய்தல்.

(7) மீன்பிடித் திணைக்களத்துக்காகவும் அதன் சார்பிலும் அல்லது வேறு எந்த அரசாங்கத் திணைக்களத்துக்காகவும் மீன்பிடித் துறையின் மேம்பாட்டுடன் தொடர்புடைய பணிகளை நிறைவேற்றுதல்.

(8) மீன்பிடித் தொழிலுக்கான வள்ளங்கள், ஏனைய உபகரணங்களை நிர்மாணித்தல்.

(9) மீன்பிடி வள்ளங்களுக்கான பழுதுபாாத்தல், பராமரிப்பு வசதிகளை ஏற்பாடு செய்தல்.

(10) மீன்பிடித்தலுக்குத் தேவையான பொருட்களை உற்பத்தி செய்தலும் விற்பனை செய்தலும்.

இரண்டு தொன், மூன்றரைத் தொன் எடையுள்ள இயந்திரப் படகுகளின் ஆற்றல் மட்டுப்படுத்தப்பட்டது என்பது தெளிவாகியுள்ளது. பருவப் பெயாச்சிக் காற்று வீசும் கடல் கொந்தளிப்புக் காலங்களுக்கு ஈடுகொடுக்க முடியாமை, மீன்களைப் பாதுகாப்பாக வைப்பதற்கு போதிய குளிரூட்டப்பட்ட குத அறைகள் இல்லாமை, மீ ன வ ா க ள் வாழவோ, உறங்கவோ போதிய இடவசதி இல்லாமை என்பன காரணமாக இப் படகுகளும் பாரம்பரிய மீன்பிடி வள்ளங்களைப் போன்ற ஒரு குறிப்பிட்ட கரை சா்ந்த பிரதேசத்துக்குள்ளும், பகல் காலங்களிலும் மாத்திரமே செயல்பட வேண்டியுள்ளது. எனினும் 1965 ல் மீன்பிடிக் கூட்டுத்தாபனம் வகுத்த பத்தாண்டுத் திட்டத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ள கூற்றின் மூலம் தொழில் நுட்பத் துறை சாரும் போக்கு புலப்படுகின்றது. ''இயந்திரப் படுத்தப்பட்ட பாரம்பரிய படகுகளும், சிறிய இயந்திரப் படகுகளும் 1958 ல் 40,000 தொன்களாக இருந்த மீன்பிடி உற்பத்தியை 1964 ல் 90,000 தொன்களாக அதிகரித்தது. உற்பத்தியை அதிகரிப்பதற்கு இயந்திர மயமாக்குதலே வழி என்பதை நிரூபிக்க சான்றுகள் தேவையின் இது அதற்குப் போதிய சான்றாகும்.'' இப் பிரச்சினைகளை யெல்லாம, இலங்கையின் கரையோர மீன்பிடி வள்ளங்களின் தொகையை பதினொரு தொன் எடையுள்ள மொத்தம் 2500 படகுகளை அறிமுகப் படுத்துவதன் மூலம் தீர்ப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மீன்பிடி அபிவிருத்திக்கான கூட்டுத்தாபனத்தின் திட்டமிடப்பட்ட யோசனைகள், அதன் வியாபிப்பிலும் அளவிலும் முன்னைய திட்டங்களை மிஞ்சிவிட்டன.

இதற்குக் கூடுதலாக ஆழ்கடல் மீன்பிடித்தலுக்காக பின்வரும் வள்ளங்களை அறிமுகப்படுத்த கூட்டுத்தாபனம் திட்டமிட்டுள்ளது.

100 டுனு வள்ளங்கள், 20 இழுவைக் கப்பல்கள்; குளிர்சாதன அறைகள் கொண்ட 5 இழுவைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்பல்கள்; 20 துருவ மற்றும் ஒட்ட மீன்பிடிப் படகுகள்; மீன் பிடிப் படகுகள், இருல் பிடிக்கும் 6 இழுவைக் கப்பல்கள் மூன்று அடித்தள நீர் மூழ்கிப் படகுகள் என்பவைகளை ஏற்றிச் செல்லக் கூடியதான ஒரு தாய்க்கப்பல் படகு.

இந்த மாபெரும் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக அரசாங் கத்துக்கு 157 கோடி 50 லட்சம் ரூபா செலவாகுமென மதிப் பிடப்பட்டுள்ளது. இதில் அந் நியச் செலாவணி 105 கோடி ரூபாவாகும். தனியார் துறைச் செலவினங்கள் 7 கோடி 20 லட் சம் ரூபாவாகும். இதில் அந்நியச் செலவாணி 3 கோடி 40 லட்சம் ரூபாவாகும். 1959 ம் ஆண்டுக் காக திட்டமிடப்பட்ட மொத்த செலவு 34 கோடி 90 லட்சம் ரூபாவாகும். ஆனல் இத்திட்டத் தின் கீழ் உத்தேசிக்கப்பட்டுள்ள மொத்த செலவு 164 கோடியே 70 லட்சம் ரூபாவாகும். இதில் அந்நியச் செலவாணி மாத்திரம் 108 கோடியே 40 இலட்சம் ரூபா வாகும்.

## தற்போதைய நிலைமை

கடந்த 20 ஆண்டுகளாக அமுல் படுத்தப்பட்ட அபிவிருத்தி உபா யங்கள் உள்ளூர் மீன்பிடித் துறை யில் மாற்றங்களைக் கொண்டுவந் துள்ளன. இது முற்றிலும் எதிர் பார்க்கப்பட்ட திசையிலும், எதிர்பார்க்கப்பட்ட அளவிலும் இல்லாதிருக்கலாம். 1957 ல் பாரம்பரிய படகுகளின் மூலம் (இழுவைக் கப்பல்கள் மூலமான பங்களிப்பு 800 தொன்களாக மதிப்பிடப்பட்டுள்ளது) கரை சேர்க்கப்பட்ட 39,000 தொன் மீன் உற்பத்தி 1975 ல் 127,000 தொன்களாக அதிகரித்தது. பின் வரும் அட்டவணையில் காட்டப் பட்டுள்ளவாறு கரையோர மீன் பிடித்தல் 89% சதவீத மீனையும், ஆழ்கடல் மீன்பிடித்தல் 0.7% சதவீத மீனையும், நன்னீர் மீன் பிடித்தல் 10.3% சதவீத மீனை யும் அளித்துள்ளது.

ஆழ்கடல் மீன் பிடித்தலில் பெருமளவு சாதிப்பதற்கு நாம் தவறியுள்ளோம். கரையோர மீன் பிடித்தலே இன்னும் பெரு மளவு செயல்படுகின்றது. அதி கரித்த உற்பத்திக்கு முக்கிய காரணங்களாக பாரம்பரிய மீன் பிடிமுறை பின்வரும் முறைகளில் புதிய தொழில் நுட்பங்களால் பலப்படுத்தப்பட்டதைக் கூற லாம்.

(அ) இறக்குமதி செய்யப்பட்ட சிந்தெடிக் நூலினுல் பின் னப்பட்ட வலைகள் அதன் உறுதி, நீருக்குள் கண்ணுல் பார்க்க முடியாத தன்மை, பாரமின்மை போன்ற சிறப் புத் தன்மைகளினுல் மீனவர் களின் பாரம்பரிய கயிற்று வலையை விடவும் சிறந்து விளங்குவதால் மீனவர்கள் ஆரம்பம் முதலே இவ் வலையை உடனடியாக ஏற் றுக் கொண்டமை.

(ஆ) கரையோர மீன்பிடித்தலில் புதிய இயந்திரப் படகுகள், படகுக்குள்ளும், வெளியி லும் கடல் டீசல் எஞ்சின் கள் பொருத்தப்பட்டமை போன்ற இயந்திரமயப்படுத் தல்.

## மீன்பிடித் துறைமுகம்

காலி, பேருவளை, மிரிஸ்ஸ, தங் கல்லை, திருகோணமலை, ஆகிய இடங்களில் மீன்பிடித் துறை முகங்கள் மீதான மீன்பிடிக் கூட் டுத்தாபனத்தின் பணிகள் 1972ல் மீன்பிடித் துறைமுகங்கள் கூட் டுத்தாபனத்திடம் கையளிக்கப் பட்டன. காலி, மிரிஸ்ஸ, தங் கல்லை ஆகிய இடங்களில் துறை முகங்கள் பூர்த்தி செய்யப்பட்டு பணியில் ஈடுபடுத்தப்பட்ட அதே வேளையில் பேருவலை, மயிலிட்டி, வென்னப்புவை ஆகிய இடங் களில் இத் துறைமுகங்களுக்கான வேலைகள் நடைபெறுகின்றன. மீன்பிடிக் கப்பல்கள் நங்கூரமிட்டு நிற்பதற்கான நங்கூரமிடு நிலையங் கள் பாணதுறை, வென்னப் புவை போன்ற இடங்களில் நிர் மாணிக்கப்பட்டுள்ளதுடன் கல் முனை, சிலாபம், களுத்துறை, நீர் கொழும்பு ஆகிய இடங்களிலும் நிர்மாணிப்பது பற்றி ஆலோசிக் கப்பட்டு வருகின்றது.

திர்வை, மீளளிப்புக் கட்ட ணங்கள், மற்றும் கட்டணங் களின் அடிப்படையில் காலித் துறைமுகம் 1972 ல் 682,687 ரூபாவும் 1973 ன் முதல் ஆறு மாதங்களுள்ளும் 162,187 ரூபா வும் சம்பாதித்தது.


காலியில் உள்ள குளிர் அறை யும், ஐஸ் உற்பத்தி வசதிகளும் கீழ் காட்டப்பட்டுள்ளவாறு 27% சதவீதமே பயன்படுத்தப்பட்டுள் ளது.

உணவு விவசாய நிறுவனம் - ஐ.நா. அபிவிருத்தித் திட்டம் ஆகியவற்றின் மீன்பிடி அபிவிரு த்தித் திட்டமொன்று காலியில் செயல்படுகின்றது. அது (1) உயி ருள்ள இரைகள் கரையோர நீரில் கடல் வளங்கள் என்பவற் றின் மதிப்பீடு, அபிவிருத்தி பற்றி யும் (2) கரை தாண்டிய கடற் பிரதேசத்தில் கடல் வளங்கள் பற்றிய மதிப்பீடு அபிவிருத்தி பற் றியும் பணியாற்றுகின்றது. 1973 ன் இறுதிக் காலாண்டுப் பகுதி யில் ஜப்பானிலிருந்து வந்து சேர் ந்த 60 தொன் நிறையுள்ள தாவிப் பாயும் கப்பல் வந்து சேர்ந்ததும்

அட்டவணை 3

**1970–76 ல் புதிய மீன் உற்பத்தி (ஆயிரம் தொன்களில்)**

| துறை | 1970 | 1971 | 1972 | 1973 | 1974 | 1975 | 1976 |
|---|---|---|---|---|---|---|---|
| ஆழ்கடல்மீன்பிடித்தல் | 3.2 | 2.5 | 2.5 | 2.3 | 2.2 | 0.9 | 0.5 |
| கரையோர மீன்பிடித்தல் | 85.2 | 73.4 | 89.3 | 81.9 | 99.2 | 113.1 | 120.9 |
| நன்னீர் மீன்பிடித்தல் | 8.2 | 8.0 | 8.3 | 6.9 | 7.5 | 13.1 | 12.3 |
| மொத்தம் | 96.6 | 83.9 | 100.1 | 99.1 | 108.9 | 127.1 | 133.7 |



**உற்பத்தி, இறக்குமதி, நுகர்பு**

மேலே உள்ள பருமனுன கோடு உள் நாட்டு உற்பத்தியையும், மெல்லிய கோடு இறக்குமதியையும், கீழுள்ள இடைவிட்ட கோடு சராசரி நுகர்வையும் சுட்டிக் காட்டு கின்றது: சராசரி நுகர்வில் ஏற்படும் மாற் றங்கள் கவனிக்கத்தக்கவையாகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை—4

| | | | | |
|---|---|---|---|---|
| கொள்ளிருப்பு அறை (ஐஸில் மீன்) | .. | .. | 400 | தொன் |
| கையாடல் அறை (சரமீன் ஐஸில்) | .. | .. | 200 | ,, |
| உறைய வைக்கப்பட்ட மீன் | .. | .. | 2400 | ,, |
| ஐஸ் சேமிப்புக் குதம் .. | .. | .. | 150 | ,, |
| ஐஸ் பாளங்கள்-தினமொன்றுக்கு | .. | .. | 50 | ,, |
| உறையும் அளவு-தினமொன்றுக்கு | .. | .. | 16 | ,, |
| தொடுகை உறைதல் (தினமொன்றுக்கு) .. | | .. | 4 | ,, |

வேலைகள் ஆரம்பித்தன. 1973ன் இறுதிக் காலாண்டுப் பகுதியில் இரு ஜப்பான் மற்றும் கொரியக் கப்பல்கள் காலியிலிருந்து செயல்பட்டன.

இத்தகைய அதிக செலவின அமைப்புக்களையும், வசதிகளையும் நிர்மாணிப்பதில் செலவிடப்பட்ட தொகைகளை மீளப் பெறுவது எப்படி என்பது மீன்பிடித்துறை சார்ந்த அதிகாரிகளை எதிர்நோக்கும் பிரச்சினைகளாகும்.

காலி மீன்பிடித் துறைமுகம் சுமார் 4 கோடி ரூபா வரை செலவிட்டு நிர்மாணிக்கப்பட்டது. திட்டமிடப்பட்ட ஆழ்கடல் முயற்சிகள் நிறைவேருதபடியினுல் அவ்வசதிகள் பயன்படுத்தப்படாமல் இருக்கின்றன அல்லது குறைவாகவே பயன்படுத்தப்படுகின்றன.

எமது மக்கள் தமது உணவில் உட்கொள்ளத் தேவையான புரதச் சத்துக்களைப் பெரும்பாலும் மரக்கறி மூலங்களிலிருந்தே பெறுகின்றனர். விலங்கினப் புரதச்சத்துகளில் சுமார் 63.4 சதவீதம் மீன மூலமாகவே பெறப்படுகின்றது. அண்மைய வருடங்களில் மீன் உணவுப் பொருட்கள் கிடைப்பதில் மாத்திரமன்றி தலைக்கு நுகர்வு வீதத்திலும் சரிவு ஏற்பட்டுள்ளதாக தரவுகள் காட்டுகின்றன. இச்சரிவு பிரதானமாக மீன்பிடி அபிவிருத்தித் துறையின் அசாதாரண தன்மை காரணமாகவே நிகழ்கின்றது. 1966 ல் தலைக்கு சராசரி நுகர்வு 48.6 இருத்தலாக இருந்தது 1968 ல் 40.8 இருத்தலாகவும் 1972 ல் 32 இருத்தலாகவும். 1974 ல் 24.1 இருத்தலாகவும் குறைந்து வந்துள்ளது. ஒருவர் தினசரி உட்கொள்ள வேண்டிய மீனின் அளவு தினமொன்றுக்கு 60 கிரும் என வைத்திய ஆராய்ச்சி நிறுவகத்தின் அட்டவணை கூறுகிறது.

உள்ளூரில் உற்பத்தியாகும் மீனின் விலை கடந்த ஆண்டுகளில் அதிகரித்தே வந்துள்ளது. மீனுக்கான அதிகரித்து வரும் கேள்விக்கேற்ப வழங்கல் ஈடு கொடுக்கவில்லை. உள்ளூர் உற்பத்தியில் படிப்படியாக அதிகரிப்பு ஏற்பட்டாலும் கட்டுப்பாட்டை மீறி அதிகரித்துச் சென்ற மீனின் சில்லறை விலையை கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்காக 1976 லும் 1977 லும் இறக்குமதிகள் அதிகரிக்கப்பட வேண்டியதாயிற்று. இறக்கும்தி செய்யப்பட்ட தொழில் நுட்பத்துக்கான பெருந்தொகை அந்நிய செலாவணி உற்பத்தி, விநியோகம் ஆகிய துறைகளில் சகல மட்டங்களிலுமான செலவினங்கள் அதிகரிப்பு என்பன இதற்கான பிரதான காரணங்களாகும். மீன்பிடிக் கூட்டுத்தாபனமும் கூ. மொ. வி. யும் இதற்கு முக்கிய பொறுப்பெடுக்க வேண்டும். மீன்பிடிக் கூட்டுத்தாபனமே சகல மீன்பிடி உபகரணங்களினதும் ஏக போகத்தைக் கொண்டிருந்ததோடு, கூட்டுத்தாபனம் தனது ஏனைய முயற்சிகளில் வராத இலாபத்தைச் சம்பாதித்துக் கொள்வதற்காக இறக்குமதி செய்யப்பட்ட நைலோன் வலைகளில் கூடுதல் இலாபம் பிடித்து விற்றமையும், கருவாடு இறக்குமதியில் கூ. மொ.வி. ஏகபோக உரிமை கொண்டிருந்ததோடு, மோசமான ரக கருவாடுகளை இறக்குமதி செய்து இலாபம் வைத்து விற்றமை என்பன இதற்குக் காரணங்களாகும். இவை இரண்டுமே உள்ளூர் மீனின் விலையைப் பாதித்தன. மேற்கண்ட அட்டவணையிலிருந்து இலங்கையில் கூடுதல் மீன் நியாய விலையில் கிடைக்குமாயின் இலங்கை மக்கள் கூடுதல் மீனுணவை நுகர்வர் என்பது தெளிவாகின்றது. ஆனல் மீன் இருப்பளவு குறைந்துள்ள அதே வேளையில் விலைகள் கூடிச் சென்றுள்ளன.

உள்ளூர் மீன் நுகர்வைப் பாதித்த மற்ஒருரு அம்சமென்னவெனில் 1970 முதல் படிப்படியாக மீன் ஏற்றுமதி அதிகரித்தமையும், பிடிபடும் மீன்களுள் மிகச் சிறந்தவை உள்ளூர் சுற்றுலா ஓட்டல்களுக்கு தெரிந்து விநியோகிக்கப்படுதலுமாகும்.

1975 ஐ விடவும் 1976 ல் உறையவைக்கப்பட்ட இருலும், பெரிய இருலும் முறையே 145 சதவீதத்தாலும் 234 சதவீதத்தாலும் அதிகரித்தன. பெறுமானம் அதிகரிப்புக்கு முக்கிய காரணம் இவற்றின் உற்பத்தி அதிகரிப்பும், விலை அதிகரிப்புமாகும். பிரதான இறக்குமதி நாடுகள் ஜப்பான், அமெரிக்கா, சிங்கப்பூர், பிரிட்டன், நெதர்லாந்து, அவுஸ்திரேலியா ஆகும். இவ்விறக்குமதிகளும் பிரதானமானவை இருலும், சிங்கி இருலுமாகும். இதன் காரணமாக இவை இலங்கைச்

அட்டவணை—5 உள்ளூர் உற்பத்தி, ஏற்றுமதி, இறக்குமதி மற்றும் நுகர்வு

| | 1957 | 1960 | 1965 | 1970 | 1971 | 1972 | 1973 | 1974 | 1975 | 1976 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சனத்தொகை (பத்து லட்சங்களில்) .. .. | 9.2 | 9.9 | 11.2 | 12.5 | 12.7 | 13.0 | 13.1 | 13.3 | 13.5 | 13.7 |
| உள்ளூர் உற்பத்தி (தொன்களில்) .. .. | 38,065 | 53,064 | 92,736 | 96,608 | 83,897 | 100,110 | 99,116 | 108,952 | 127,106 | 133,700 |
| இறக்குமதி, உலர் நிறைகளில் (தொன்) .. | 81,757 | 109,900 | 85,561 | 80,663 | 78,704 | 85,480 | 45,919 | 36,629 | 31,820 | 15,716 |
| ஏற்றுமதி, உலர் நிறைகளில் (தொன்) .. .. | — | — | — | 505 | 518 | 610 | 1,269 | 1,784 | 1,398 | 2,713 |
| மொத்த நுகர்வு .. | 119,822 | 162,964 | 178,297 | 176,766 | 162,083 | 184,980 | 143,766 | 143,796 | 117,528 | 146,703 |
| நுகர்வில் இறக்குமதிச் சதவீதம் .. .. | 68.2 | 67.4 | 48.0 | 45.6 | 48.6 | 46.6 | 31.9 | 25.4 | 20.2 | 10.7 |

1973-1974 ல் 1 கோடி 31 லட்சம் சனத்தொகை இருக்கையில் கிடைக்கக்கூடியதாயிருந்த மொத்தத் தொகை 1960 ல் 99 லட்சம் சனத்தொகையுடன் இருந்தபோது கிடைக்கக் கூடியதாயிருந்ததை விடவும் குறைவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தைகளிலிருந்து முற்ருகவே மறைந்துவிட்டன.

பற்ருக்குறை உள்ளூர் உற்பத்தி, குறைந்த இறக்குமதி, கூடுதல் ஏற்றுமதி, கூடிய விலை போன்ற இணைந்த காரணிகள் தீவிர புரதப் பற்ருக்குறைச் சூழ்நிலையொன்றைத் தோற்றுவிப்பதை தவிர்க்க முடியாததாக்கியுள்ளது. விசேடமாக ஏனைய புரதவகை உணவுப் பொருட்களான இறைச்சி, பால், முட்டை போன்ற பாரம்பரிய உணவுப் பொருட்கள் உள்ளூர் மக்கள் தொகையின் பரவிய தொகையினரால் ஏற்றுக்கொள்ள முடியாததாயுள்ள சூழ்நிலையில் இது கவனிக்கப்படல் வேண்டும். ஆளொருவருக்கு தினமொன்றுக்கு சிபார்சு செய்யப்பட்டுள்ள 166 கிறும் தானியம் இறைச்சி. மீன், முட்டை, பாலுணவு என்பவற்றில் 1974 ல் 57.6 கிறும் மாத்திரமே கிடைக்கக்கூடியதாயிருந்தது.

## படகு கட்டுதல்

பாரம்பரிய படகு கட்டும் நிலையங்களைத் தவிர்த்து, மீன்பிடித் திணைக்களத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட மொத்தம் 32 படகு கட்டும் நிலையங்கள் தொழில்படுகின்றன. இவை திணைக்களத்தின் கீழ் செயல்படும் மீன்பிடிக் கூட்டுறவுச் சங்கங்கள் வாடகைக் கொள்வனவு செய்வதற்காகவே நிர்மாணிக்கப்படுகின்றன. இவற்றில் மூன்று நிலையங்கள் ஜி.ஆர்.பி. படகுகளையும், ஒரு நிலையம் ஜிஆர்பி படகுகளையும், பலகையினலான படகுகளையும் நிர்மாணிக்கின்றன. ஏனைய நிலையங்கள் மரப் படகுகளை மாத்திரமே நிர்மாணிக்கின்றன. நாட்டின் மீன்பிடிப் படகுகளின் அபிவிருத்திகள் 3½ தொன் எடையுள்ள 28-38 அடி படகுகளை மாத்திரமே இயந்திரங்களையும், கடல் டீசல் எஞ்சின்களையும் பொருத்தித் தயாரிக்கப்படுவதுடன் முடிவடைந்துள்ளன. சர்வதேச ''சீநோர்'' நிறுவனம் இலங்கையில் இரும்பு - சீமெந்துக் கலவைப் படகுகளை பரீட்சார்த்தமாக அறிமுகப்படுத்தி வருகின்றது. இது மரப்படகுகளுக்கு கவசியமான மரத் தேவைகளில் தங்கியிருப்பதையும், வெளிநாட்டுச் செலாவணி அதிகம் தேவையான கிளாஸ் பைர் தகடுகளில் தங்கியிருப்பதையும் நீக்குகிறது எனினும் இது அவ்வளவாக மீனவர்களால் இன்னும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. மாவட்ட அபிவிருத்திச் சபைத் திட்டங்களின் கீழ் மாத்தறையிலும், ஹம்பாந்தோட்டையிலும் முன்னேடித் திட்டங்களாக படகு கட்டும் நிலையங்கள் மூன்று ஏற்படுத்தப்பட்டன. ஆயினும் தனியார் படகு கட்டும் நிறுவனங்களுடனை கடின போட்டியின் காரணமாக பல பிரச்சினைகளை இது எதிர்கொள்ள வேண்டியதாயிற்று. தனியார் கம்பனிகளாலும, சிறு அளவு உரிமையாளர்களின் படகு கட்டும் முயற்சிகளையும் தவிர்த்து இலங்கை மீனபிடிக் கூட்டுத்தாபனத்தின் கீழ் ஒரு படகு கட்டும் நிலையமும், சீநோர் நிறுவனத்தின் கீழ் ஒரு படகு கட்டும் நிலையமும் செயற்படுத்தப்படுகின்றன. படகு கட்டும் நிலையங்களின் வருடாந்த படகு உற்பத்தி மீன்பிடிக் கூட்டுத்தாபனத்தின் கீழ் சுமார் 40 படகுகள் முதல் சிறுகூறு நிலையங்களின் கீழ் 4 படகுகள் வரை வேறுபடுகின்றன. வாடகைக் கொள்வனவின் கீழும், உடனடிப் பணம் கொடுத்து வாங்கும் திட்டத்தின் கீழும் கடந்த வருடங்களில் விலைப்பட்ட மொத்த படகுகளின் தொகை இங்கு அட்டவணையொன்றில் தரப்பட்டுள்ளன.

இந்நாட்டில் இன்றுள்ள படகு கட்டும் சேவையின் உற்பத்தித் திறன் நாட்டின் மீன்பிடித் தேவை கோரி நிற்கும் கேள்வியைப் பூர்த்தி செய்ய முடியாதளவிலேயே உள்ளது. படகு கட்டுவதற்குப் பொருத்தமான வகை மரங்களின் மிகத் தீவிர தட்டுப்பாடு நிலவுகின்றதுடன் இதனல் இத்துறைக் கைத்தொழில் முற்ருகப் பாதிக்கப்பட்டுள்ளது. போதிய படகு இயந்திரங்கள் (உட்படகு, வெளிப்படகு இயந்திரங்கள்) அவற்றுக்கான உதிரிப்பாகங்கள் என்பன போதியளவு இல்லாமையும் இத்தொழிற்றுறையை எதிர்நோக்கும் மற்ருெரு பிரச்சினையாகும். மிக முன்னேறிய மீன்பிடி முறைகள் அறிமுகப்படுத்தப்படுவதில் உள்ள கஷ்டங்கள் காரணமாக மீன்பிடித்துறை அபிவிருத்தி தாமதிக்கப்படுகின்றது. பெரும்பாலான இந்நாட்டு மீனவர்கள் இன்றும் இயந்திரப் பொருத்தாத வள்ளங்களையே மீன்பிடித்தலுக்குப் பயன்படுத்துகின்றனர். இது முற்றிலும் பாதுகாப்பானதாயினும், இலாபகரமானதாயினும் இதன் ஒரு அலகுக்கான உற்பத்தி வினை திறன் இயந்திரப் படகை விடவும் மிகக் குறைவானதே. நாட்டின் மீன்பிடி உற்பத்தி அதிகரிக்கப்பட வேண்டுமாயின் மீன்பிடித்தலில் ஈடுபடும் அனைத்து படகுகளும் இயந்திர மயமாக்கல் தவிர்க்க முடியாத அவசியமாகும். எமது மீனவர்களுக்கு அந்நியதான இத்தொழில் நுட்பத்தை அவர்கள் பயன்படுத்துவதற்கு ஏற்றதாக அவர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டு உபகரணங்கள் வழங்கப்படல் வேண்டும் முன்னைய தவறு இதுதான். எஞ்சின்கள் அடிக்கடி பழுதாவதன் காரணமாக வேலை செய்யும் நாட்களின் எண்ணிக்கை இழப்பும், அதன் காரணமாக மீன்பிடிக் கடன்களைத் திருப்பிச் செலுத்த முடியாமையும் இத்தவறுகளுள் ஒன்ருகும். எனவே பழுது பார்ப்பதற்கான உதிரிப்பாக விற்பனைக் கடைகள், பழுது பார்ப்புச் சேவை நிலையங்கள், இத் தொழில் நுட்பத்தை ஏற்றுக் கொள்வதற்காக மீனவர்களுக்குப் பயிற்சி என்பன இத்துறையில் அத்தியாவசியமான முன் நிபந்தனையாகும்.

## மீன்பிடிக் கூட்டுறவுச் சங்கங்கள்

மீன் உற்பத்தியையும், சந்தைப் படுத்தலையும் விருத்தி செய்யும் பொருட்டு, 1940 ஆம் ஆண்டளவில், மீனவர்கள் தமக்கெனக் கூட்டுறவுச் சங்கங்களை உண்டாக்குவதற்குத் தூண்டுதல் அளிக்கப்பட்டது. அதன் விளைவாகத் தோன்றிய மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள், 20 முதல் 30 வரையான அங்கத்தவர்களை மட்டுமே கொண்டவையாக, மிகச் சிறிய ஆரம்ப சங்கங்களாகவே இருந்தன. மீன்பிடித் தொழிலை குறிப்பிட்ட அளவுக்கேனும் அபிவிருத்தி செய்யக்கூடிய அளவுக்கு பண பலமோ அல்லது மனித சக்தியோ அவற்றிடம் இருக்கவில்லை.

1970 ஆம் ஆண்டளவில் சுமார் 7,000 மீனவர்களை அங்கத்தவர்களாகக் கொண்ட 290 மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கின. கூட்டுறவுத் துறைப்பற்றி ஆராய்ந்த அரச ஆணைக்குழு சமர்ப்பித்த சிபார்சுகளைத் தொடர்ந்து, 271 சிறிய அளவிலான மீனவர் கூட்டுறவுச் சங்கங்களை 45 முதல்நிலைச் சங்கங்களுடன் இணைப்பதற்கு வழி சோலும் சட்ட மூலம் கொண்டுவரப்பட்டது. 1975ஆம் ஆண்டளவில், நாட்டில் மொத்தம் 14,628 மீனவத் தொழிலாளர் முதல்நிலைச் சங்கங்களில்

(16ம் பக்கம் பார்க்கவும்)

## ரூபா புனர் மதிப்பீடும் பொருளாதாரமும்

இவ் வருடம் மார்ச் மாதத்தில் ரூபாவின் பெறுமதி 20 வீதமாக புனர் மதிப்பீடு செய்யப்பட்ட போதிலும் வருடத்தின் முதல் 7 மாத காலத்தில் வர்த்தக ஏற்றுமதிப் பொருட்களின் பெறுமதி 1976 ம் ஆண்டின் இதே காலப் பகுதியிலும் பார்க்க 36 வீதம் அதிகரித்தது. தேயிலை இவ்வதிகரிப்பிற்கு பிரதான காரணமாக அமைந்தது. இக் காலப் பகுதியில் கப்பல் தளம் வரைக்குமான சராசரி விலை தொடர்ந்து உயர்ந்து சென்றது. இதனால் 72 கோடி 70 இலட்சம் ரூபா மேலதிக ஏற்றுமதி வருவாய் கிட்டியது. இருப்பினும் ஏற்றுமதி செய்யப்பட்ட அளவு சற்று வீழ்ச்சியடைந்தது. ஏனைய பிரதான ஏற்றுமதிப் பொருட்களும் அதிகரித்த வருவாயைக் கொண்டு வந்தன. பாரம்பரியமற்ற ஏற்றுமதிப் பொருட்களான இரத்தினக்கல் போன்றனவும் றப்பரும் அதிக வருவாயைக் கொண்டு வந்தன.

புசல் நெல் அறுவடை செய்யப்பட்டது. சென்ற 1975 - 76 அறுவடையை விட இத்தொகை 1 கோடி 25 இலட்சம் புசல்கள் அதிகமாகும். எனவே இது சென்ற வருடத்தை விட 30 வீத அதிகரிப்பைச் சுட்டிக் காட்டுகின்றது. இவ்வருட ஆகஸ்ட் - செப்டம்பரில் முடிவடையும் யால சிறு போகத்துக்கான கணிப்பீடுகள் இதுவரை கிடைக்கவில்லை. இருப்பினும் இக் காலப் பகுதியில் சாதகமான காலநிலை நிலவியதால் முன்னைய வருடங்களை விடவும் இந்த சிறு போகத்தில் சிறப்பான அறுவடை கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. பெருமளவிலான அறுவடையை எதிர்கொள்ள களஞ்சியப்படுத்துதல், நெல் குத்தல் போன்றவற்றிற்கான அவசர ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கணிப்பீடு செய்யப்படும் சாலகட்டத்துக்கான உப உணவுப் பொருட்களின் உற்பத்தி நிலை பற்றிய விரி

அட்டவணை 1.

**வாணிக ஏற்றுமதிகள்**

(பத்து இலட்சம் ரூபா)

| | 1977 | | | மிகை 1976 |
|---|---|---|---|---|
| | ஜூன் | ஜூலை | ஜன-ஜூலை | ஜன-ஜூலை |
| தேயிலை .. .. .. .. | 264.6 | 247.6 | 1795.9 | 727.2 |
| றப்பர் .. .. .. .. | 42.8 | 28.3 | 562.1 | 57.9 |
| தேங்காய்—3 பிரதான உற்பத்தி .. | 13.8 | 11.8 | 170.4 | 25.0 |
| இரத்தினக்கல் .. .. .. | 86.3 | 29.5 | 195.4 | 41.9 |
| ஏனையவை .. .. .. .. | 108.7 | 100:3 | 741.5 | 113.0 |
| மீள ஏற்றுமதிகள் உட்பட மொத்தம் .. | 516.2 | 417.5 | 3465.3 | 915.0 |

மூலம்: சுங்கப் பகுதி.

மூன்று முக்கிய தெங்கு உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதி தொகையளவிலும் பெறுமதியளவிலும் வீழ்ச்சியடைந்தது. முன்னைய வருடங்களில் நிலவிய வரட்சி தெங்கு உற்பத்தியைப் பாதித்தமையாலேயே இந்நிலை ஏற்பட்டது.

பெருந் தோட்டப் பயிர்களின் உற்பத்தியில் தேக்கமும் வீழ்ச்சியும் காணப்பட்டன. இவ் வருடத்தின் ஆரம்பப் பகுதியில் நெல்லுற்பத்தியில் குறிப்பிடத்தக்க விருத்தி தென்பட்டது. இவ்வாண்டு மார்ச் - ஏப்றல் மாதத்தில் முடிவடைந்த மகா பெரும் போகத்தில் 5 கோடி 48 இலட்சம்

வான தகவல்கள் கிடைக்கவில்லை. எவ்வாறிருப்பினும் இக் காலப் பகுதியில் நிலவிய சாதகமான காலநிலை, மிளகாய், வெங்காயம், ஏனைய தானியங்கள் போன்றவற்றின் உற்பத்தியில் அதிகரிப்பினை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

உள்நாட்டு விவசாயம், கடந்த சில வருடங்களில் காணப்பட்ட உற்பத்திக் குறைவிலிருந்து மீட்சியுற்று வருவதாகவே தென்படுகின்றது. இருப்பினும் பல முட்டுக் கட்டைகள் காரணமாக எதிர் விளைவுகள் தோன்றியுள்ளன. நெல் சந்தைப்படுத்தும் சபை, விவசாயிகளிடமிருந்து பெற்றுக் கொண்ட நெல்லினைக் களஞ்சியப்படுத்துதல், குற்றுதல் என்பனவற்றில் பல பிரச்சினைகளை எதிர்நோக்கியது. நெல்லுற்பத்தி அதிகரித்த போதிலும் அது அரிசி கோதுமை மா இறக்குமதிகளில் தாக்கத்தை ஏற்படுத்தவில்லை என்பதனை அட்டவணை 2 ல் அவதானிக்கலாம்.

1977 ம் ஆண்டின் ஜனவரி தொடக்கம் ஜூலை வரையிலான காலப்பகுதியில் அரிசி, கோதுமை மா இறக்குமதிகள் 1976 ம் ஆண்டின் இதே காலப் பகுதியிலும் பார்க்க அதிகரித்ததாகவே காணப்பட்டன. கடந்த வருடத்தில் வந்து சேரும் என்று எதிர்பார்க்கப்பட்ட சில உணவுப் பொருட்கள் எதிர்பார்த்தது போல் வந்து சேராமையால் இவ்வருட வாரம்சத்தில் பொதுமக்களுக்கு உத்தேசிக்கப்பட்டவாறு இவற்றை வழங்க முடியாது போயிற்று. இங்கு நிர்வாகத் தடங்கல்கள் திட்டங்களை குழப்பியடித்தமை குறிப்பிடத்தக்கது.

அத்தியாவசிய உணவுப் பொருட்கள், மிளகாய், வெங்காயம், மரக்கறி வகைகள் போன்ற உப உணவுப் பொருட்களின் விநியோகம் போதிய போக்குவரத்து வசதிகளின்மையால் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டு வந்துள்ளது. ஆகவே காலா காலத்தில் நிலவும் விலை ஏற்றத் தாழ்வுகள் எப்பொழுதும் உற்பத்தி வீழ்ச்சிகளுடன் தொடர்புடையதாகக் காணப்படவில்லை. போக்குவரத்து வசதிகளின்மை, ஏனைய பொருளாதார நடவடிக்கைகளிலும் பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளது. இவ்வருடத்தின் ஆரம்பப் பகுதியில் புகையிரதச் சேவையிலேற்பட்ட இடை நிறுத்தங்களால் சீமெந்தின் உற்பத்தியும் விநியோகமும் வெகுவாகப் பாதிக்கப்பட்டன. புத்தளம், காலி தொழிற்சாலைகளில் உற்பத்தி இயலளவு பெருமளவில் பாதிக்கப்பட்டு பரந்தளவிலான சீமெந்து தட்டுபாடு ஒன்று ஏற்பட வழி கோலியது. நுகர்வுப் பொருட்களைப் போலன்றி தொடர்ச்சியாக நிலவும் சீமெந்து தட்டுப்பாடு பொருளாதாரத்தில் நீண்டகாலப் பாதிப்பினை ஏற்படுத்தக் கூடியதாகும். மூலதன வாக்கத்தில் நிர்மாணம் மிக முக்கிய பங்கொன்றினை வகிப்பதுவே இதற்குக் காரணமாகும்.

1977 ம் ஆண்டின் ஜனவரி தொடக்கம் ஜூலை வரையிலான காலப் பகுதியில் வாணிக இறக்குமதிகளின் பெறுமதி கடந்த வரு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டத்தின் இதே காலப்பகுதி இறக்குமதியிலும் பார்க்க 88 கோடி ரூபா அதிகரிப்பைக் காட்டியது. சதவீதமான அடிப்படையில் நோக்கும் பொழுது இவ்வதிகரிப்பு வீதம் ஏற்றுமதி வீதத்துடன் ஒத்ததாக அதாவது 36 சதவீதமாக இருக்கின்றது.

இருப்பினும் இரண்டாவது அட்டவணையை நோக்கும் போது கோதுமைமா, துணிவகைகள், அரிசி போன்ற பாவனைப் பொருட்களே இவ் வதிகரிப்பிற்கு முக்கிய காரணமாக விளங்கின. இடைத்தர பொருட்கள், முதலீட்டுப் பொருட்கள் என்பனவற்றின் இற

அட்டவணை 2

**வர்த்தகப் பண்டங்களின் இறக்குமதி**

(ரூபா பத்து இலட்சங்களில்)

| | 1977 | | | 1976 மிகை |
|---|---|---|---|---|
| | ஜூன் | ஜூலை | ஜன-ஜூலை | ஜனவரி-ஜூலை |
| அரிசி .. .. .. | 120.1 | 38.2 | 561.7 | 131.9 |
| கோதுமை தானியம் .. .. | — | — | 101.4 | 11.4 |
| கோதுமை மா .. .. .. | 146.1 | 47.0 | 634.0 | 289.4 |
| சீனி .. .. .. | 19.8 | 18.7 | 111.6 | 105.4 |
| பாலுற்பத்தி .. .. .. | 21.4 | 7.9 | 62.8 | 38.3 |
| துணிவகைகள் .. .. .. | 39.8 | 13.3 | 312.1 | 188.1 |
| பசளை .. .. .. | 0.2 | 0.2 | 10.3 | —29.1 |
| சுத்திகரிக்கப்படாத எண்ணெய் .. | 65.5 | 124.4 | 599.4 | —20.6 |
| ஏனைய இறக்குமதிகள் .. .. | 149.9 | 113.9 | 1068.5 | 166.0 |
| மொத்த இறக்குமதி .. .. | 562.7 | 363.6 | 3461.6 | 880.8 |

மூலம்: சுங்கத் தரவுகள்

ரூபா புனர்மதிப்பினை நாம் கணக்கிலெடுக்காவிடினும் இது துரித உயர்வினைக் காட்டுகிறது. 1975 - 1976 ம் ஆண்டுக் காலப் பகுதியில் இறக்குமதிப் பெறுமதி 56 கோடி 30 இலட்சமாக வீழ்ச்சியடைந்து காணப்பட்டது. இதற்கு முன்னைய வருடத்தில் இறக்குமதிச் செலவு 69 கோடி 70 இலட்சம் ரூபாவாக அதிகரித்தது. தேயிலை விலைகள் கிரமமாக உயர்ந்து சென்று கொண்டிருந்ததினால் ஏற்கனவே சீராகி விட்ட வர்த்தக மாற்று வீதத்திற்கு 1977 ம் ஆண்டு மார்ச் மாத ரூபா புனர் மதிப்பு உந்து சக்தியாக விளங்கியது. அண்மை மாதங்களில் தேயிலை, அரிசி, என்பனவற்றைப் பொறுத்த வர்த்தக மாற்று வீதப் போக்கினைக் காணலாம்.

அட்டவணை 3

**இலங்கைக்கான வர்த்தக மாற்று வீதம்: தேயிலை/அரிசி**

1970 = 100

| | | | |
|---|---|---|---|
| 1976 | .. | .. | 76 |
| 1977 ஜூன் | .. | .. | 189 |
| ஜூலை | .. | .. | 155 |
| ஜன-ஜூலை | .. | .. | 128 |

உயர்ச்சிப் போக்கு உயர்வுடையதாக காணப்படுகிறது.

க்குமதிகள் 16 கோடி 60 இலட்சம் ரூபாவாக அல்லது 1976 ம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 18 சத வீதமாகவே அதிகரித்தன. அத்தியாவசிய பாவனைப் பொருட்களின் விநியோகத்தை அதிகரிக்கும் நோக்கத்துடனே புனர்மதிப்புச் செய்முறை மேற்கொள்ளப்பட்டது. பொருட்கள் கிடைக்கப் பெறும் தன்மை கட்டுப்படுத்தப்பட்டுக் காணப்பட்டதால் விலைகள் பல காரணங்களின் நிமித்தம் உயர்வாகவே காணப்பட்டன. வெளிநாட்டு வர்த்தகத்தை உயர்த்தும் நடவடிக்கையின் மற்ற அம்சம் யாதெனில் இறக்குமதித் தீர்வைகள், அந்நிய நாட்டுச் செலாவணி சான்றிதழ் திட்டங்களினால் அரசாங்க வருமானம் அதிகரிப்பதாகும். வாழ்க்கைச் செலவினைக் குறைக்கும் விரும்பத்தக்க விளைவை புனர்மதிப்பு கொண்டு வரவில்லை என்பதனை தரவுகளிலிருந்து அறியலாம்.

1976 ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் 201.5 ஆகக் காணப்பட்ட பாவனையாளர் விலைச் சுட்டெண் புனர்மதிப்பு அமுலாக்கப்பட்ட வேளையில் அதாவது 1977 ம் ஆண்டு மார்ச் மாதத்தில் 202.8 ஆக உயர்ந்து காணப்பட்டது. ஏப்ரல் மாதத்தில் சுட்டெண்ணில் மாற்றம் காணப்படவில்லை.

(18 ம் பக்கம் பார்க்கவும்)

(14ம் பக்கம் தொடர்ச்சி)

அங்கத்தவர்களாக இருந்தார்கள். இந்த எண்ணிக்கை நாட்டின் மொத்த மீனவர்களில் சுமார் 20 சதவீதமாகும்.

சிறு வள்ளங்கள் மூலம் தொழில் செய்யும் மீனவரின் மீன்பிடித்தல் முறை, சந்தைப்படுத்தல் என்பனவற்றைச் சீர்படுத்தி அபிவிருத்தி செய்வதிலேயே மீன்பிடிக் கைத்தொழிலின் வளர்ச்சி தங்கியிருக்கிறது என்பது பொதுவாக எல்லோராலுமே ஏற்றுக்கொள்ளப்பட்டதாகும். இதனைச் செய்வதற்கு அங்கத்துவ பலமும், செயல் ஊக்கமும் உள்ள மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் மிகவும் அவசியமானவையாகும். இதனால் 1970 ஆம் ஆண்டிலிருந்து, 3½ தொன் எடையுள்ள இயந்திரப் படகுகள் வாடகைக் கொள்வனத் திட்டத்தின் கீழ் முதல்நிலை மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டு வருகின்றன. இந்த 3½ தொன் எடையுள்ள இயந்திரப் படகுகள் மீன்பிடித் தொழிலில் மிகவும் முக்கிய பங்கு வகிப்பவையாகும். ஏனெனில் எமது நாட்டின் மீன்பிடித் தொகையில் 90 சதவீதமும் கரையோர மீன்பிடித்தல் மூலமே கிடைக்கிறது. இக் கரையோர மீன்பிடித்தல் மூலம் கிடைக்கும் மீன் தொகையில் அனேகமாக அரைவாசியும் 3½ தொன் படகுகள் மூலமே பிடிக்கப்படுகின்றன. அத்தோடு பிரஸ்தாப படகுகள், கரையோர மீன்பிடித்தலை இயந்திர மயமாக்கும் திட்டத்திலும் பெரும் பங்கு வகிக்கின்றன.

மீனவர்களுக்கென நிறுவப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் பணப்பலம் கொண்டவையாகவும் வருவாய் தரத் தக்கனவாகவும் விளங்கி அவற்றிடம் எதிர்பார்த்த முக்கிய பங்களிப்பை மீன்பிடி அபிவிருத்திக்கு வழங்கும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இந்தச் சங்கங்களில் பல, எதிர்பார்த்த அளவு பலனைத் தரவில்லை. பல சங்கங்கள் நிர்ணயிக்கப்பட்ட அளவு தொகை மீனைப் பிடிக்கவில்லை. பெரும்பாலான சங்கங்கள் மீன்பிடித் திணைக்கள் இயக்குநரிடம் இருந்து பெற்ற கடனைத் திரும்பச் செலுத்த முடியாமல் திணறின. 1975 ஆம் ஆண்டு இறுதியளவில், மீனவர் முதல்நிலை தர கூட்டுறவுச் சங்கங்கள் பெற்ற கடனில் திரும்பச்

(20ம் பக்கம் பார்க்கவும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய மகாவலிக் குடியேற்றங்கள்

மகாவலித் திட்டத்தில் மக்களைக் குடியமர்த்தும் திட்டம் இப்பொழுது ஒரு முக்கிய கட்டத்தை அணுகிக் கொண்டிருக்கிறது. ஆற்றின் குறுக்கே அணைகட்டி, வரண்ட பிரதேசத்திற்கு நீரைத் திசை திருப்பி, விவசாயத்திற்கான நிலப்பரப்பை ஆயத்தப்படுத்தும் வேலைகள் யாவும் ஓரளவு பூர்த்தி அடைந்துள்ளன. ஆனால் குடியேற்றத்திற்கான காணிகளை ஒதுக்கி, புதிய சமுதாயத்தினரை உருவாக்குவதிலே தான் இத்திட்டத்தின் வெற்றியே தங்கியுள்ளது. தண்ணீரோ, இயந்திர வகைகளோ அல்லாமல், குடியேற்றப்பட இருப்போரின் விருப்பு, வெறுப்பு, வசதிகள், அபிலாஷைகள் ஆகியன பற்றியே திட்டமிடுவோர் ஆழ்ந்து சிந்திக்க வேண்டியுள்ளது.

முன்னைய குடியேற்றத் திட்டங்களில் கிடைத்த அனுபவங்கள், குறைநிறைகள் ஆகியனவற்றை மனதிற் கொண்டே இந்தத் திட்டம் தயாரிக்கப்பட்டதாகக் கூறுகின்றனர். இதன் மூலம் உற்பத்தியைப் பெருக்கி, வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, வருமானத்தைக் கூட்டி, விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றமடையச் செய்து, தம்மைத் தாமே காத்துக் கொள்ளக் கூடிய ஒரு சமுதாயத்தை ஸ்தாபிப்பதே இத் திட்டத்தின் நோக்கம்.

ஏற்கனவே திட்டமிட்டபடி 6000 ஏக்கரில் 2,051 பேர் குடியமர்த்தப்பட்டனர். மற்றும் 12,000 ஏக்கரில் குடியமர்த்தப்படவிருந்த 4,001 பேரில் 2,256 பேர் ஏற்கனவே குடியமர்த்தப்பட்டுவிட்டனர். இந்தச் சந்தர்ப்பத்தில், திட்டத்தின் குறிக்கோள் நிறைவேறுமா அல்லது புதிய மகாவலி குடியேற்றத் திட்ட மக்கள் சமுதாயம் பற்றிய புதிய நடைமுறைகள் வகுக்கப்பட வேண்டியது அவசியமா என்பது பற்றி சிந்திக்க வேண்டியது அவசியம். திட்டத்தின் குறிக்கோளில் வெற்றி பெறுவதற்கென சில நடைமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. அவையாவன:

(அ) குடியேற்றத்திற்கு ஏற்ற குடியேற்றக்காரரை தெரிவு செய்வதற்கான முன்னேற்பாடான திட்டம்.

(ஆ) கூட்டுறவு அடிப்படையில் ஒன்றிணைந்து வாழக்கூடிய குடியேற்றத் திட்டம்.

(இ) பொருளாதார நடவடிக்கைகளை ஒன்றிணைப்பதற்கான மத்திய சேவை.

(ஈ) மேலிடத்து உத்தரவுகளை குடியேற்ற வாசிகளின் மேல் திணிக்காமல், அவர்களின் பிரச்சினைகளை உணர்ந்து அதற்கேற்ப செயற்படக்கூடிய அதிகாரிகளை நியமித்தல்.

(உ) குடியேற்ற வாசிகளிடையே தன்னம்பிக்கையை ஏற்படுத்தி, அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தக் கூடிய சமூக நலத் திட்டம்.

(ஊ) காணிகளைச் சொந்தமாக்கும் ஒப்பந்தங்களை வழங்குவதன் மூலம், வருமானத்தை அதிகரிக்க ஊக்கம் அளித்தல்.

## தெரிவு முறை

விவசாய அனுபவம், ஏனையோருடன் இணைந்து உழைக்கக்கூடிய நோக்கம், விவசாய குடும்ப நலன் பேணல் ஆகிய தகுதிகளை யுடையவர்களைத் தெரிவு செய்வதே மகாவலித் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். அதனால் உழைக்கும் தன்மை, குடும்ப நிலைமை, விவசாய அனுபவம், தொழில் நுட்பத் திறன், கல்வி நிலை ஆகியனவும் தெரிவின் போது கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

வயதில் குறைந்தவர்கள் அல்லது வயதில் முதிர்ந்தவர்கள் மற்றும் விவசாய அனுபவம் இல்லாதவர்கள் ஆகியவர்களைத் தவிர்க்கும் பொருட்டு, குடியேற்றத்திற்கு தெரிவு செய்யப்படுவோர் 30 க்கும் 39 க்கும் இடைப்பட்ட வயதினராய் இருத்தல் வேண்டும் என்பதும் திட்டம்.

ஆனால் 1974 ஆம் ஆண்டளவில், மக்கள் வங்கி ஆராய்ச்சிப் பிரிவினரால், "எச்-1" பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி 9.7 சத வீதத்தினரே மேற்கண்ட வயதெல்லைக்குள் இருப்பதாகத் தெரிய வந்தது. பெரும்பான்மையோர் 0-10 வயது எல்லைக்குள் அதாவது 34 சத வீதத்தினராய் காணப்பட்டனர். கீழ் அட்டவணை இதனை விளக்குகின்றது:—

வயது அமைப்பு

| வயது | | | சத வீதம் |
|---|---|---|---|
| 0-05 | .. | .. | 17 |
| 5-10 | .. | .. | 17 |
| 10-15 | .. | .. | 12.9 |
| 15-20 | .. | .. | 11.9 |
| 20-30 | .. | .. | 7.9 |
| 30-40 | .. | .. | 9.7 |
| 40-50 | .. | .. | 7.3 |
| 50-60 | .. | .. | 3.9 |
| 60 க்கு மேல் | .. | .. | 2.2 |
| | | | 100 |

இந்த ஆய்வின்படி, சுமார் 50 சதவீதமானோர், மற்ற 50 சதவீதமானோரைக் காப்பாற்ற வேண்டிய நிலையில் உள்ளனர். அத்துடன் 46.9 சதவீதமானோர் 15 வயதுக்கு உட்பட்டவராய் இருப்பதாலும், 17 சதவீதமானோர் 5 வயதுக்கு உட்பட்டவராய் இருப்பதாலும், பால் உணவு, கல்வி, வைத்திய வசதிகளுக்கு பெருஞ் செலவு ஏற்படும் என்பது தெளிவு. அதனால் வருமானம் செலவழிக்கப்படுமே தவிர முதலீடு செய்யப்பட முடியாது போய் விடும். இவ்வாறு நோக்கும்போது, நான்கு பேர் அடங்கிய குடும்பங்களே இத்திட்டத்திற்கு ஏற்றனவாகும்.

மேற்கண்ட மக்கள் வங்கி ஆராய்ச்சிப் பிரிவு ஆய்வின்படி 46 சதவீதமான குடும்பங்களில் 4 முதல் 7 பேர் இருப்பதாகத் தெரியவந்தது. ஒவ்வொரு வீட்டிலும் 7 பேரைக் கொண்ட 12 குடும்பங்களும், 11 பேரைக் கொண்ட 6 குடும்பங்களும் காணப்பட்டன. திட்டத்தின் குறிக்கோளுக்கு இது ஓரளவு ஒத்துப் போவதாயும் இருந்தது. எனினும் 1975-76 மகா போக காலத்தில் வேளாண்மை செய்யப்படாத குறிப்பிட்ட (எச் 1) பிரதேசத்தில் மகாவலி அபிவிருத்திச் சபை மேற்கொண்ட ஒரு ஆராய்ச்சியின் போதும் சில உண்மைகள் கண்டுபிடிக்கப்பட்டன.

வயது முதிர்ந்த தகப்பனுக்கும் மகனுக்கும் காணிகள் கொடுக்கப்பட்டிருந்தன. எனவே மகன் தனது வேலையை முடித்து வரும் வரைக்கும் தகப்பன் காத்திருக்க வேண்டி ஏற்பட்டுள்ளது. குடும்பத்தில் தொழில் புரியக்கூடிய போதியளவு ஆட்கள் இல்லாத குடும்பத்தினருக்கு எல்லாம் காணிகள் கொடுக்கப்பட்டிருந்தது தெரிய வந்தது.

கல்வித் தகைமைகளை ஆராயும் பொழுது உயர் கல்விக்கு என 10 புள்ளிகள் கொடுபட்டன. இதன் அடிப்படையில் நடைபெற்ற வங்கி ஆய்வின் போது, 173 பேர் அல்லது 46.26 சதவீத குடியேற்றவாசிகள் 5 ஆம் வகுப்பு வரையே படித்திருந்ததாகத் தெரியவந்தது. 103 பேர் அல்லது 27.51 சதவீதமானோர் அறவே படிக்காதவர்கள்.

ஆகவே பெரும்பான்மையோர் படிப்பு வாசனையற்றவர்கள் அல்லது 5 ஆம் வகுப்பு வரை மாத்திரமே படித்துள்ளவர்கள் என்பதைக் காணக்கூடியதாய் இருந்தது. 30 வயதுக்கு மேற்பட்டோருள் அநேகர் படிக்காதவர்கள், முக்கியமாகப் பெண்கள்.

பெண்கள் குடும்ப நலத் திட்டத்திற்கு மேற்கண்ட விபரங்கள் ஒரு குறைபாடாகவே தெரிகின்றன. ஏனெனில் இலக்கிய கல்வி மூலம் அல்லாமல், புதியதொரு திட்டம் மூலமே குடும்பநல திட்டம் போதிக்கப்பட வேண்டியுள்ளது.

வங்கி ஆராய்ச்சி முடிவுகள் போல், கல்வி அறிவில்லாத இக் குடியேற்றவாசிகள், தொழிலாளிகளாக இருக்க முடியுமே தவிர, அதிக திருப்தி தரக்கூடியவர்களாக இருக்க முடியாது. கணக்கியல் திட்டங்களுடன் அமையும் உயர் நிலைப் பண்ணைத் திட்டங்களுக்கும் இவர்கள் அருகதையற்றவர்கள் என்பதும் தெளிவு. எனவே இத்தகையோரிடம் இருந்து எதைத்தான் எதிர்பார்க்கலாம் என்பதை வங்கி ஆய்வு இவ்வாறு விளக்குகிறது:

"குடியேற்றத் திட்டங்களிலுள்ள குடும்பங்களிலுள்ள இளைஞர்கள், முதியோர்கள் மத்தியில், ஒருவரேனும் தகுந்த கல்வியோ அல்லது விவசாய, கால்நடைப் பயிற்சியோ பெற்றிருக்கவில்லை என்பதை குறிப்பிட வேண்டியுள்ளது. தெரிவு முறைத் திட்டம் எத்தகையதாய் இருந்த போதிலும், கிராமப்புற விவசாய தொழிலாள வர்க்கத்தினரே குடியேற்ற வாசிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்பதையும் குறிப்பிடுகிறோம்" என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

## தெரிவுப் பிரதேசம்

குடியேற்றவாசிகளைத் தெரிவுசெய்யும் போது அவ்வப்பகுதி மக்களுக்கே முதலிடம் அளிக்கப்படுகிறது. ஏனெனில் திட்டத்தின் 60 சதவீதமான காணிகள் தனிப்பட்டோருக்குச் சொந்தமானதாகும். எனவே தனிப்பட்டவர்கள் பாதிக்கப்படா வண்ணம், தெரிவு இடம்பெற்றது. ஆகவே (எச். 1) பிரதேசத்தில், ஒரு பகுதியை விட ஏனைய பகுதிகளில் அப்பிரதேச மக்களுக்கே இடம் அளிக்கப்பட்டது. நிர்மாண வேலைகள் காரணமாக காணி இழந்தோருக்கும் இங்கு இடம் அளிக்கப்பட்டது. போவதன்னை வாசிகளுக்கு எச் - 1 பிரதேசத்தின் 304வது புளக்கில் காணிகள் வழங்கப்பட்டன.

குடியேற்றத் திட்டத்தில் வதியாது, பிற இடங்களில் வதிபவர்கள் தமது நிலங்களை முதலில் கவனித்து விட்டு, அதன் பிறகே மகாவலி திட்ட காணிகள் பற்றி கவனஞ் செலுத்துகின்றனர். 1976-77 மகா போக வேளாண்மை குறைவுக்கு இதுவும் ஒரு காரணம் என்று மகாவலி அபிவிருத்திச் சபை கண்டுபிடித்துள்ளது.

குடியேற்ற வாசிகளைத் தெரிவு செய்வதில் தகுந்த செயல் முறை கடைப்பிடிக்கப்படாவிட்டால், அமுனுகம (1965), பார்னபாஸ் (1968), ஜயசூரியா (1964) ஆகிய குடியேற்றத் திட்டங்களுக்கு ஏற்பட்ட கதியே மகாவலி திட்டத்திற்கும் ஏற்படும் என்பதில் ஐயமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடி அமர்த்தல்

குடி அமர்த்தும் போது ஒரே சீரான திட்டம் இருந்தல் வேண்டும். அப்படியிருந்தால், பாரம்பரியம், கலாசாரம், விருப்பு, வெறுப்புகள் ஒரே தன்மையதாய் அமையும். இதை மனதில் கொண்டு, இப்பொழுது "எச் - 2" பிரதேசத்தில் மக்கள் குடி அமர்த்தப்பட்டு வருகின்றனர். 305 தொடக்கம் 310 வரையுள்ள பகுதிகளில், அந்தப் பிரதேச மக்கள் குடி அமர்த்தப்படுவர். 311 தொடக்கம் 314 வரையுள்ள புளக்குகளில் குருநாகலையைச் சேர்ந்தவர் புளக்குகளில் குருநாகலையைச் சேர்ந்தவர்கள் குடி அமர்த்தப்படுவர்.

ஆக 305 - 310 புளக்குகளில் ஒரே பகுதியைச் சேர்ந்தோர் குடி அமர்த்தப்பட்டுள்ளனர். மினிப்பேயைச் சேர்ந்த 121 பேரும் கலகெதரையைச் சேர்ந்த 100 பேரும் அங்கு குடி அமர்த்தப்பட்டுள்ளனர். அத்துடன் 311 - 314 புளக்குகளிலும், மினிப்பேயைச் சேர்ந்த மேலும் 180 பேர் குடி அமர்த்தப்பட்டுள்ளனர்.

## நீர்ப்பாசனப் பிரச்சினைகள்

தண்ணீரும், நீர்ப்பாசனமும் மற்றுமொரு முக்கிய அம்சமாகும். அமுனுகம அறிக்கையில் கூறப்பட்டதுபோல் சநதரிகா வேவா திட்டத்தில் முற்கூட்டியே காணிகள் பகிர்ந்து அளிக்கப்பட்டதால் பல பிரச்சினைகள் தோன்றின. ஆனபடியால் தான், நீர்ப்பாசன வாய்க்கால்கள் வெட்டி, நீர் பாய்ச்சப்பட்ட பின்னரே மகாவலி அபிவிருத்திச் சபை காணிகளைப் பகிர்ந்து அளிக்க நடவடிக்கை எடுத்தது. 1977 இல் சபை மேற்கொண்ட ஆய்வின்படி, வாய்க்கால்கள் வெட்டி, வயல்களுக்கு போதிய நீர்பாய்ச்ச வசதிகள் செய்யப்படாததாலேயே 16.6 சதவீதமான வேளாண்மை பாதிக்கப்பட்டது என்பது கண்டுபிடிக்கப்பட்டது. முன்கூட்டி காணி பகிர்ந்து அளிக்கப்பட்டதால் மகாவலி திட்டத்திலும் இக் குறைபாடு காணக்கூடியதாய் இருந்தது.

## கூட்டு முயற்சித் திட்டம்

பல பகுதி மக்கள் ஒன்றுபட்டு, உறவாடி, ஐக்கியமாக வாழ்வதே கூட்டு முயற்சித் திட்ட கொள்கையாகும். இரத்த உறவும் இதற்கு உதவும். ஆனால் பல பகுதி மக்களைப் பொறுத்த அளவில் இரத்த உறவு முக்கியமானதல்ல. பல பகுதி மக்களின் தன்மை காரணமாக, சமூக நலனும், அபிவிருத்தியும் முக்கியமாகக் கருதப்படுகிறது. ஒரே பகுதி மக்களைப்பொறாறுத்தளவில் இது வெகு சாத்தியமாகிறது. ஆனால் பல பகுதி மக்கள் ஒன்று சேரும் போது, சமூகத்தில் காணப்படும் மன வேற்றுமைகள் காரணமாக, ஐக்கியம் நிலவ கால தாமதம் ஏற்படவே செய்யும்.

மகாவலி குடியேற்றத் திட்டங்களில் இந்த கட்டு முயற்சித் திட்டங்களை கொண்டு வருவதற்குக் காரணம், அந்தப் பகுதிகளில் குக்கிராமங்களை அமைப்பதற்கேயாகும். குக்கிராமங்கள் அமைவதன் மூலம், அக் குக்கிராம மக்களிடையே கூட்டு முயற்சிகளையும் ஐக்கியத்தையும் வளர்ப்பதும் மிகவும் எளிதாகின்றது. ஆனால் பார்னபாஸ் (1968) திட்ட ஆய்வின்படி, தனிப்பட்ட, பிறரின் இடையூறு இல்லாத தனித்த வாழ்க்கையே 85 சதவீதமான குடியேற்ற வாசிகள் விரும்புவதாகத் தெரியவந்துள்ளது.

காணி அபிவிருத்தி நிறுவனத்தால் வடமத்திய மாநிலத்தில், புராண கிராமங்களில் கடந்த 40 ஆண்டுகளில் ஒதுக்கப்பட்ட காணிகளில் வாழ்பவர்களும், சேர்ந்து வாழாமல் தனித்து வாழ்வதையே விரும்புவதாகத் தெரிய வந்துள்ளது.

ஆகவே, இந்த திட்டங்களிலுள்ள இளைஞர்களும், தங்களுடைய குறைந்த கல்வி ஞானம் காரணமாக, கூட்டாகச் சேர்ந்து வாழாமல், தனித்து வாழ்வதைத் தான் விரும்புவார்களா என்பதில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

## காணியின் தேவையும் ஒப்பந்தமும்

மகாவலித் திட்டத்தில், 2 ஏக்கர் வீதமே காணி பகிர்ந்து அளிக்கப்படுவது வரையறுக்கப்பட்டுள்ளது. பரீட்சார்த்தமாக, மகா இலுப்பலம, பெல்விகார திட்டங்கள், இந்த அடிப்படையே, பயன் அளிக்கக்கூடியன என நிருபித்துள்ளன.

ஏனைய குடியேற்றத் திட்டங்களைப்போல் அல்லாது, இக் குடியேற்றத் திட்டத்தில் உள்ளோர், தமது காணிகளை, தவணை அடிப்படையிலோ அல்லது ஒரே தவணையிலே பணம் செலுத்தி சொந்தமாக்கிக் கொள்ள வசதி அளிக்கப்பட்டது. ஆனால் ஒருவரே, ஒரு காணிக்குச் சொந்தக்காரர் ஆக முடியும் என கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. பார்னபாஸ் திட்டத்திலுள்ள 50 சதவீதமானோர் இதை ஆதரிக்கவில்லை. ஏனெனில், குடும்பத்திலுள்ள ஏனைய பிள்ளைகளுக்கு பங்கு இல்லாமற் போய் விடும் என்பதற்காக.

ஆனால், கைத்தொழில்கள் மற்றும் வேலை வசதிகள் மூலம் இதற்குத் தீர்வுகாண மகாவலித் திட்டம் வழிவகுத்துள்ள போதிலும், இதுவரை அதற்கான வழிமுறைகளோ, செயல் திட்டங்களோ வருக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

அவ்வப் பகுதிகளிலுள்ள வைக்கோல், செங்கற்கள், கடற்தொழில் ஆகியன கைத்தொழில் அபிவிருத்திக்காக திட்டத்தில் காட்டப்பட்ட போதிலும், அந்தந்தப் பகுதிகளில் குடிசைக் கைத்தொழில் வளர, இருக்கும் மூலதனம் போதுமானதா என்பது சந்தேகத்திற்கு இடமானதாகவே உள்ளது.

காணிகளை ஒருவருக்கே சொந்தமாக்குவது என்பது பாரம்பரியத்துக்கு முரணானது என 45 சதவீதமானோர் கருதுகின்றனர். எனவே, பாரம்பரிய முறையான தட்டுமாறு, கட்டிமாறு நடைமுறையே ஏற்றது என இளஞ் சந்ததியினர் கருதுவதாகத் தெரிகிறது.

இப்படி நடக்கும் பொழுது, குடியேற்றத் திட்டங்களில் காணியற்று இருப்பவர்கள், அடுத்த பகுதிகளில் இருக்கும் காணிகளைக் குத்தகைக்கு எடுத்து விவசாயம் செய்ய முயல்வர். அதனால், மறைமுகமான ஒரு குத்தகை முறை தலைதூக்க ஏதுவாக இடமுண்டு.

மகாவலி குடியேற்ற திட்டத்தில் அரசாங்க ஊழியர்கள், ஆசிரியர்கள், வர்த்தகர்கள் ஆகியோரும் காணிகள் பெற்று தமது மூலதனம், கல்வி அனுபவம் முதலியனவற்றை முன்வைக்க முனைந்துள்ளனர். "எச் - 1" பிரதேசத்தில், 90 சதவீதமான அரசாங்க ஊழியர்கள் காணி பெற்றுள்ளனர். மற்றும் இப் பகுதிகளில் காணியை இழந்து, நஷ்ட ஈடு பெற்றவர்களும், சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஆதாயம் பெற முயல்கின்றனர்.

மகாவலித் திட்டத்தின் அடிப்படையில், ஒரு புதிய வகையான அதிகாரி நியமிக்கப் படவிருக்கிறார். குடியேற்ற வாசிகளின் பிரச்சினைகளை ஆராய்ந்து, அவர்களின் வழிகாட்டியாகவும், தொழில்நுட்ப ஆலோசகராகவும் கடமைபுரிந்து, விவசாயிகளின் திறமையைக்காட்ட வழிவகுத்துக் கொடுப்பதே இந்த அதிகாரியின் கடமையாய் இருக்கும். இதே அடிப்படையில் தான் பயிற்சித் திட்டங்கள் வகுக்கப்படும். திட்டத்தின் வெற்றியே இவர்களின் செயல் திட்டத்திலேயே தங்கியிருக்கும்.

இதே வேளையில், முன்னைய திட்டங்களின் தோல்விக்குக் காரணமாய் இருந்த அதிகாரிகளின் எண்ணங்களையும், திட்டங்களையும் எப்படிச் சமாளிப்பது என்பதும் பிரச்சினைக்குரிய கேள்வியாகும்.

மறைந்திருக்கும் ஆற்றலை வெளிக்கொணரக் கூடிய வகையிலேயே சமூக அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் ஒவ்வொரு சமூகத்தினதும் சுய தேவையைப் பூர்த்தி செய்து கொள்வதே குறிக்கோளாகும். இதே வேளையில், கமக்காரர்களின் நிறுவனங்கள், கமக்காரர்கள் தன்னம்பிக்கையுடன் வாழ வழிவகுக்க வேண்டும். சமூக அபிவிருத்தித் திட்டத்தை அமுலாக்கும் அதிகாரிகளிடையே, கமக்காரர்களின் நிறுவனங்களே அதிக ஆதிக்கம் காட்டக்கூடியதாக இருக்க வேண்டும். இதன் மூலம் விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முடியும்.

இத் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது பல பிரச்சினைகள் தலைதூக்கத்தான் செய்யும். சமூக நல அபிவிருத்தித் திட்டத்தை செயல்படுத்த முயலும் போது, விவசாயிகள் தமக்கென சுயமான, தனிப்பட்ட திட்டங்களை முன்வைத்தால் பிரச்சினைகள் தோன்றவே செய்யும்.

கட்டுப்பாடுள்ள ஒரு சமூகத்தை உருவாக்க, ஒவ்வொரு குடியேற்றத் திட்டமும் அதற்கேற்றவாறு அமைக்கப்பட வேண்டும். இதுவரை, இத்துறையில், எத்தகைய வெற்றி கிடைத்துள்ளது என்பது சிந்திக்கற்பாலது. இப்பொழுது சமூக அபிவிருத்தி திட்டங்கள் பற்றி அதிகாரிகளுக்கு கருத்தரங்குகள் நடத்தப்படுகின்றனவே தவிர, சமூக அபிவிருத்தி பற்றி அறிய எவரும் முயற்சிக்கவில்லை. புராணகால விவசாயிகள் மத்தியில் புதிய விவசாயிகளைக் குடியேற்றி, ஒற்றுமையைக் காண முயலுவதற்கு முன், திட்டத்தின் ஆரம்ப கட்டத்திலிலேயே இதுபற்றி தீவிர கவனம் செலுத்தி, தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியது மிகவும் அவசியம்.

---

## பொருளாதாரம்

(15 ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் மே மாதத்தில் விலைச் சுட்டெண் வீழ்ச்சி யடையும் என்று எதிர்பார்க்கப்பட்ட வேளையில் அது ஒரு புள்ளியாக அதிகரித்து 203.8 ஆகக் காணப்பட்டது. ஜூலை மாதத்தில் சுட்டெண் 204.2 ஆகக் காணப்பட்டது. வெளிநாட்டினால் ஏற்படுத்தப்பட்ட பணவீக்க நிலைமை நடைமுறையில் காணப்படாத சூழ்நிலையில் உள்நாட்டு வர்த்தக நடவடிக்கைகளின் சீர்கெட்டினால் ஏற்படுத்தப்பட்ட தட்டுப்பாடுகள் மேல் காட்டப்பட்ட சுட்டெண்ணில் சுருக்கப்பட்ட நிலையிலே காட்டப்பட்டுள்ளது.

அரசியல் நிச்சயமற்ற தன்மை நிலவிய சூழலில் முதலீடுகளுக்கான புதிய ஊக்கங்கள் காணப்படவில்லை. விவசாய உற்பத்தியிலும் வெளிநாட்டு வர்த்தக பிரிவிலும் பெறப்பட்ட நன்மைகள் விரும்பத்தக்க தொழில் வாய்ப்பு உயர்வுகளுடன் தொடர்புடையதாக விளங்கவில்லை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறப்புக் கட்டுரைகள்

# கிராம அபிவிருத்தி: ஒரு புதிய அணுகல்

— ஏ. ஏ. ஜஸ்டின் டயஸ்

இலங்கை மத்திய வங்கியின் பொருளாதார ஆராய்ச்சிப்பிரிவில் சிரேஷ்ட ஆய்வாளராகப் பணியாற்றும் கட்டுரையாளர், முன்னைய அபிவிருத்தித்திட்டங்களின் தோல்விக்கான காரணங்களைக் கருத்திற் கொண்டு கிராமிய அபிவிருத்திக்குப் புதிய முறையிலான திட்டங்களை உருவாக்க வேண்டியதன் அவசியத்தை இங்கு வலியுறுத்துகின்ருர்.

பொருளாதார அகராதியில் ஒரே கருத்துப்பட வழங்கப்பட்டு வந்த போதிலும், வளர்ச்சி அபிவிருத்தியிலிருந்து வேறுபட்ட ஒரு சொல்லாகும். வளர்ச்சி தேசிய வருமானத்துடன் தொடர்புற்றிருப்பதுடன் மொத்த உற்பத்தி அதிகரிப்பைச் சுட்டிக் காட்டுவதாக இருக்கின்றது. அபிவிருத்தி இதற்கு அப்பாலும் சென்று மூலவளப் பங்கீட்டில் ஏற்படும் மாற்றங்களையும், சமூக, நிறுவன அமைப்புக்களில் ஏற்படும் மாற்றங்களையும், விநியோக முறைகளில் ஏற்படும் மாற்றங்களையும் உள்ளடக்கியதாக இருக்கின்றது. எனவே அது வளர்ச்சியிலும் சமூக நலனிலும் தொடர்புற்றதாக இருக்கின்றது.

### அணுகல்

அபிவிருத்தியின் இறுதி இலட்சியம் சமூகத்தைக் கருத்திற் கொண்டதாகும். சமூகத்தின் சகல அங்கங்களிலும் மக்கள் நலனை விருத்தியுறச் செய்வதை அடிப்படையாகக் கொண்டதாகும். எல்லா அபிவிருத்தித் திட்டங்களுக்கும் சகல மக்களினதும் பங்களிப்பினைப் பெற்றுக் கொள்ளாத வரையில் அபிவிருத்தி சாத்தியமில்லை யென்பதனையே இது சுட்டி நிற்கின்றது. குறைவிருத்தி நாடுகளின் சனத்தொகையில் மிகப் பெரும்பான்மையினர் கிராமப்புறங்களில் வாழ்வோராக இருப்பதனாலும், அவர்களில் கணிசமான தொகையினர் முற்றிலும் வறிய நிலையிலிருப்பதனாலும் அபிவிருத்தித் திட்டங்களில் கிராமங்களுக்கு மிகக் கூடிய முக்கியத்துவத்தினை அளிக்க வேண்டியதன் அவசியத்தை இது வலியுறுத்துகின்றது. குறைவிருத்தி நாடுகளின் முன்னைய அபிவிருத்தித் திட்டங்களின் தோல்வி கிராம அபிவிருத்தியில் கவனம் செலுத்தப்படாமையினால் ஏற்பட்டதொன்றே என அபிவிருத்திப் பொருளியலாளர்கள் (அன்கெரீ, 1973: கொட்டர், 1974) வாதிட்டுள்ளனர். மேலும், கடந்த காலக்கொள்கைகள் செல்வந்தருக்கும் வறியோருக்குமிடையேயிருந்த இடைவெளியைப் பெரிதுபடுத்தியதுடன், சனத்தொகையினரில் பெரும்பான்மையோரைப் புறக்கணித்தும் விட்டன என அவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். ''பரவலான'' அல்லது ''ஒழுக்குமுறையிலான'' முன்னைய அணுகல்களின் தோல்வியை செல்வந்தருக்கும் வறியோருக்குமான விரிவான இடைவெளி பிரதிபலிக்கின்றது. இதன் விளைவாக, குறைவிருத்தி நாடுகளின் தற்காலத் திட்டமிடுவோரும், சர்வதேச நிறுவனங்களும் அபிவிருத்தி குறித்த தம் நோக்கினை மாற்றிக் கொண்டிருப்பதுடன், கிராமிய அபிவிருத்தியில் கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டியமை குறித்த புதிய கருத்துக்கள் இப்பொழுது தோன்றி வருகின்றன.

குறைவான சனத்தொகைச் செறிவினைக் கொண்ட பிரதேசங்களும், அதனுடன் தொடர்பான தனிமைப்படுத்தலும் விவசாய உற்பத்தியினை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார அடித்தளமும், நகர மக்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது வேறுபட்டதும் பின் தங்கியதுமான வாழ்க்கை நிலையினைக் கொண்ட மக்களினை உள்ளடக்கியதுமான பிராந்தியமே ''கிராமியம்'' என்ற சொல்லினுல் வழமையாகக் குறிக்கப்படுகின்றது. பூகோளம், தொழில், சமூக - பண்பாடு என்ற மூன்று பிரதான அம்சங்களை உள்ளடக்கியதாக கிராமியம் இருந்த போதிலும், குறைவிருத்தி நாடுகளைப் பொறுத்தவரையில் தொழில் அமைப்பு அம்சமே முக்கியத்துவம் பெறுகின்றது.

கிராம அபிவிருத்தி என நாம் எதனைக் கருதுகின்ருேம்? கிராம அபிவிருத்தி விவசாய அபிவிருத்தியிலேயே தங்கியிருந்த போதிலும், விவசாய விபிவிருத்தி கிராம அபிவிருத்தியல்ல என்பதனைத் தெளிவாக உணர்ந்து கொள்ள வேண்டும். அதிகரித்த உற்பத்தியினைக் கருத்திற் கொண்ட விவசாய விபிவிருத்தி, கிராம அபிவிருத்திக் கோட்பாடுகளுக்கு முரணுக இருந்துள்ளது என்பதனை அனுபவம் காட்டுகின்றது. பரந்த அளவிலான விவசாயத்துக்கு, குறிப்பாக ஏற்றுமதிப் பயிர்களின் உற்பத்திக்குக் கூடிய முக்கியத்துவமளிக்கப்படும் போது, அது கிராம மக்களின் வாழ்க்கையில் சீர்கேடுகளை ஏற்படுத்துவதுடன், வசதி படைத்தோருக்குச் சாதகமான வருமானப் பங்கீட்டினையும் உருவாக்குகின்றது என்பதனை நிரூபிக்கப் பல உதாரணங்கள் உண்டு. கிராமப்புறங்களில் கல்வி, சுகாதாரம் போன்ற துறைகளில் ஏற்படுத்தும் வளர்ச்சி, சமூக முன்னேற்றம் போன்றவற்றையே கிராமிய அபிவிருத்தி எனக் கருதும், பிரித்தானிய பதப்பிரயோகத்தினை அடிப்படையாகக் கொண்ட ஒரு போக்கும் நிலவி வருகின்றது. அபிவிருத்திச் செயற்பாட்டின் முக்கியமான உள்ளடக்கங்களாக இவை இருந்தபோதிலும், கிராம அபிவிருத்தி இதற்கப்பாலும் செல்லக்கூடியதொன்ருக இருக்கின்றது.

> ''கிடைக்கும் மனித, பௌதிக மூலவளங்களை உச்ச மட்டத்திற்குப் பயன்படுத்தி கிராமியச் செயற்றிறனைக் கூட்டுவதும், ஒட்டுமொத்தமாக கிராமிய மொத்தச் சனத்தொகையினரின் குறிப்பாக வறிய கிராமவாசிகளின் வாழ்க்கைத் தரத்தினையும், வருமான மட்டத்தினையும் அதிகரிக்கச் செய்வதனையும், அபிவிருத்திச் செயற்பாட்டில் அவர்களின் பூரணமான பங்களிப்பினைப் பெற்றுக் கொள்வதனையும் இறுதி இலட்சியங்களாகக் கொண்ட கொள்கைகளையும் திட்டங்களையும் உருவாக்குதல்''

கிராம அபிவிருத்திக்கு இவ்வாறுவரைவிலக்கணம் கூறமுடியும்.

சமீபத்தில் சில எழுத்தாளர்களும் (கொட்டர், 1974; ஆவியாட, 1975) உலக வங்கியினரும் கிராம அபிவிருத்தியை ஒரு கொள்கை இலக்காக வரித்துக் கொண்டுள்ளனர். எனவே ''வரையறுக்கப்பட்ட திட்ட'' உருவில் கிராம அபிவிருத்திக்கான பல ஆலோசனைகள் சமர்ப்பிக்கப்படுகின்றன. குறிப்பாக விவசாயத்துறையில் கிராமிய உற்பத்தி அளவினை அதிகரிப்பதன் மூலம் வாழ்க்கைத்தரத்தில் அடிப்படை மாற்றங்களை ஏற்படுத்துவனே இலக்காகக் கொண்டவையாக அத்திட்டங்கள் அமைந்துள்ளன. கிராம அபிவிருத்தியை தேசிய அபிவிருத்தித் திட்டங்களிலிருந்து வேறுபடுத்த வேண்டுமென்பதை இது குறிக்கவில்லை. தேசிய ரீதியான சமூக, பொருளாதார, அரசியல் ஒழுங்குகளுடன் கிராமியத்துறையினை ஒன்றிணைப்பதுவே கிராம அபிவிருத்திக் கோட்பாட்டின் சாரமாகும்.

ஒன்றிணைக்கப்பட்ட கிராம அபிவிருத்தி கிராமிய உற்பத்தி, உற்பத்தித்திறன், வருமானம் போன்றவற்றுடனும், அவற்றுக்குத் துணைபுரியும் மறைமுகக் காரணிகளுடனும் தொடர்புற்று அவற்றை உள்ளடக்கியதாக இருக்கின்றது. அல்லது கிராம மக்களின் நலன்களை உயர்த்துவதைக் கருத்திற் கொண்டுள்ளது. அநேகமான குறைவிருத்தி நாடுகளில் விவசாய அபிவிருத்தி கிராமிய அபிவிருத்தியின் அடித்தளமாகவும், பொருளாதாரத்தினதும் மக்கள் நலனினதும் உயர்ச்சிக்குத் தூண்டுதலாகவும் இருந்து வருகின்றது. சாதகமான அரசியல் சூழலின் தொடர்புடன் விவசாயக் கொள்கைகள் தேசியக் கொள்கைகளுடன் இணைக்கப்பட வேண்டிய அவசியம் இதனுலேயே எழுகின்றது. மொத்தத் தேசிய உற்பத்தியின் வளர்ச்சி வேகத்தைக் குறைப்பதாக இருந்த போதிலும், பொது அபிவிருத்திக் கொள்கைகள் கிராமிய வறுமை நிலையினைக் கருத்திற் கொண்டே உருவாக்கப்பட வேண்டும்.

அமைப்பு வேருக்கம், ஒன்றிணைக்கப்பட்ட செயல்கள், மக்களின் சமூக நலன் போன்றவை அபிவிருத்தியின் மூலாதாரக் கூறுகளாக இருப்பின், குறைவிருத்தி நாடுகளின் அபிவிருத்திச் செயற்பாட்டில் விவசாயம் மிக முக்கியமான பங்கொன்றினை வகிக்கின்றது. அதிகரித்த விவசாய உற்பத்தியே இச் செயற்பாட்டின் சுழற்சிக்கு முதலாவது தேவையாக இருக்கின்றது. அவ்வாருனதோர் அதிகரிப்பு விவசாயச் சனத்தொகையினரின் மெய் வருமானத்தினை அதிகரிக்கச் செய்வதன் மூலம் அவர்களின் கொள்வனவுச் சக்தியை விருத்தியாக்கும். உடனடி நுகர்வுக்கான சேவைகளினதும், விவசாயமல்லாத பொருட்களினதும் கேள்வியை மட்டுமன்றி, ஏனைய உற்பத்திகளையும், துணைச் சேவைகளையும் நிலைநிறுத்துவதாக இது அமையும். எனவே விவசாய வருமானம், விவசாயத்துறையிலும் ஏனைய துறைகளினதும் மூலதனவாக்கத்துக்குத் திசை திருப்பப்படுவதுடன், சமூகப் பொது முதலீடுகளைச் செய்து அதுவே மீண்டும் விவசாய உற்பத்திக்கு உறுதுணையாக இருக்கப் பயன்படுகின்றது.

### தடைகள்

விவசாய உற்பத்தி அதிகரிப்புக்குப் பல தடைகள் இருக்கின்றன. மனித, பௌதிக வளங்களின் பயன்பாட்டில் அதிகரிப்பினை ஏற்படுத்துவது ஓர் அடிப்படைப் பிரச்சினையாகும். விவசாய அமைப்பு முறையே இதற்குக் காரணமாகும். அநேகமான குறைவிருத்தி நாடுகளில் நிலத்தின் உரிமை ஒரு சிலர் கையிலிருப்பதுடன், தொடர்ந்த குத்தகைக்கான உத்தரவாதமோ, சட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரீதியான உரிமையோ இல்லாதவர்களால் அந்நிலங்கள் பயிரிடப்படுகின்றன. சில நாடுகளில் நிலத்தினை மறுபங்கீடு செய்வதற்காகப் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட போதிலும், இந்நிலையில் இதுவரை எந்தப் பாரிய மாற்றங்களும் நிகழவில்லை. பல்வேறுபட்ட கொள்கைகளினாலும் விளையும் நன்மைகளை, வசதியும் செல்வாக்கும் படைத்த ஒருசில பணக்கார விவசாயிகள் மாத்திரமே அனுபவிப்பதனால் உரம், நவீன விதைகள் போன்றவற்றின் விநியோகத்திலும் சமனின்மை நிலையொன்றே உருவாகியுள்ளது. விநியோக முறையிலுள்ள அநீதிகளின் விளைவாக இத் திட்டங்களினால் பெரும்பான்மையோர் அடையும் பலன் அற்பமானதாகவே இருக்கின்றது. எனவே, பல குறைவிருத்தி நாடுகளில் வாழும் விவசாயிகளும், நிலமற்ற தொழிலாளிகளும், உற்பத்தி அதிகரிக்க வேண்டுமென்பதிலிருந்த தம் ஆவலை இழந்துள்ளனர்.

விவசாய அபிவிருத்தியில் கிராமிய நிறுவனங்களும் ஏனைய தாபனங்களும் எதிர்நோக்கும் பிரச்சினைகள் நுண்ணியவையாக இருக்கின்றன. நிலத்தின் உரிமையும், ஏனைய உற்பத்திச் சாதனங்களும் சிறு தொகையினரின் கைகளில் தங்கியுள்ளன. விவசாயத்தில் ஈடுபட்டுள்ளோரில் பெரும்பான்மையினர் வறியவர்களாக இருப்பதனால் அவர்களின் நலவுரிமைகளைப் பேணுவதற்காக அமைக்கப்பட்டுள்ள நிறுவனங்கள் இவ் விவசாயிகளின் நலவுரிமைகளைப் பேணுவதில் வெற்றி காண்பதரிதாகவே இருக்கின்றது. திட்ட மிடுவதிலும், கொள்கை உருவாக்கத்திலும் மட்டுமன்றி அபிவிருத்தித் தொழிற்பாட்டிலும் கூட இவர்களின் பங்களிப்பு அற்பமானதாகவே இருக்கின்றது. கிராமத்தில் வாழும் வறிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதை அடிப்படை இலட்சியமாகக் கொண்ட கூட்டுறவுத்துறை கூட இவர்களின் தேவைகளைக் கவனிக்கத் தவறியுள்ளது. சிறிய விவசாயிகளுக்கு நிறுவனக் கடன் வசதிகளும், சந்தைப்படுத்தும் வசதிகளும் சிறிதளவில் இருக்கின்றன. கிராம சனத்தொகையினரில் பெரும்பான்மையினர் முழு அபிவிருத்தித் தொழிற்பாட்டிலும் ஒன்றிணைக்கப்படாமல் அபிவிருத்தியின் ஒரு முனையில் மட்டுமே நின்றிருப்பதற்கான பிரதான காரணியாக இதனைக் கருத முடியும்.

குறைவிருத்தி நாடுகளின் கிராமப்பகுதிகள், நகர்ப்புறங்களைப் போன்று வீடமைப்பு, சுகாதாரம், சமூக சேவைகள் போன்றவற்றில் மிகக் குறைந்த வசதிகளையே பெற்றிருக்கின்றன. மேலும் பொதுச் சேவைகளான பாதைகள், சனசமூக நிலையங்கள், நீர், மின்சாரம் போன்றவையும் குறிப்பிடக் கூடியளவு இல்லையெனலாம். சுகாதாரம், வீடமைப்பு, பொருளாதார தொழில் நுட்பம் போன்ற சகல துறைகளிலும் கிராமப்புறங்கள் புறக்கணிக்கப்பட்டவையாகவே இருக்கின்றன. விவசாய விஸ்தரிப்புச் சேவைகள் கூட பெரிய பண்ணைச் சொந்தக்காரர்களுக்கே கிடைக்கின்றன. சிறிய விவசாயிகள் எந்த நன்மையையும் பெறுவதில்லை.

சமீப காலத்தில் குறைவிருத்தி நாடுகள், ஆரம்ப நடுத்தர கல்வியினைப் பரவலாக்குவதற்குப் பல பாரிய நடவடிக்கைகளை எடுத்துள்ளன. கல்வி பரவலாக்கப்பட்டதுடன், பாடசாலைகளிலிருந்து வெளியேறுவோர் கிராமங்களில் வேலைகளின்றி தேங்கிக் கிடந்ததனால் தொழில் நிலைமைகள் மிக மோசமடைந்தன. கிராமப்புறங்களில் வழங்கப்பட்ட பொருத்தமற்ற கல்வியினாலேயே வேலையின்மை அதிகரித்ததென்பதில் சந்தேகமில்லை. 'காற்சட்டை உத்தியோகங்கள்' தவிர்ந்த ஏனைய தொழில்களில் இளைஞர்களைப் பயிற்றுவிக்கக் கூடியதாக கல்விமுறை உருவாக்கப்படவில்லை.

மேலும் விவசாயத்திலீடுபட்டிருந்த பலர் நவீன நுணுக்கங்களில் பரிச்சயமற்றவர்களாகவும், பாரம்பரிய உத்திகளைக் கையாள்பவர்களாகவுமிருந்தனர். விவசாய உற்பத்தி குறைவாக இருப்பதற்கு இதுவே காரணமாகும்.

## உபாயங்கள்

விவசாய அபிவிருத்தியில் எதிர்நோக்கும் தடைகளை வெற்றி கொள்வதற்கு விவசாயச் சீர்திருத்தம் முக்கியமானதொரு வழியாகும். விவசாய வளர்ச்சிக்கு இன்றியமையாத மூலவளங்களில் ஒன்றான நிலம் குறைவிருத்தி நாடுகளில் அருமையானதாகவே இருக்கின்றது. நிலத்தினை மறுபங்கீடு செய்வதற்கு உகந்த திட்டங்களை அமுல் நடத்துவதன் மூலமும், குத்தகைக்காரர்களின் உரிமைகளை பாதுகாப்பதன் மூலமும், பெருமளவில் பரந்து கிடக்கும் மூலவளங்களிலொன்றான உழைப்பினது உச்சப் பயன்பாட்டை அடைய முடியும். மேலும் இது உற்பத்தி அதிகரிப்புக்கும் வழிகோலும். விவசாய அமைப்பின் மாற்றமும், சீர்திருத்தங்களின் அமுல் நடத்தலும் பல பிரச்சினைகளை ஏற்படுத்தக் கூடியவை எனப் பலர் வாதிட்டுள்ளனர். இலாபகரமற்ற சிறு துண்டுகளாக நிலம் துண்டாடப்பட்டுவதும், தேசிய சட்டவாக்கத்திலிருக்கும் சிறு குறைபாடுகளும் இப் பிரச்சினைகளில் சிலவாகும். மேலும் விவசாயச் சீர்திருத்தங்களின் உருவாக்கத்திலும், செயலாக்கத்திலும் ஏற்படும் பலவீனங்கள் உழவனின் வாழ்க்கையில் சீர்கேடுகளை ஏற்படுத்த முடியும். எனவே விவசாயியோ வேலையாளோ நிலத்துக்கு உரித்துக் கொண்டாடுவதை அடிப்படை நோக்கமாகக் கொண்ட சீர்திருத்தங்கள் உருவாக வேண்டும்.

கிராமிய விவசாய உத்திகள் விருத்தியாக்கப்பட வேண்டும். ஆயினும், நவீன விவசாய நுணுக்கங்கள் குறைவிருத்தி நாடுகளுக்குப் பொருத்தமானவை எனக் கூற முடியாது. குறித்த நாட்டின் நிலைமைகளுக்கேற்ற தொழில் நுட்பங்களை அறிமுகப்படுத்துதல் முக்கியமானதொன்றாகும். விவசாய உபகரணங்கள் சிறு நிலத் துண்டுகளுக்குப் பொருத்தமாக இருப்பதுடன், மண் வளம், சாகுபடி முறைகள், பிராந்திய அமைப்பு போன்றவற்றுக்கு ஏற்றதாகவும் இருத்தல் வேண்டும்.

விவசாயத்தில் தொழில் நுட்ப முறைகளைப் புகுத்துதலை விரிவாக்குதற்குக் கிராமப்புறங்களில் கல்வியூட்டல் தகுந்த முறையில் இருத்தல் அவசியமானதாகும். தொழிற் பயிற்சியும், பண்ணைக் கல்வியும் அத்தகையதொரு கல்வித் திட்டத்தில் முக்கிய அம்சங்களாகும். தொழில் செறிவினை ஊக்குவிப்பதாக இத்திட்டங்கள் அமைய வேண்டும். கூடிய விளைச்சலைத் தரும் தானிய வகைகளை அறிமுகப்படுத்துதல் தொழில் செறிவை அதிகரிக்க வழிகோலும். விளைச்சலை இரு மடங்காக்குவதற்காக இப்புது தானிய வகைகள் பயிரிடப்படும் போது பயன்படுத்தப்படும் உரம், நீர் போன்றவை தொழில் செறிவை அடிப்படையாகக் கொண்டிருப்பதுவே இதற்குக் காரணமாகும்.

கிராம அபிவிருத்தியுடன் தொடர்பான பிரதான இலட்சியங்களில் ஒன்று சுகாதாரமாகும். மருந்தகங்கள், மருத்துவ பணிகள், வைத்தியர்கள் குறைவாக இருப்பதும், நீர்வசதிகள், சுகாதார வசதிகள் இல்லாமலிருப்பதுவும் சுகாதார நிலை சீர்குலைவதற்கான காரணங்களாகும். எனவே இவ்வாறான வசதிகளையும், சேவைகளையும் அதிகரிப்பதன் மூலம் மக்களின் உடல் நலத்தை விருத்தியாக்க முடியும். இதன் விளைவாக கிராமப்புறங்களில் தொழில் பயன்பாடும், விவசாய உற்பத்தியும் அதிகரிக்கும்.

(16ம் பக்கம் தொடர்ச்சி)

செலுத்த வேண்டிய நிலுவை மொத்தம் 83 லட்சம் ரூபாவாக இருந்தது. இத்தொகை 1,842 தொன் மீனைப் பிடிக்கக்கூடிய 101 இயந்திரப் படகுகளை வாங்குவதற்கும் போதுமானதாகும். $3\frac{1}{2}$ தொன் எடையுள்ள மீன்பிடிப் படகுகளை வாங்குவதற்குச் செலவாகும் பணத்தை இலகுவில் திரும்பச் செலுத்துவதற்கு அந்தப் படகின் துணை கொண்டு வருடாந்தம் 38,000 இறாத்தல் அல்லது 16.9 தொன் மீன் பிடிக்கப்பட வேண்டும். மீன்பிடித் திணைக்களம் நடத்திய மாதிரி மதிப்பீடு ஒன்றின்படி ஒரு படகின் துணைகொண்டு 50,982 இறாத்தல் அல்லது 22.76 தொன் மீன் பிடிக்க முடியும் என 1974 இல் கண்டறியப்பட்டது. இதனை அடிப்படையாக வைத்துப் பார்த்தால் $3\frac{1}{2}$ தொன் படகு மூலம் மீன்பிடித்தல் மிகவும் இலாபகரமானதாக இருக்க வேண்டும். ஆனால் பிரதம கூட்டுறவுச் சங்கங்கள் $3\frac{1}{2}$ தொன் படகுகள் மூலம் வருடாந்தம் 38,000 இறாத்தல் மீனைக் கூடப் பிடிக்கவில்லை.

பெரும்பாலான கூட்டுறவுச் சங்கங்கள் தம் கைவசம் இருந்த படகுகள் மூலம் பிடிக்கக்கூடிய மீன் தொகையில் வருடாந்தம் 30% வீதத்துக்குக் குறைவாகவே பிடித்துள்ளன. சிறிய சங்கங்களிடம் இருந்த படகுகள், பிரஸ்தாப சங்கங்கள் ஒன்றிணைக்கப்பட்ட வேளையிலேயே கூடிய அளவில் பயன்படுத்தப்பட்டன என்பதைக் கருத்திற் கொண்டாலும் கூட கூட்டுறவுச் சங்கங்கள் மிக மிகக் குறைந்த அளவு மீனையே பிடித்துள்ளன. பல 1970 ஆம் ஆண்டிற்குப் பின்னர் இயந்திரப் படகுகள் பெற்ற பல சங்கங்கள் கூட எதிர்பார்த்த அளவு தொகை மீனைப் பிடிக்கவில்லை என்பதும் கவலைக்குரியதாகும். இயந்திரப் படகில் மீன் பிடிக்கச் செல்லும்போது எடுத்துச் செல்வதற்குச் சங்கங்களிடம் போதிய வலைகள் இல்லாமலிருப்பது பெரிய பிரச்சினையாகும். இயந்திரப் படகுகளுக்குத்தேவையான ''கியர்'' தட்டுப்பாடு கூட்டுறவுச் சங்கங்களை எதிர்நோக்கிய மற்றொரு பிரச்சினையாகும். இவை ஒரு புறமிருக்க, மீனவர்கள் தாம் பிடித்த மீனில் ஒரு பகுதியை வியாபாரிகளுக்கு விற்று விட்டு மிகுதியையே கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கொடுத்து வந்துள்ளார்

(32ம் பக்கம் பார்க்கவும்)



Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்திக்கான விஞ்ஞானமும் தொழில் நுட்பமும்

## கண்ணோக்கு எல்லைகள்

— பொன்னு விக்கினராஜா

*1979 ல் நடைபெறவிருக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் அறிவியல், தொழில் நுட்ப மாநாட்டில் வாசிக்கப்படுவதற்காக இக்கட்டுரை தயாரிக்கப்பட்டுள்ளது. கட்டுரையாளர் பாங்கொக்கில் அமைந்திருக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் ஆசிய அபிவிருத்தி நிறுவனத்தில் பணியாற்றுகின்றார்.*

கடந்த கால் நூற்றாண்டு காலத்தில் முளைகயவிழ்த்துள்ள அபிவிருத்திப்படிமுறை, அபிவிருத்தியடைந்த நாடுகளதும் குறைவிருத்தி நாடுகளதும், அந்நாடுகளில் வாழும் தனி ஆட்களதும் பிரச்சினைகளைப் பெருக்கியுள்ளது. அபிவிருத்தியடைந்த நாடுகளில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை விருத்தி செய்வதில் பொருள் மதிப்புள்ள தொழில் நுட்ப முன்னேற்றங்கள் எந்த நன்மையையும் செய்யவில்லை. மாறாக இது அவர்களை அவர்களது சமுதாயத்திலிருந்து பிரித்து, சூழலை நஞ்சாக்கி, வளங்களை விரயமாக்கி அவர்களது அடிப்படைப் பெறுமானங்களைப் பொறுத்த மட்டில் நிச்சயமின்மையையும் ஒருவித பயத்தினையும் உண்டாக்கியுள்ளது. அவர்களது பொருளாதார முறையை நிர்வகிக்க முடியாத நிலையும் இளைஞர்களது விரக்தியும் தெளிவாகப் பரந்திருப்பதனால் செல்வந்த நாடுகளிலேயே சில அடிப்படை மாற்றங்கள் தேவைப்படுகின்றன. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் பெரும்பான்மையினரான ஏழைகள் மேலும் ஏழைகளாக மாறுவதோடு மட்டுமன்றி போஷாக்கு, உணவு, உடை, ஆரம்ப மருத்துவ உதவி, பாதுகாப்பான குடிநீர் வசதி போன்றவை இன்றி சஞ்சலமுற்றோராகவும் அபிலாஷைகளை நிறைவேற்ற முடியாதோராயும் உள்ளனர். மக்களது ஆக்கத்திறனும் ஆற்றல்திறனும் மலிந்துள்ள இவ்விருவகை நாடுகளிலும் வாழ்க்கை பூரணத்துவம் இன்றி இருப்பதுடன் வளங்கள் தொடர்ந்து துஷ்பிரயோகம் செய்யப்பட்டு பிரதான சமூக, அரசியல் முரண்பாடுகள் தீர்க்கப்படாது தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன.

இத்தகைய ஒரு சூழ்நிலை சம்பந்தமாக விஞ்ஞான அறிவினதும் தொழில் நுட்பத்தினதும் பிரயோகத்தினால் ஏதாவது செய்வதற்கான எந்தவித முயற்சிக்கும், ஆரம்ப படியாக கடந்த காலங்களின் படிப்பினை பற்றி அறிந்து கொள்வதும், சகல நாடுகளதும் மக்களதுமான சாத்தியப்பாட்டு உணர்வுகளின் அடிப்படையிலான எதிர்காலப் பார்வை யொன்றை உருவாக்கிக் கொள்வதும், சகல மனித இனத்திற்கும் நன்மை பயக்கக் கூடிய ஒரு புதிய அபிவிருத்திப் படிமுறையை இயக்கத்தில் வைப்பதும் அவசியமாகும். உடனடி எதிர்காலத்தில் சகல நாடுகளுக்கும் ஒரே மாதிரியாக இல்லாவிடினும் சாத்தியப்பாடுகளின் பார்வை. செல்வந்த நாடுகளின் அடிப்படைத் தேவையோடு ஒத்துப்போகக் கூடியதாக வறிய நாடுகளை அபிவிருத்தி செய்தற்கு வழிவகுக்கலாம்.

### பழைய அபிவிருத்திக் கட்டுக்கோப்பை புனராலோசனை செய்தல்

கடந்த கால் நூற்றாண்டு காலத்தில் அபிவிருத்திப்படி முறையில் செல்வாக்காற்றிய கட்டுக்கோப்பு "அபிவிருத்தி யடைந்த" நாடுகள் எனவும் "அபிவிருத்தி குன்றிய" நாடுகள் எனவும் இருவகை நாடுகள் உண்டென்றும் அபிவிருத்தி யென்பது "அபிவிருத்தி குன்றிய" நாடுகளின் பிரச்சினை யென்றும் அபிவிருத்தி யடைந்த நாடுகளின் அனுபவமும் அவற்றின் வளங்களும் அபிவிருத்தி குன்றிய நாடுகளுக்குப் பரிமாற்றம் செய்யப்பட்டால் அவற்றிற்கு இடையிலான இடைவெளி நெருக்கமாக்கப்படும் என்றும் கருதுகோள் கொண்டிருந்தனர். அவற்றினது நோக்கங்களும் படிமுறைகளும் பொருளாதார நியதிகளில் வைத்து நோக்கப்பட்டதோடு பொருளாதாரக் காரணிகள் மீது பாரிய நம்பிக்கை வைக்கப்பட்டிருந்தது: நகர மயமாக்கல், நவீன மயப்படுத்தல், கைத்தொழிலாக்கம் ஆகியவற்றில் கவனம் செலுத்தி ஒரு தட்டி நிமிர்த்தல் படிமுறையாக பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்தி ஒரு முனைப்படுத்தும் திட்டமொன்று அமையுமாயின் விரைவான பொருளாதார வளர்ச்சி இடம் பெறல் முடியுமெனக் கருதப்பட்டது. குறுகிய நிரம்பலில் உள்ள காரணியான மூலதனம் இப் படிமுறையில் பிரதான உட்செலுத்து மூலமாகவும் கொள்ளப்பட்டது. உள்நாட்டு மூலதனச் சேர்ப்பு, அந்நிய மூலதனமும் தொழில் நுட்பமும் உட்பாய்வதால் அனுகூலப்படுத்தப்படும். நவீன துறையில் இத்தகைய வகை வளர்ச்சியின் திரள் நன்மைகள் தானாகவே 'ஒழுகிப்படியும்' அல்லது கிராமப் பிராந்தியங்களில் கையளிக்கப்பட்டு விடுமென எதிர்பார்க்கப்பட்டது. ஏனைய மானிடப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு பொருட்சேர்ப்பு உதவுமென எதிர்பார்க்கப்பட்டது.

செல்வந்த நாடுகளுக்கும் வறிய நாடுகளுக்கும் இடையிலான 'அகன்று செல்லும் இடைவெளியும்' 'பசுமைப் புரட்சியின்' விளைவுகளும், வறிய நாடுகளில் செல்வந்தர்கள் மேலும் செல்வந்தர்கள் ஆவதற்கும் வறியோர் மேலும் வறியோர் ஆவதற்கும் துணைபுரிந்ததால் இப்படலமைப்பின் இன்றியமையாமையில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது. அதன் சொந்த நியதிகளிலேயே அபிவிருத்திக்கான அணுகு முறையிலும் ஒடுக்கமான "தொழில் நுட்ப - பொருளாதார" ப் பார்வையிலும் கட்டுப்பாடுகள் இருப்பதைச் சுட்டிக் காட்டுகின்றன.

வறிய நாடுகளுக்கு இம் மாதிரியின் இன்றியமையாமையும் அதன் ஒடுக்க மூலாதாரமும் ஒரு புறமிருக்க அந்நிய உதவியின் தரத்தினதும், தொகையினதும், குறுகிய நிரம்பலுள்ள காரணியான சுதேச மூலதனக் குறை நிறைப்பிற்கான தொழில் நுட்பப் பரிமாற்றத்தினதும், பலங்குன்றிய உள்நாட்டு இடப் பெயர்வு ஆற்றல்களும் எதார்த்தப் பாங்கு சிறிய இயக்கம் பெறுமான மாதிரியில் விரைவான வளர்ச்சியின் சாத்தியக் கூறுகள் தெளிபடுவது தொடர்பான கருதுகோள்களை ஏற்படுத்தி உள்ளன. அந்நிய உதவித் தொகையோ, அதன் தரமோ அபிவிருத்தி யடைந்த நாடுகளிலிருந்து அபிவிருத்தி குன்றிய நாடுகளுக்குப் பரிமாற்றம் செய்யப்பட்ட தொழில் நுட்ப வகையோ போதுமானவையாகவோ பொருத்தமானவையாகவோ எந்த வகையிலும் இல்லை

என்பதற்கு உலக வங்கிலிருந்தும் ஏனைய ஆய்வுகளிலிருந்தும் போதிய சான்று உண்டு. இன்று அநேகமான அபிவிருத்தியடைந்த நாடுகளில் அந்நிய உதவி சம்பந்தமான பராமுகம் ஒருபுறம் இருக்க முன்பிருந்த உதவி வழங்கலும் தொழில் நுட்பப் பரிமாற்றமும் ஒரு கடந்தகால விடயம் என்ற கருத்தையும், அவை சொகுசான சமூகங்களை உருவாக்க உதவி வறிய நாடுகளின் தங்கியிருத்தற் தன்மையை அதிகரித்துள்ளன என்ற கருத்தையும் ஆதரிக்கும் பொது அபிப்பிராயம் ஒன்று வளர்ந்து வருகிறது. மேலும் நவீன தொழில் நுட்பக் கையிருப்பைக் கட்டுப்படுத்துபவையும் அவற்றின் பரிமாற்றத்தின் பிரதான கருவிகளாய் இருப்பவையுமான பல தேசிய நிறுவனங்கள் தமது அறிவு முறைகளுக்கும் எந்திரத் தளபாடங்களுக்கும் அதியுயர்ந்த விலைகளைப் பிடுங்கிக் கொள்கின்றன. இவற்றிடமிருந்து ''கடன் வாங்கப்பட்ட'' அதியுயர்ந்த மூலதன ஈர்ப்புள்ள இறக்குமதிப் பதிலீட்டுத் தொழில் நுட்பம் அவை புகுத்தப்பட்டுள்ள வறிய நாடுகளில் ஏற்கெனவே உள்ள தொழில் நுட்பக் கையிருப்புடனே குறிப்பாக தொழில் அணி போன்ற யதார்த்த காரணி உடமையோடோ மிகச் சிறிய தொடர்புகளே கொண்டிருந்தன. இம் முழுப்படிமுறையும் விரயமானதும் முரன்பாடுகள் பல கொண்டதுமாகும்.

1960 கள் முழுதும் 1970 களின் ஆரம்ப வருடங்களிலும் அபிவிருத்தியின் ஒடுக்கமான தொழில் நுட்ப - பொருளாதாரக் கோட்பாடுகளைத் திருத்தவும், சில சீர்திருத்தங்களைப் புகுத்தவும் அடையாள முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. கீழ்க்கண்ட வழிகளில் நடந்து கொண்டால் திருத்தப்பட்ட பொருளாதார அபிவிருத்திப் படலமைப்பு இன்னும் 'திறமையாக' த் தொழில்படலாம் என சீர்திருத்த வாதிகள் வாதிட்டனர்:

(1) நோக்கங்களுக்குள் பரவலாக்கும் தன்மை வாய்ந்த, அல்லது சமூகப் பார்வையான நீதிகள் புகுத்தப்படல்.

(2) உயர் மட்டத்திலிருந்து கீழ் மட்டம் வரையுள்ள திட்டமிடல் செயற்பாட்டில் வெகுஜனப் பங்களிப்பைப் பெற்றுக் கொள்ளல்.

(3) செல்வந்த நாடுகளிலிருந்து வறிய நாடுகளுக்கு பொருத்தமான அளவு வருமான தொழில் நுட்பங்கள் தொடர்ச்சியாகப் பரிமாற்றம் செய்யப்படுவதை புதிய ஐ.நா. சர்வதேசப் பொருளாதார ஒழுங்கு உறுதிப் படுத்தத் தக்கதாய் இருத்தல்.

சீர்திருத்த வாதிகளின் கொள்கை பாரம்பரியமான அபிவிருத்திச் சிந்தனையை அடியொற்றியதாகத் தொடர்ந்தும் இருக்கிறது. கொள்கைத் திட்டங்களில் சமூக நீதி புகுத்தப்பட்டிருந்த போதிலும், அபிவிருத்தி என்பது அருமையாகவிருக்கும் வளங்களை பங்கீடு செய்யும் ஒரு பொருளாதார நடவடிக்கை என அவர்கள் கருதி வந்துள்ளனர். மேலும் இது, மாற்றத்துக்கான முரண்பாடற்ற சமூகப்படலமைப்பாக கருதுகோள் பெற்றுள்ளது. இதற்கு மாறான சான்றுகள் உளவான போதும், செல்வந்த நாடுகளிலிருந்து வறிய நாடுகளுக்கு வருமான, தொழில் நுட்பப் பரிமாற்றங்களை தொடர்ச்சியாகவும் ஒழுங்காகவும், நிலவும் சூழ்நிலைகளில் அனுமதிக்கக்கூடிய 'ஒருலகு' முறைக் கருதுகோள் இங்குள்ளது. இவை யெல்லாவற்றிற்கும் அடிப்படையாயுள்ளவை, அபிவிருத்திப் பிரச்சினைகள் இன்னும் பிரதானமாக அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் மத்திலேயே உள்ளது என்ற கருதுகோளும், சர்வதேச சமூகத்தினதும் அபிவிருத்தியடைந்த நாடுகளதும் உதவியுடனும் நல்லெண்ணத்துடனும் 'மேலிடத்திலிருந்து' செயலாற்றப்படக் கூடிய உத்தியோக வாய்ப்புச் சந்தர்ப்பங்களுக்கான முதலீட்டுத் தீர்மானம், அமைப்புரு ீதியான மாற்றங்கள் போன்ற தொழில் நுட்ப மேம்பாட்டுக் கருத்துக்களை அடியொற்றிய இடையீடற்ற 'கொள்கைக்கட்டு'த் தொகுப்புமாகும்.

ஐக்கிய நாடுகள் சபை அமைப்புகளிலும் உயர் கல்வி வட்டாரங்களிலும் நடந்த மாநாடுகளும் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளும், இன்றைய உலகை ஆட்கொண்டுள்ள பிரச்சினைகளின் இயல்பில் உள்ள மாற்றங்களையும், அபிவிருத்தி யடைந்த நாடுகளிலும் அபிவிருத்தி குன்றிய நாடுகளிலும் உள்ள அபிவிருத்தி 'நெருக்கடி' யின் பெருக்கத்தையும், அபிவிருத்தியின் தேசிய, சர்வதேசியப் பரிமாணங்களையும் பகுத்தாராய்ந்துள்ளன. இதன் தோல்வியினதும், கடந்த கால நூற்றாண்டு கால அபிவிருத்தி உபாயத்தினதும், அபிவிருத்தியடைந்த நாடுகளும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளும் சம்பந்தப்பட்ட சமூக, அரசியல் பிரச்சினைகளின் தன்மையினதும் ஆழத்தினதும் காரணங்கள் மீது தற்போது பெரிய அளவிலான விழிப் பேற்பட்டுள்ளது. இப் பிரச்சினைகள் தீர்க்கப்படாதவிடத்து கி.பி. 2000 ம் ஆண்டளவில் மனித குலம் ''மிகப் பெரிய ஒழுங்கீனம்'' ஒன்றுக்கு இட்டுச்செல்லப்படும். உலகப் பரிமாணத்தை அடைந்துள்ள இந் நெருக்கடிக்கான அமையக் காரணிகள் அபிவிருத்தி யடைந்து வரும் நாடுகளில் மட்டுமன்றி அபிவிருத்தியடைந்த நாடுகளிலும் உலக அமைப்பின் உண்மையான நடவடிக்கைகளிலும் கண்டறியப்பட வேண்டுமென்பதும் இப்போது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. மேலும் கீழ்க்கண்ட காரணிகளும் கூடுதலான வரையில் கற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

(அ) அபிவிருத்தி யென்பது அடிப்படையிலேயே மனிதப் பிறவிகளுடன் தொடர்புற்றதாகும். அவர்களைப் பாதிக்கும் தீர்மானங்களில் அவர்களும் பங்குகொள்ள வேண்டும்.

(ஆ) அபிவிருத்தி யென்பது இப்போது செல்வந்த நாடுகளதும் வறிய நாடுகளதும் விவகார மொன்றாகி விட்டது. அது அதன் முழுமையிலேயே வைத்து நோக்கப்பட வேண்டும்.

(இ) உலக மூல வளங்களும் தொழில் நுட்ப ஆற்றல்களும், உலகெங்குமுள்ள ஆண், பெண்களின் சிருஷ்டிவலுக்களை வெளிக்கொணர்வதன் மூலம் தகுந்த முறையில் இடம் பெயர்க்கப்பட்டால் அவ்வாண். பெண்களின் நியாயமான தேவைகளுக்கு ஈடு செய்யப் போதுமானவையாயிருக்கும்.

(ஈ) அபிவிருத்தி யென்பது ஒரு முன்னேற்றல் அப்பியாசமோ, தயார் நிலையில் வைக்கப்பட்ட உதவிக் கூடனே அல்ல. ஆனால் ஒவ்வொரு நாடும் அவற்றின் சொந்தப் பெறுமானங்களுக்கும், அரசியல் அமைப்பு முறைகளுக்கும், வளச் செழிப்புக்கும் அமைய நடவடிக்கை மேற்கொள்வதற்கு ஏதுவான அகமுதலுருப்படி முறையாகும்.

(உ) வளைந்து கொடுக்கக் கூடிய உலக ஒழுங்கொன்று தேசிய ஆற்றல்களின் குறை நிரப்பியாக உருவாக்கப்படலாம். ஒன்றையொன்று அனுசரணையாக வலுவுறுத்துவதாயும் அது அமையும்.

இத்தகைய ஏற்றுக் கொள்வனவு அளவு உணர்த்துவது என்னவெனில், பழைய படலமைப்பு தொழிற்படுமா என்று தொடர்ந்து வாதிடுவதிலும் பார்க்க, கடந்த காலப் படிமுறைகள் ரீதியாகவும் பெறுமானங்கள் ரீதியாகவும் கொள்கைப் படுத்துவதிலும் பார்க்க, செல்வந்த, வறிய நாடுகளின் உண்மையான வரலாற்று அனுபவங்களும் தற்போதைய தோற்றங்களதும் எதிர்கால ஆற்றற்றிறன்களதும் அடிப்படையில் அபிவிருத்தியின் புதிய பார்வையொன்று மேற்கொள்ளப்படலாம் என்பதாம்.

## புதிய அபிவிருத்தி உபாயத்தை நோக்கி

மேற்கூறப்பட்ட அபிப்பிராயத்தை அடியொற்றி எழுச்சியடைய ஆரம்பிக்கும் புதிய கொள்கைப் பாங்கான படலமைப்பு உலகம் முழுதும் தெரியக் கூடியதாகவுள்ள மாற்றத்திற்கான புதிய உந்து அணிகளுக்கு இடங் கொடுப்பதோடு மட்டுமல்லாது சகல இடங்களிலும் அபிவிருத்தியைப் பாதிக்கும் பாரதூரமான ஒன்றோடொன்று தொடர்புள்ள தோற்றப்பாட்டின் இணைவை அனுமதிக்கவும் செய்கின்றது. மாற்றத்திற்கான இத்தகைய உந்து அணிகளுக்கு ஒத்தியங்குவதானது, பகிர்வுநிலை அல்லது சமுகநிலை நீதிகள் உட்செலுத்தப்பட்ட படிமுறைகளோடு அதி திறமையாக இயங்கும் பொருளாதார அபிவிருத்தியின் பழைய படலமைப்பின் சீர்சிருத்தங்களிலிருந்து ஏற்பட முடியாதென்று இது சுட்டிக் காட்டுவதோடு அமையாது மானித ரீதியாக அபிவிருத்தியின் நோக்கங்களுக்கும் தத்துவங்களுக்கும் ஒருயாக அபிவிருத்தியின் நோக்கங் புதிய வரைவிலக்கணத்தையும், சூழ்நிலைக்கும் தொழில் நுட்பத் தோற்றத்திற்கும் விளைதிறனுக்கும் பொருந்தக் கூடிய மொத்த இடப் பெயர்வு ஆற்றலையும் வேண்டி நிற்கிறது. மறு பகிர்வு மட்டும் ஒரு பிரச்சனையாகாது. புதிய படலமைப்பு கிடைக்கக் கூடிய அறிவின் தொகையீடு ஒன்றையும், பழைய படலமைப்பிலுள்ள அபிவிருத்தியின் ஒடுக்கமான பார்வையை மீறிச் செல்லக் கூடிய நோக்க உணர்வையும் பிரதிபலிக்க வேண்டும். புதிய படலமைப்பை இயக்கத்திற்குக் கொண்டுவர முயலும் போது நாட்டு வரையறையான உபமாதிரிகள் உருவாகலாம். உபமாதிரிகள் இன்றியமையாதவையாயும் நடைமுறைச் சாத்தியமானவையாயும் இருக்குமாயின் புதிய படிமுறையையும் விசாலமான நோக்கங்களையும் கொண்டுள்ள ஊடுபார்வை ஒன்று ஒரு அத்தியாவசிய முன்னிபந்தனையாகும். புதிய நிறுவனங்களோடு கூடிய புதிய ஒழுங்குகளில் ஆதாரபூர்வமான சர்வதேச பரிணமம் ஒன்றும் தகுந்த தொடர் நிகழ்வில் உருவாக வேண்டியிருக்கும். இது நிலவும் சர்வதேசப் பொருளாதார உறவுகளின் தொகைப் பாங்கான விஸ்தரிப்பாக மட்டும் இருக்காது. ஆனால் இயக்கத்தில் வைக்கப்பட்ட தேசிய அபிவிருத்தியின் புதிய படிமுறையாக வெளித்தோன்றக் கூடிய ஒன்றாக அமையும், இத்தகைய சோட்பாட்டியல் படலமைப்பில் சேர்ந்துக் கொள்ளப்படக்கூடிய மூலகங்கள் கீழ்க்காணப்படும் அம்சங்களோடு வைத்துப் பரிசோதிக்கப்படலாம்:

(அ) குறுகிய தொழில் நுட்ப பொருளாதார ஒழுங்கிற்கு அமைவதைவிட அடிப்படை மனிதாபிமானப் பெறுமானங்களுக்கமைந்த அபிவிருத்தியின் குறிக்கோள்களின் அறிக்கை.

(ஆ) மக்களது உணரப்பட்ட தேவைகளுக்கு ஈடு செய்ய வல்ல கிடைக்கக் கூடிய தொழில் நுட்ப விளை திறனதும் இயற்கை வள உடைமையினதும் யதார்த்தமான மதிப்பீட்டிற்கும் ஒரு சேர்வுப் படிமுறையை நடைமுறைப்படுத்தல்.

(இ) தேசிய சர்வதேசிய சமூகங்களை அவற்றினது பிரச்சனைகளை கையாள்வதற்காக வேண்டி இடப் பெயர்வு செய்வதற்கான ஆற்றல்.

## புதிய நோக்கங்கள்

அபிவிருத்திக்கான ஒரு மாற்றீட்டு அணுகுமுறையின் பிரதான நோக்கங்களை சுருக்கமாகத் தொகுக்கலாம். உலகின் மிகப் பெரிய சொத்து அதன் மக்களே. அவர்களது விளை திறனையும் சிருஷ்டி ஆற்றலையும் வெளிக்கொணர்வதே அபிவிருத்தியின் அர்த்தமும் நிறைவும் ஆகும். அபிவிருத்தியில் மக்களை ஒரு சொத்தாக கருதாத அபிவிருத்தி உபாயம் முட்டுக்கட்டையில் முடியும். எந்த ஒரு படிமுறை ஆரம்பிக்கப்பட்டாலும் மக்கள் அதற்கு உரிமைப்படுத்தப்பட்டு பழகுணர்வோடு இருத்தல் வேண்டும். இது அவர்களது தேவைகளை முற்போக்சாக பூர்த்தி செய்வதோடு அவர்களைப் பாதிக்கும் தீர்மானங்களில் அவர்களைப் பங்கு கொள்ளவும் செய்ய வேண்டும்.

சுயத்தங்கியிருத்தலும், தேச நிர்மாணத்திற்கு பங்களிப்புச் செய்யக்கூடியதான ஆண் பெண்களது கூட்டு ஆளுமையும், இயற்கையாகவே, அபிவிருத்தியை வடிவமைப்பதற்கு மக்கள் முனைப்பாற்றல் இன்றியமையாததாயிருக்கும் இப்புதிய உபாயத்தின் அடிப்படை மூலகங்கள் உள்ளன. இது அவர்கள் தமது சொந்த ஆற்றல்களில் வைக்கும் நம்பிக்கையின் வெளிப்படையாகும். அவர்கள் தேசியக்குண நலம் வாய்ந்தவர்களாயிருந்தாலென்ன, சர்வதேசியக் குண நலம் வாய்ந்தவர்களாயிருந்தாலென்ன அவர்களது தங்கியிருத்தல் உறவுகள் தவிர்க்கப்படுவதையும், ஒரு நாட்டின் சொந்த முயற்சியினால் அபிவிருத்தியடைவதையும் பரஸ்பர உதவியின் பெறுமானக் கணிப்பையும் இது குறிக்கிறது. சுயத்தங்கியிருத்தல் ஒரு சுய நிறைவு என்ற குறுகிய கோட்பாட்டோடு மயக்க முறக் கூடாது. இப்படி முறைமுகை விரியும் போது, தேவைப்படும் ஒருவரையொருவர் தங்கியிருக்கும் மூலகம் இதிலிருந்து தோன்றுவது எதிர்பார்க்கப்படலாம்.

## புதிய படிமுறை

இந்நோக்கங்களை அடைவதற்கு சமூக பொருளாதார முன்னேற்றத்திற்கான நிபந்தனைகள், மக்களது ஆற்றல்களையும் சிருஷ்டி வல்லமைகளையும் வெளிக்கொணர்பவையும், அவர்களது வாழ்க்கையின் சகல அபிவிருத்திகளுக்குமாக இவற்றினை இடப் பெயர்வு செய்பவையுமான அம்சங்களாம். அளவிறந்த தொகையினரின் சமூகப் பரிமாற்றம் ஒன்று எதிர்பார்க்கப்பட வேண்டும். இவ் வர்த்தகத்தில் தேவையான அமைப்பியல் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு சுலபமான வழியில்லை. இம் மாற்றங்கள் மக்களது மருத்துணர்வுகளை உயர்த்

துவது தொடர்பான மொத்த இடப் பெயர்வின் தொகையீட்டுப் படிமுறையாலும், ஜனநாயகப் பெறுமானங்களின் ஈடுபாட்டாலும், உற்பத்திக் காரணிகளுக்குள் தொழில் வலுப்பரிமாற்றத்தாலும், உள்நாட்டு இயற்கை மூலவளங்களைப் பூரணமாகப் பயன்படுத்தலாலும், பொருத்தமான தொழில் நுட்ப அபிவிருத்தி முறையாலும், ஆதாரப்படுத்தப்பட வேண்டும். அநேகமான நாடுகளுக்கு இதுவும் வேகமான பொருளாதார வளர்ச்சிக்கு இட்டுச் செல்லக்கூடிய சேர்குவிப்பின் ஒரே பயன்பாட்டு முறையாகும். இத்தகைய இடப் பெயர்வுப் படிமுறைக்கு இப்போது போதியளவு வரலாற்றுதாரம் உண்டு. மேலும் தற்போது முன்தோன்றும் அபிவிருத்தி தொடர்பான அபிப்பிராயத்திலிருந்து இவ்விடப் பெயர்வுப் படிமுறை வெளிப்பாய்கிறது. இது மேற்கூறப்பட்ட நோக்கங்களோடு அனுசரணையாகச் செல்ல வல்லது.

இந்நான்கு இடப் பெயர்வுப் படிமுறைகளதும் மீள்விரிவு வரிசைக் கிரமமாகத் தரப்படுகிறது.

(அ) இத்தகைய இடப்பெயர்வுப் படி முறை சாத்தியமாக வேண்டுமெனில், பொதுசன உணர்வைத் தூண்டுதல், மக்கள் மீது நம்பிக்கை வைக்கும் ஒரு அர்ப்பணிக்கப்பட்ட தலைமை, பங்களிப்பு ஜனநாயகம், தீர்மானஞ் செய்தலைப் பன்முகப்படுத்தல், மக்களே ஒழுங்கு செய்யும் தொடர்ச்சியான சுய திருத்தச் செயல் முறை ஆகியவை மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதை இது உணர்த்துகிறது. ஒரு ஜனநாயக இலட்சியத்தின் சாரம் இதுவாகும். சமூகத்தின் பார்வை சம்பந்தப்பட்ட தீர்மானங்களும் சமூகப் பரிமாற்றத்தின் பாரிய பிரச்சினைகள் தொடர்பான விடயங்களும் நீங்கலாக, விரிவான தன்மையுள்ள ஏனைய சகல தீர்மானங்களும் பாதிக்கப்பட்டோரது நேரடி ஈடுபாட்டோடு எடுத்துக்கொள்ளப்படலாம். சிறிய விவரிப்புத் தன்மையுள்ளவையும், மக்களது முன்முனைப்புகளுக்கு ஆக்கந்தர வல்லவையுமான மக்களது வினைதிறன் வலுக்களை அர்த்தபூர்வமாக ஒரு முகப்படுத்தத்தக்க திட்டமிடலின் பாரிய பிரச்சினைகளுக்கிடையில் வேறுபாடு காணத்தக்க முறையொன்றை இது உணர்த்துகிறது.

(ஆ) உத்தியோக வாய்ப்பு ஒப்பந்தங்களை வழங்குவதனால் மட்டும் உற்பத்திக் காரணிகளுக்குள் தொழிற் காரணியைப் பரிமாற்றம் செய்யும் கைங்கரியம் நிறைவேறி விடாது. உற்பத்தியில் கூட்டுப் பங்களிப்பு மூலம் மக்கள் தொழில் செய்ய உத்வேகமளிக்கப்பட வேண்டும். கடந்த காலத்து மூலதன விலங்குகள் தொழிற் சக்தியினதும் சிருஷ்டி ஆற்றலினதும் முற்று முழுதான பயன்பாட்டிற்கு வழிவிட்டு உடைய வேண்டும்.

(இ) உள்நாட்டு மூலவளங்கள் ''சந்தைப் பொருளாதார நடைமுறை'' யின் அதிகாரத்தின் மூலம் பங்கீடு செய்யப்படவோ விநியோகிக்கப்படவோ கூடாது. ஆனால் புதிய ஸ்தாபன ரீதியான மாற்றங்களின் விளைவாக ''ஆற்றல் மிக்க கிராக்கியாக'' ஏற்படும் மக்களது உணர்வுபூர்வமான தேவைகளின் பூர்த்திக்கு அமையவே அவற்றின் பங்கீடோ விநியோகமோ இடம் பெற வேண்டும். இது ஒரு புதிய 'உற்பத்திப்பொருளை உணர்த்துவதோடு, முதலில் அயல் பிராந்தியங்களோடும் அதன் பின்னர் தூரதேசப் பிராந்தியங்கள் முதலானவையோடும் பரிமாற்றம் செய்து கொள்ளப்படும் மேலதிகங்களினால் நிரப்பப்படும் இடைவெளிகளின் உதவியோடு முடிந்தளவுக்கு அதிகபட்ச உள்ளூர் மூலவளங்களின் துணையோடு உள்ளூர்த் தேவைகளை ஈடு செய்வதையும் உணர்த்துகிறது.

(ஈ) இதில் சம்பந்தப்படுத்தப்படும் தொழில் நுட்பம் வேறு நிலைக்களங்களிலிருந்து நேரடியாகக் கொண்டு வரப்பட்டதாக இருக்காது. ஆனால் கிடைக்கக்கூடிய உள்ளூர் மூல வளங்களோடு மனித அபிவிருத்தியைத் தொகையீடு செய்யும் ஒன்றாக இருக்கும். வேறு வார்த்தையில் சொல்வதானால் தொழில் நுட்பத் தேர்வு உபாயம், அடிப்படைச் சமூக தத்துவத்திற்கும் மூலவளக் கையிருப்பு நிலைக்கும் தொடர்புறுத்தப்படும். இப் படிமுறை ஏற்கனவே உள்ள தொழில் நுட்ப அளவு மட்டத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்டுப் பின்னர் விருத்தியுறச் செய்யும் அதே வேளையில் நவீன ஆடம்பர தொழில் நுட்பமும் உபயோகிக்கப்படலாம். இது அவ்விரண்டிற்கும் இடையிலுள்ள இணைப்பை வலுவாக்கி நோக்கங்களை அடைய வழி செய்யும். தொழில் நுட்ப உட்பாய்ச்சல் ஒரு முனைப்பட்சமாக இருக்காது செல்வந்த நாடுகளும் வறிய நாடுகளிலிருந்து பொருத்தமான தொழில் நுட்பங்களை தார்மீக அடிப்படையில் கடனாகப் பெற வேண்டும். உபயோகிக்கப்படும் தொழில் நுட்பம் பராதீனப்படுத்தப் முடியாதிருக்க வேண்டும். அங்ஙனம் அமையுங் காலே மனிதனின் முழு அந்தஸ்திற்கு மதிப்பளிக்கப்பட்டு அது தானாகவே இயற்கையான சூழ்நிலையையும் உளவியல் ரீதியான நிலைகளையும் முன்கொணர ஏதுவாகும்.

இத்தகைய உபாயத்தில் ஈடுபட்டு முன் செல்வதில் பல் சிக்கல்கள் உள. இச் சிக்கல்கள் அபிவிருத்தியடைந்த நாடுகளதும் அபிவிருத்தி குன்றிய நாடுகளதும் சகல சமூகங்களிலுமுள்ள மக்களது வாழ்க்கை நெறிமுறைகளிலும் அவர்களது அடிப்படைப் பெறுமானங்களிலும் உண்டாகும். இறுதி நன்மைக்காக வேண்டப்படின் புதிய படிமுறை செயலில் இருக்கும் காலம் வரை நாடுகள் கடினமான ஒரு காலக்கட்டத்தைத் தாண்ட வேண்டியதாயிருக்கும். அடிப்படை அர்த்தத்திற் சொல்வதாயின் இது நிறுவனங்கள், படிமுறை, பெறுமான அங்கம், இலக்கு ஆகியவற்றை புனர்வடிவமைப்புச் செய்யக் கோரும். புதிய உபாயத்திற்கான முக்கிய சூழ்நிலை இசைவுப்படுத்தலாக சுயத்தங்கியிருத்தல் அபிவிருத்தியை நோக்கி மேற்கொள்ளப்படும் செய்திகளுக்கு, அபிவிருத்தியின் உணர்வுப் பாங்கான தேவைகளை மக்கள் மூலமே இணைப்பதும், சர்வதேச உறவு முறையைத் தக்கவாறு மாற்றமைப்புச் செய்வதும் அவசியமாகும். ஒரு

புதிய சர்வதேச ஒழுங்கிற்கு ஆதரவாக ஏற்கனவே முன்வைக்கப்பட்ட முன்மாதிரியை இவை வழங்கக் கூடியதாக, இயலக்கூடிய போதெல்லாம் சமூகங்கள் கூட்டுச் சுயத் தங்கியிருத்தல் தொடர்பாக உத்வேகப்படுத்து தற்காகவே இவை அவசியமாயுள்ளன.

அபிவிருத்தி யென்பது ஒரு மொத்தப் படிமுறையாகவே நோக்கப்பட வேண்டும். கடந்த கால் நூற்றூண்டு காலமாக நடைமுறையில் இருந்ததும் சிந்தனையில் செல்வாக்கியற்றியுள்ளதுமான தொழில் நுட்பச் சர்வாதிகார அணுகுமுறை இப்படி முறையைத் துண்டு துண்டாக்கி ஒடுக்கமான விசேஷ துறைகளாகப் பிரித்துவிட்டது. கலாத்துக் குகந்தவாறு இப்படி முறை கருமமாற்ற வேண்டின் முழு அணுகு முறையினையுமே புனர் பரிசீலனை செய்வது அத்தியாவசியமானதாகும். ஒரு உலகளாவிய தேசிய இனங்கள் மத்தியில் வளர்ச்சி வழிப்பட்ட சமூகங்களை மனிதாபிமானமானவையும் சுயத்தங்கி யிருத்தற்றன்மை வாய்ந்தனவயுமான மூலகங்களாகப் பரிமாற்றஞ் செய்வதற்கு, திடசித்தமான, சிந்தனு பூர்வமான நடவடிக்கைகளையும், அர்ப்பணிப்பையும், சம்பந்தப்பட்ட சகலரினதும் பங்களிப்பையும் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். எனினும் மேலே இனம் காணப்பட்ட படலமைப்பானது, எதிர்கால நடைமுறைக்குத் தேவையானவற்றோடு தொடர்புறுத்தப்படுவதற்கு தேசிய அமைப்பு முறையினைத் தூண்டும் ஒரு பார்வையாக இது கருதப்பட வேண்டும்.

**விஞ்ஞான தொழில் நுட்ப அபிவிருத்திக்கான பிரச்சினைகள்**

விஞ்ஞான விசாரணைக்கான முழு வினைதிறனும், அத்தகைய விசாரத்தின் விளைவுகளை சமுதாய மாற்றக் கைங்கரியத்திற்கும் மனித சிருஷ்டியையும் அந்தஸ்தினையும் உயர்த்துதற்கும், முறையாகப் பயன்படுத்துதலும் இனிமேற்றான் நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளது.

பழைய படலமைப்பில் நவீனமயப்படுத்தற் கொள்கையும் அபிவிருத்தி யடைந்த நாட்டு அனுபவங்களான 'கண்டு பாவனை'ப் படிமுறையும், அபிவிருத்தியடையும் நாடுகளுக்கெனக் கையிருப்பு வைத்துள்ள அபிவிருத்தியடைந்த நாடுகளிலிருந்து பரிமாற்றம் செய்யப்படத்தக்க தொழில்நுட்பக் குதம் ஒன்றும் விஞ்ஞான அறிவுக் கையிருப்பும் நிலவி வருவதை உணர்த்துகின்றன. விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் தொழில் நுட்பவியற் பிரச்சினைகளென்றும் அவை பிரதானமாக உற்பத்திப் படிமுறையோடு தொடர்புற்றிருந்தனவென்றும் அக் கருதுகோள் இருந்தது. இதன் விசாலமான அரசியல், சமூக, சூழியல் உடந்தைகள் தொடர்பான கேள்வியும் தொழில் நுட்பம் யாருடைய கட்டுப்பாட்டினில் உள்ளதென்ற கேள்வியும் இதுவரை யாராலும் கிளப்பப்படவில்லை. ஏனைய கையிருப்புகள் இருப்பது பற்றிய உண்மையும் சிறிதும் உணரப்படவில்லை.

இன்று, செல்வந்த நாடுகளிலும் வறிய நாடுகளிலும் உள்ள மக்களின் வாழ்வில் தொழில் நுட்ப அபிவிருத்திகளின் சமூகத் தாக்கம் அறியப்பட்டதோடு கடந்த கால அபிவிருத்தி அனுபவங்கள் வறிய நாடுகளின் மக்களை அடையத் தவறியதோடும் அபிவிருத்தியில் விஞ்ஞான தொழில் நுட்பங்களின் முழு நடவடிக்கையும் அதன் மனித இனத்தின் எதிர்காலத்திற்கும் உலக முறைமைக்குமான விசாலிய ஈடுபாடுகளும் பிரதான முக்கியத்துவத்தைப் பெறுகின்றன. பழைய பரிமாற்ற இயக்க முறையின் போதாமை, இப்படி முறையின் பிரதான பாத்திரங்களினால் புகுத்தப்பட்ட திரிபுகள், பரிமாற்றப்படி முறைக்கான இயலக்கூடிய விரித்திகள் போன்ற பிரச்சினைகள் இரண்டாந்தர முக்கியத்துவம் பொருந்தியவையாகும்.

அபிவிருத்தியாளர்களும், தொழில் நுட்பவியலாளர்களும் தம்மைத்தாமே ஒரே மாதிரிக் கேட்டுக்கொள்ள வேண்டிய அடிப்படைக் கேள்விகள் வருமாறு:

புதிய விதமான அபிவிருத்தியை ஏற்படுத்த எத்தகைய விஞ்ஞான அறிவும் தொழில் நுட்பப் பிரயோகமும் தேவைப்படுகின்றன? மூலவள உடைமைக்கு தொழில் நுட்பம் எப்படி அதிக பொருத்த முடையதாய் அமையும்? தொழில் நுட்ப உறவுகள் எந்த அளவுக்குத் தாமாகவே சுரண்டல் தன்மை யற்றவையாயும் சமூக உறவுகளை விருத்தி செய்யக்கூடியவையாயும் இருக்கும்? பாரம்பரியமற்ற வழிகளில் இருந்தெனினும் கிடைக்கக்கூடிய ஏற்கனவேயுள்ள வேறு விஞ்ஞான அறிவுத் தொழில் நுட்பக் கையிருப்புகள் ஏதாயினும் உளவா? அவை உடனடியாகப் பிரயோகம் பெறத்தக்கதாக அமையுமா? ஏற்கனவேயுள்ள பொருத்தமான தொழில் நுட்பத்துடன் கூடவே பாரிய அளவிலான மக்கட் கூட்டத்தினிற்குச் செவிக்க புதிய விஞ்ஞான அறிவுக் கையிருப்பொன்று உண்டாக்கப்பட வேண்டுமா? யார் எப்படி இப்பொருத்தமான தொழில் நுட்பத்தை உண்டாக்க வேண்டும்? அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் மூளைசாலிகள் வெளியேற்றத்தின் காரணங்கள் என்ன? செல்வந்த நாடுகளிலிருந்து வறிய நாடுகளுக்கு செல்வதும் வறிய நாடுகளிலிருந்து செல்வந்த நாடுகளுக்குச் செல்வதுமான இருமுனை பரிமாற்ற நடைமுறை ஏன் முதலிடம் பெறக் கூடாது? இப்படி நடைபெறுங்கால் செல்வந்த நாடுகளிலிருந்து வறிய நாடுகளுக்குச் செய்யப்படும் சில தெரிவு செய்யப்பட்ட பரிமாற்றங்கள் வறிய நாடுகளின் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்க்க உதவலாம். அதற்கெதிரிடையாக தார்மீக அடிப்படையில் வறிய நாடுகளிலிருந்து செல்வந்த நாடுகளுக்குச் செய்யப்படும் தொழில் நுட்ப பரிமாற்றங்கள் செல்வந்த நாடுகளின் சமூகப் பிரச்சினைகளை குறைப்பதற்கு உதவலாம். மூன்றுவதான அதே பிரச்சனைகளும் ஈடுபாடுகளுமுள்ள அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கிடையிலான பரிமாற்றத்தின் மூலமும் சில பிரச்சினைகளைத் தீர்க்கலாம். இச் சகல பிரச்சினைகளும் ஒன்றை ஒன்று தொடர்புடைத்தாய் இருப்பதோடு ஒரே நேர காலத்தில் பரிசீலனை செய்யப்பட வேண்டியவையுமாகும். உதாரணமாக தற்போது செல்வந்த நாடுகளினால் உபயோகிக்கப்படும் புதுப்பிக்கப்பட முடியாத வலுமூலங்களின் வளமாதிரியும் உபயோக வீதமும் மனித இனத்திற்கு நீண்டகாலச் சிக்கல்கள் ஏற்படுத்துவதற்கு எதிராக அதிருப்தி வளர்ந்துள்ளது. ஒருபுறத்தில் ஏற்கனவே வெளிப்படையாகத் தெரியும் சூழ்நிலை, தர இறக்கத்திற்கும், மறுபுறம் அத்தியாவசியப் பொருட்களின் நீண்டகால நிரம்பல் கிராக்கி சமன்பாட்டிற்கும் அமைய, தற்போதைய நுகர்வு மாதிரி எதை உணர்த்துகிறதென்பதோடு இவ்

(32 ம் பக்கம் பார்க்கவும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய காலனித்துவம்: பயனேதுமற்ற சுற்றுலாத்துறை

— ஜக்ஸ் பக்னிகோர்ட்

திரு. ஜக்ஸ் பக்னிகோர்ட், ஐ.நா. சுற்றாடல் பயிற்சித் திட்டம், (நைரோபி) பொருளாதார அபிவிருத்திக்கும் திட்டமிடலுக்குமான ஆபிரிக்கக் கழகம், (டகார்) சுவீடிஷ் சர்வதேச விபிவிருத்தி அதிகார சபை ஆகியவற்றினால் கூட்டாக அமைக்கப்பட்டுள்ள சுற்றாடல் "ENDA" திட்டத்தின் பொறுப்பதிகாரியாவர். அவர் ரபாத்திலுள்ள பொருளாதார, புள்ளிவிவர கழகத்தில் சுற்றாடல் முகாமைத்துவம் பற்றியும் போதிப்பதோடு, பாரிஸ் பல்கலைக் கழகத்தில் முகாமைத்துவமும் பட்டினமயமும் என்பது பற்றியும் போதிக்கின்றார்.

ஆரம்பத்தில் ஐரோப்பாவிலோ, வட அமெரிக்காவிலோ, எங்கோ ஒரு இடத்தில் ஒரு ஆசை, அல்லது அபிலாஷை தோற்றம் பெறுகிறது. அது ஒரு உருவத் தோற்றமாகத் தன்னுருப் பெற்று இயங்க ஆரம்பிக்கின்றது. தங்களைச் சூழவுள்ள சுற்றாடலை அழித்து நாசப்படுத்திய பின்னரும், நுகர்வுச் சமுதாய மொன்றைச் சேர்ந்த மனிதர்கள் ஏனையோர்களின் சுற்றாடலையும் நுகர்வதற்கு விரைகின்றனர்.

இப்புதிய தேவை தன்னிச்சையாக உருவாக்கப்பட்டதல்ல. சுற்றுலாப் பயணிகளைக் கவருவதற்காக ஏதாவது ஒரு பருவகாலத்தில் செய்யப்பட்ட பிரகாரங்களை நாம் முறையாக பகுத்தாய்வோமாயின் களியகங்கள், கம்பனிகள், முகவராண்மைகள் என்பனவைகள் வெளியிடும் பிரசுரங்களில் ஐந்தில் நாலு பங்கு, அவற்றின் உள்ளடக்கங்கள், சித்திரங்கள், புகைப் படங்கள் என்பவற்றின் மூலம் நாட்டின் வெய்யில், வெப்பம், ஒளி என்பன பற்றி கவனத்தை ஈர்ப்பனவாக அமைந்துள்ளதோடு செய்திப் பத்திரிகைகள், வாராந்திரிகளில் இடம் பெறும் பிரச்சாரங்களில் மூன்றிலிரண்டு பங்கு அதே சிந்தனையைப் பிரதிபலிப்பதையும் காணலாம்.

பொதுத் தொடர்பு சாதனங்கள் பிரபல்யப் படுத்தியவைகளான வெளிநாட்டுச் சூத்திரங்களுக்கேற்ப சூரியஒளி, இயற்கை, வாவிநீர், மங்கையர், அதிதீரத் தன்மை என்பனவே சுற்றுலாப் பயணி நாடும் விடயங்களாக ஒழுங்கு செய்யப்படுகின்றன. இவ்விதம் எமது தரைக் காட்சியும், வனவிலங்கினங்களும், மூன்றும் உலக நாடுகளில் வாழ்வோரும் விடுமுறையில் களிக்கும் ஐரோப்பியர்களதும் அமெரிக்கர்களதும் சுகபோக இன்பத்துக்கு ஈடு கொடுத்தலோடு நம்மை அவர்கள் மடமை நிலைக்குத் தள்ளும் வரை இரப்பர் போன்று அவர்களது தேவைகளுக்கு ஈடுகொடுத்துக் கொண்டுபோக வேண்டியுள்ளது. சுற்றுலாப் பயணிகள் விட்டம், கண்டுபிடிப்பு, வெற்றி கொள்ளல் இரு சூழ்நிலைகளையும் மேற்கொள்கின்றது. பிரயாணப் பிரச்சினை மாத்திரம் இல்லையென்றால் சுற்றுலா ஒன்றே மிகச் செலவு குறைந்த தற்காலிக விமோசனம் பெறும் முறையுமாகும். அன்றாட அலுப்புகளை மறக்கவும், கடந்த காலங்களில் சமயங்களினால் வாக்களிக்கப்பட்ட சுவர்க்கத்திற்கு ஒரு பகுதி மாற்றீடாகவும் இச் சுற்றுலாப் பிரதேசங்கள் அமைகின்றன.

மனித ஆசைகளை, சந்தைப் படுத்தக்கூடிய ஒரு பண்டப் பொருளாக மாற்றியமைப்பதற்கு பிரயாண ஏற்பாட்டாளர்கள் கையாளும் நடவடிக்கைகளே இவை. மூன்றும் உலகுச் கூடாக சுற்றுலாப் பயணிகளின் போக்குவரத்தை செயற்படுத்தும் பின்னணி இதுவேயாகும்.

கைத்தொழில்மய நாடுகளின் குடியிருப்பாளர்கள் உளவியல் - சமூகவியல் திருப்தியை நாடியமையும், பிரயாண, பொழுதுபோக்கு ஏற்பாட்டாளர்கள் இலாபம் தேடியமையும் மூன்றும் உலக நாடுகள் பலவற்றின் அபிவிருத்திக் கொள்கைகளில் ஆழ்ந்த செல்வாக்குப் பிரயோகித்த விளைவுகாட்டியதோடு, இவ்விதம் உருவாக்கப்பட்ட தேவையை பிரதியீடு செய்வதற்கு மூன்றும் உலக நாடுகள் சிறிதும் ஆவலுள்ளதாகவிருந்தன என்பதைக் காணும்போது எதிர்கால வரலாற்றாசிரியர்களுக்கு அது ஒரு புதுமையாக இருக்கும்.

**மாயக் கதிரவன்**

பெருந் தொகையான கேட்டவுடனேயே வழங்கப்படுவதற்கு இருப்பது போல் தோற்றுகின்றது. பல நாடுகள் அதன் நன்மையைப் பெறுவதற்காக விரைகின்றன. சுற்றுலாப் பயணிகளின் வருகையினால் அபிவிருத்தி மீது சாதகமான தாக்கம் ஏற்படும் என ஒரு பிரமையும் நிலவுகின்றது. ஆனால் சுற்றுலாத்துறை நுகர்வின் மூலம், நாம் கைத்தொழில் மய நாடுகளின் அபிவிருத்திகளிலிருந்து நிச்சயம் நன்மையடைவோம் என்பதையிட்டு எமக்கு உறுதியாகக் கூறமுடியுமா?

சுற்றுலாப் பயணிகள் தங்களது நாட்டில், தாம் சம்பாதித்த வருமானத்தையே செலவிடுகின்றனர் என்பது உண்மைதான் அந்நியர் செலாவணியில் பங்களிப்புச் செய்யப்பட்ட தொகை இடத்துக்கிடம் வேறுபடுமாயினும் சென்மதி நிலுவையில் சுற்றுலாப் பயணத்துறை மூலம் கிடைக்கப் பெறும் தொகையினதும் தேசிய வருமானத்தில் சுற்றுலாப் பயணிகளின் நடவடிக்கையினதும் முக்கியத்துவம் சில நாடுகளில் குறிப்பிடத்தக்கதாகவுள்ளது. சுற்றுலாப் பொருளாதாரத்துறை சில ஊக்குவிப்புப் பணிகளைப் புரிகின்றதாயினும் முதலீடு — பெருக்கம் சித்தாந்தம் பிரயோகிக்கப் படுகின்றது. உதாரணமாகக் கூறின் லட்சம் டாலர்களைச் சுற்றுலாத் துறைக்காகச் செலவழித்தால் அது கரிபியன் நாடுகளின் தேசிய வருமானத்தில் 2,300 டாலர் அதிகரிப்பை ஏற்படுத்துகிறது என மதிப்பிடப்பட்டுள்ளது. 3200 டாலர்கள் முதல் 4,300 டாலர்கள் வரையிலான அதிகரிப்பை பசுபிக், அல்லது

சுற்றுலாத் துறையைப் பொறுத்தவரை அது தீங்கானது அல்ல என்பது தெளிவு. ஆனால் மூன்றும் உலகின் அபிவிருத்தியில் நேரியபங்களிப்புச் செய்வதாகஅர்த்தமாகுமா? பல்வேறு நாடுகள் சுற்றுலாத்துறையில் பெரும் எதிர்பார்ப்புக்களை நாடி தமது அபிவிருத்திட்டங்களில் இதற்கு முதலிடம் அளித்துவரும் இவ்வேளையில் இப்பிரச்சினை கிளப்பப்படுவது பயன்மிக்கது. சுற்றுலாத்துறை ஒரு புது உருவிலான பொருளாதார ஆதிக்கத்தைத் தோற்றுவிக்கவில்லையா? "வெளிநாட்டு" மக்களின் இழிந்த கலாச்சாரத்தை, வேறு வார்த்தைகளில் கூறுவதாயின் ஒரு புதிய உருவிலான காலனியாதிக்கத்துவத்தை கொண்டுவரும் புதிய வழியாக அமையவில்லையா? ஆபிரிக்க, மற்றும் கரிபியன் நாடுகளின் அனுபவங்களை இத் துறையில் ஆராயும்டாக்டர் ஜக்ஸ் பக்னிகோர்ட் "அபிவிருத்திக் கருத்தரங்கத்தில்" இப் பிரச்சினைகளை எழுப்பியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூர கிழக்கு நாடுகளுக்குக் கொண்டுவருவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் சுற்றுலாத் துறை மூலம் தரப்பட்ட ஒரு பொருளாதாரத்தில் எத்தரம் வரை தங்கி நிற்க வேண்டுமென்பது குறித்து சுற்றுலாப் பெருக்கி தத்துவம் தெளிவு படுத்துகின்றது. தேசிய வருமானத்தின் மீது அது ஏற்படுத்தும் தாக்கம் எவ்வளவு தூரம் தேச மக்களின் வருமானத்தின் மீது ஏற்படுத்தும் தாக்கமாகும் என்பதை அது எவ்விதத்திலும் காட்டாது.

சுற்றுலா தொழிற்றுறையினால் நுகரப்படும் பொருட்களும் சேவைகளும் எந்நாட்டில் உற்பத்தியாகின்றன? அவைகளை வழங்கும் சமூக மற்றும் உத்தியோகக் குழுக்கள் எவை என்பது பிரச்சினையின் ஒரு முக்கிய அம்சமாகும். சுற்றுலாப் பயணிகளைச் சுமந்து செல்லும் விமானங்கள் எங்கு உருவாக்கப்படுகின்றன. சுற்றுலாப் பயணிகளைத் தங்கவைக்கும் ஓட்டல்களுக்கான பொருட்கள் எங்கிருந்து வருகின்றன. வாகனங்கள், டயர்கள், பெற்றோல், புகைப்பட பில்ம் சுருள்கள், அஞ்சலட்டைகள், முத்திரைகள் என்பன எங்கிருந்து வருகின்றன? இறைச்சி, குளிர்பானங்கள், மது, வைன் என்பன எங்கிருந்து வருகின்றன? குறிப்பாகக் கூறுவதாயின் அதன் ஆரம்பக் கட்டத்தில் சுற்றுலாக் கொள்கையானது விருந்தோம்பும் நாட்டை விடவும் அதற்கான பொருட்கள் இறக்குமதி செய்யப்படும் கைத்தொழில்மய நாடுகளின் பொருளாதாரத்துக்கே கூடுதல் பயன் தருகின்றது.

பெருந்தொகை அந்நியச் செலாவணி நாட்டுக்கு வெளியே போகின்றதெனினும் குறிப்பிடத்தக்களவு தொகை நாட்டிற்குள் தங்கி விடுகிறது. இது ஒரு சாதகமான சூழ் நிலையா? வெளியுலகில் கொள் வனவுப் பலம் அதிகரித்தலால் மக்களுக்கு பயன்படுபவைகள் இறக்குமதியாகின்றன என அர்த்தப்படாது. மேலும் இதனால் கிடைக்கும் இலாபங்கள் மக்களின் வாழ்வைச் சிறப்புறச் செய்வதற்கான திட்டங்களில் முதலீடு செய்யப்படுகின்றன எனவும் அர்த்தமாகாது.

**விலைகொடுத்துப் பெறும் தொழில்கள்**

அடுத்த அம்சம் என்னவெனில் தொழில் வாய்ப்பு உருவாகுதல் ஆகும். இதற்கு சுற்றுலாத்துறை நிச்சயம் பங்களிப்புச் செய்கின்றது. ஆனால் நாம் நம்புமளவுக்கு சுற்றுலாத் துறை அவ்வளவு தொழில் வாய்ப்புக்களை உருவாக்கும் துறையல்ல. டியூஷியாவில் ஹோட்டல் துறையில் ஒரு தொழில் வாய்ப்பு உருவாக 13,300 முதல் 20,300 டாலர் வரை செலவிட வேண்டியுள்ளதெனவும் ஆனால் உற்பத்தித் துறையில் ஒரு தொழில் வாய்ப்பு உருவாக சுமார் 12,200 டாலர் செலவிட்டால் போதுமெனவும் மதிப்பிடப்பட்டுள்ளது. மற்றொரு முக்கிய காரணி என்னவெனில் இத்துறையிலான தொழில் வாய்ப்புக்கள் ஓரளவு ஒரு பருவகாலத்தைச் சார்ந்து நிற்பதாகும். சில வேலைகளில் சம்பளமாகக் கொடுபடும் தொகையில் பெரும் பகுதி வெளிநாட்டவர்களுக்கே செல்கின்றது.

இந்த அவதானங்களை நாம் புறக்கணித்து விட முடியாது. எவ்வாறாயினும் சுற்றுலாத்துறை முதலீட்டின் மூலம் சில சாதக நலன்களும் நேரடியாகக் கிடைக்கின்றன. பொருட்களும், சேவைகளும் இயக்கம் பெறுகின்றன. நாட்டுக்கு நன்மை பயக்கக்கூடிய புதிய தொழில்கள் உருவாகின்றன. ஆயினும் இதற்காக மூன்றாம் உலக நாடுகளின் அரசாங்கங்கள் பெரும் விலை கொடுக்க வேண்டியுள்ளன. சுற்றுலா இயக்குனர்கள் இவ்வரசாங்கங்களை ஒன்றுக்கொன்று போட்டியிடச் செய்கின்றன, விமானத்தளங்கள் பெருஞ்சாலைகள், ஓட்டல் அடுக்குகள் என்பவற்றை நிருமாணிக்கவும் மானியங்களும் வரிச் சலுகைகளும் வழங்கவும் தூண்டுகின்றனர். இவற்றை நிறைவேற்றுவதற்காக அவ்வரசாங்கங்கள் பல வருடத் தவணைகளிலான கடன்களைப் பெறுகின்றன.

ஆபிரிக்காவில் சுற்றுலாத்துறை இன்று மிகக் கூடுதலான மானியம் வழங்கப்படும் ஒரு பொருளாதாரத் துறையாக விளங்குகின்றது என்பதை நாம் நினைவில் கொண்டால், அந்நாட்டின் வசதி குறைந்த தரத்தைச் சார்ந்த மக்களும், மூன்றாம் உலக நாடுகளின் வரி செலுத்தும் மக்களுமே ஐரோப்பிய அமெரிக்க நாடுகளின் வசதி படைத்த ஒரு சிலரின் உல்லாச விடுமுறைக்காக மானியம் வழங்குகின்றனர் எனக் கூறுவது நியாயத்திற்கப்பாற்பட்டதாகாது.

சுற்றுலாத் துறையானது அபிவிருத்திக்கான ஒரு உதவியென்ற நோக்கில் அதில் தங்கி நிற்கும் மூன்றாம் உலக நாடுகளின் தலைவர்கள் கூட சுற்றுலாத்துறை அளவிட முடியாதளவு ஆழமானது என்றும் சில வேளைகளில் மதிப்பீட்டொன்றிலிருந்து அது தப்பித்துக் கொள்கின்றதென்றும் அபிப்பிராயம் கொண்டுள்ளனர்.

இதற்குப் பல காரணங்களுள்ளன. தனது முழு வாடிக்கையாளர்களையுமே வெளிநாட்டிலிருந்தே பெறவேண்டிய ஒரு தேசிய கைத்தொழிலே இது. இறக்குமதி செய்யப்படும் பொருட்கள், சேவைகள், மனித ஆற்றல் என்பவற்றினால் உணர்த்தப்படுவது போன்று சுற்றுலாத் துறையானது அந்நியர் மயமான விருந்தோம்பும் நாட்டின் பொருளாதாரத்துடனும் சமுதாயத்துடனும் ஒன்றிணைவதை விட பல்தேசிய கம்பனிகளின் அமைப்புடன் ஒன்றிணைந்துள்ளது. விமானப் போக்குவரத்து அபிவிருத்திமூலம் பாரிய பொழுதுபோக்கு, பிரயாண நிறுவனங்களில் நிறுவகிக்கப்படும் சுற்றுலா வகையின் அளவுமட்டம் விசாலிக்கப்பட்டது. இது சுற்றுலாத் துறையை மேம்படுத்தும் கைத்தொழில் மய நாடுகளுக்கும் மூன்றாம் உலகின் விருந்தோம்பும் நாடுகளுக்குமிடையே தொழிற் பிரிகையை ஏற்படுத்தியுள்ளது. செல்வந்த நாடுகளே போக்குவரத்துச் சாதனங்களையும், முழுச் சுற்றுலாத் துறையையும் செயல்படுத்தும் பிரயாண முகவராண்மைகளுக்கு தனது வங்கிக் கிளைகள் மூலம் நிதியீடு செய்யும் வங்கிகளையும், அவற்றிற்கான பிரசாரங்களையும், அவற்றின் தகவல் சேவைகளையும் முற்பதிவு செய்து கொள்வதற்கான இலத்திரோனிக் அமைப்புக்களையும் சொந்தமாகக் கொண்டுள்ளன.

மிகவும் பக்தி சிரத்தையோடு கைச்சாத்திடப்படும் ஒப்பந்தங்களுக்கும், உத்தியோக பிரகடனங்களின் சிறப்புத் தோற்றங்களுக்கும் பின்னால் சுற்றுலா இயக்குனர்களுக்கும், மூன்றாம் உலக நாடுகளுக்கு மிடையிலான பங்குறவின அசமத்துவம் தெளிவாகத் தோற்றுகின்றது. முதலாவதாகக் கூறின் அந்நிய மயமடைந்த நாடுகளிலுள்ள பிரயாண நிறுவனங்களின் பிரதிநிதிகளும், சுற்றுலாத் துறையில் அக்கறையுடைய அத் தேசத்தவர்களும் (சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்காக தியாகங்கள் செய்வதற்குத் தயாராயுள்ள) அரசாங்கம் ஒரு பகுதிச் செலவை ஏற்றுக் கொள்வதற்கு ஒழுங்கு செய்தலைத் தமது அலுவலாக மேற்கொள்கின்றன. மேலும் இந்நாடுகளில் நிலவும் கடுமையான குறைவேயச் சூழ் நிலையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி சுற்றுலாத் துறையில் பணி புரியும் ஊழியர்களின் வேதனங்களைக் குறைந்த மட்டத்தில் வைத்திருப்பதற்கு வழிவகுக்கின்றனர். இதன் மூலம் குறைந்த செலவில் சுற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாப் பயணிகளின் வருகைகளை ஏற்பாடு செய்யவும் இலாப அதிகரிப்பையும், சுற்றுலா இயக்குனர்களையும் பாதுகாக்கவும் முடிகின்றது. பல்தேசியக் கம்பனிகளுக்கு அதற்குப் பின்னர் தாங்கள் இலாபமீட்டுவதற்கு எங்கு பொருத்தமெனக் காணப்படுகின்றதோ அங்கெல்லாம் செல்வாக்குப் பிரயோகிக்க இயலுமாகின்றது. சுற்றுலாத்துறை சார்ந்த பல்வேறு செலவினங்களுள் முகவராண்மைச் செலவுகள், போக்குவரத்து, ஓட்டல்கள், சில்லறைச் செலவினங்கள் என்பவற்றைத் தனக்கு பொருத்தும் விதத்தில் பங்கீடு செய்து கொள்வதும் சுற்றுலா இயக்குனரே.

**இனி மேலும் தனிப் பிரதேசங்களில்லை**

வெளியார்களின் கருத்துக்களுக்கு கொடுக்கப்பட்ட முன் விருப்பினை நாம் பல்வேறு நாடுகளில் சுற்றுலாத் துறையினதும், விருந்தினர்களின் சௌகரியங்கள், நலன்கள் என்பவற்றின் வசதிக்காக பிராந்தியங்கள் அமைக்கும் முயற்சிகளிலும் காணக் கூடியதாய் பிரதிபலிக்கின்றது. சில வேளைகளில் இயற்கையைப் பேணிப் பாதுகாப்பதே நோக்கமெனக் கூறப்பட்ட போதிலும், அதே வேளையில் சுற்றுலாத்துறைக்குச் சாதகமாக வனங்களையும் வன விலங்குகளையும் பாதுகாக்கும் கொள்கையே கடைப்பிடிக்கப்படுகிறது. இக் கொள்கை சுற்றுலாத் துறைக்கு மாத்திரமான தனிப் பிரதேசங்களை அமைப்பதற்கும் அதற்காக அப் பிரதேசங்களிலிருந்து விவசாயிகள், மந்தை மேய்ப்போர், மீனவர்கள் ஆகியோரை வெளியேற்றுவதற்கும் வழிகோலுகின்றது.

ஆனால் இதை விடவும் மானுஷிகம் சார்ந்த மற்றுமொரு பாரிய பிரச்சினை உண்டு. சுற்றுலாப் பயணிகளைக் கவருவதற்காக சில மனிதக் குழுவினர் தனிப் பிராந்தியங்களில் ஒன்று கூட்டப்பட்டிருத்தலாகும். இன்று தன்ஸானியா போன்ற சில அரசாங்கங்கள், ஆதி வாசிகளின் குடியேற்றப் பிரதேசங்களுக்குள் சுற்றுலாப் பயணிகளை அனுமதிப்பதற்குத் தடை விதித்த போதிலும் ஆபிரிக்கக் காடுகளுக்குள் அமெரிக்க இந்தியர்கள், பிக்மீ இனத்தவர்கள் போன்ற ஆதி வாசிகள் வாழும் ஆபிரிக்கக் காடுகள் சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்திழுப்பதற்குபயோகமாகப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன.

இந்த ஆதி வாசிகளை வர்த்தக நோக்கிற்காக அந்நிய மய சுரண்டலுக் குட்படுத்துவது போன்றே அவர்கள் தொடர்ந்தும் முன்னேற்ற மடையாதவாறு அதே நிலையில் தேக்க முறச் செய்யப்படுகின்றனர். ஏனெனில் நிலத் தோற்றத்திலும் கட்டிடத்துறையிலும் ஒரு வகை சுரண்டலுக்கு இது வழிகோலுகின்றது. இப்படியாக மூன்றாம் உலக நாடுகளின் சில பிரதேசங்கள் ''பார்க்கப் பெறுமதியானவை'' அல்லது எவ்விதக் கவர்ச்சியு மற்றவை'' என வெளியாரின் கருத்துக்களினடிப்படையில் அல்லது சில வழிகாட்டு நூல்களின் வர்ணனைகளினடிப்படையில் கருதப்படலாயிற்று— உதாரணமாகக் கூறின் ''சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பவை'' என்ற பதம் பாவிக்கப்படும் கருத்தோட்டத்தைக் கூறலாம். இங்கு இது உண்மையிலேயே ஒரு நேர் நோக்குடன் கூறப்பட்டதாயினும் சுற்றுலா இயக்குனரின் அல்லது நாட்டைப் பார்வையிட்ட ஒரு நிபுணரின், அல்லது அத்தேசத்தார்களின் இக் கருத்துக்கள் எந்தளவு சரியானவை என்பது எந்த அடிப்படையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது எனத் தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை. நாம் அதை ஆராயவோமாயின் மூன்றும் உலக நாடுகளின் மக்களது பெறுமானங்களுக்குப் புறம்பான அடிப்படையிலமைந்த அரசியல் கண்ணோட்டத்திலேயே அப்பிரதேசம் அவ்விதம் காணப்பட்டது என்பதை அறியலாம்.

சுற்றுலாப் பயணிகளுக்கான இவ் வசதிகள், இந்த ''வெள்ளையர் சூழ் பிரதேசங்கள்'' ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலுமுள்ள மனித தாபனங்களிலிருந்து வருவோருக்கு கூட்டாகப் பாவிக்கக் கூடிய ''இல்லத்திலிருந்து இல்லத்திற்கு'' என்ற அடிப்படையிலான பருவகால விடுதிகளாக அமைகின்றன. விருந்தோம்பு நாட்டில் தாம் தமது இல்லங்களில் இருப்பது போன்ற அதே சௌகரியங்களுடன் விடுமுறை கழிப்பதை உறுதிப்படுத்துவதற்காக வேண்டியும், விருந்தோம்பு நாட்டின் வறுமையினாலோ, அன்றி அந்நாட்டு பொருட்களின் தாழ்வகைத் தரத்தினாலோ சுற்றுலாப் பயணி குறை காணக்கூடாது என்பதை உறுதிப்படுத்தவும் அமெரிக்க, அல்லது ஐரோப்பிய தரத்திலான சேவையையும் பொருட்களையும் வழங்குவது தமது கடமையென அரசாங்கங்களும் அதிகாரிகளும் செயல்படுகின்றனர். ஆனால் இத்தகைய வசதிகளையும் தரங்களையும் அவர்களால் நாடு முழுவதுக்குமே வழங்க முடியாதுள்ளது. வெளிநாட்டு சுற்றுலாப் பயணிக்கும், உள்நாட்டின ஒரு சில நபர்களுக்கும் அவர்களது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவே இந்த தரங்கள், வசதிகள் பேணப்படுகின்றன. எனினும் இவைகளை தொடர்ந்து அடிக்கடி வழங்கிக் கொண்டிருப்பதாயின் நாட்டின் பெருந்தொகையினருக்கு நன்மை பயக்கக் கூடிய வசதிகளையும், உபகரணங்களையும், நிகழ்ச்சித் திட்டங்களையும் சுற்றுலாத்துறைக்கு மாத்திரம் திசை திருப்பிக் கொடுப்பதாக அமையும். உதாரணமாகக் கூறின் துனூசியாவில் ஜெர்பா நகரில் 1974 ல பிரதான நீர் வழங்கல் சேவையின் 20 சத வீத நீர் பெரிய ஓட்டல்களுக்கே சென்றது. அதே வேளையில் ஜெர்பாவிலுள்ள 80 சதவீதமான குடியிருப்புகளுக்கு போதிய நீர் கிடைக்கவில்லை.

அளவு மீறிய கோரிக்கை வேறிடத்தில் தீர்மானிக்கப்படுவதன் காரணமாக ஒரு அகன்ற அசமத்துவம் உருவாவது ஆச்சரியத்துக்குரியதொன்றல்ல. சுற்றுலாத் துறை மூலம் மேலும் உக்கிரமடையச் செய்யப்படும் அசமத்துவம் இது ஒன்று மாத்திரமல்ல. சுற்றுலாத்துறையின் அபிவிருத்தி பெரிதும் பிராந்திய விவசாயம், நிலம், அதன் குடியிருப்பாளர்கள் ஆகியோரின் செலவிலேயே ஏற்படும். இச் சுற்றுலாப் பிரந்தியங்கள் நிருவகிக்கப்படும்முறை, அதன் விளைவுகள் என்பனபற்றி யாரும் மனக்கவலை கொண்டால் சுற்றுலாத் துறையின் சமூகவியல் ஆதிக்கம் குறித்தும் அது போன்றே கவலையுற வேண்டியது தவிர்க்க முடியாததாகி விடும். இங்கு தான் நாம் மேற்கூறிய போக்குகள் அனைத்தும் ஆகக் கூடுதல் தீங்கு ஏற்படுத்துவதற்காகத் திட்டமிடப்பட்டது போற்றோன்றுகின்றது.

சேசெல்ஸ் நாட்டின் அரசியல் தலைவர் ஒருவர், தனது நாடு ஓட்டல்களால் நிரம்பிய ஒரு தேசமாக மாறுவதை ஆட்சேபித்தார். இக்கவலை மிகவும் யதார்த்தமானது. மூன்றும் உலக நாடுகளில் ''ஓட்டுண்ணிப் பயிற்சி'' என நாம் குறிப்பிடக்கூடிய உணர் கொம்புகளைப் படரவிடும் வளர்ச்சியைக் காண்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாவதாகக் கூறின் தேசிய கலாச்சாரம் அதன் பல்வேறு உருவங்களிலும் இழிவு படுத்தப்படுவதோடு திரிபுபடுத்தவும் படுகின்றது. இரண்டாவதாக வெளிநாட்டவர் நடை முறைகளைக் கையாள்வதன் விளைவுகள் ஊக்குவிக்கப்படுவதோடு விருத்தி செய்யப்படுகின்றது. மூன்றாவதாகக் கூறின், விருந்தினர்களாக வரும் வெளிநாட்டவர்களோடு விருந்தோம்பும் நாட்டு மக்கள் ஒப்பிடப்பட்டு தாழ்த்தி மதிப்பிடப்படும் ஒரு போக்கு குறிப்பிடத்தக்களவு உச்ச நிலை வகிக்கின்றது.


இம் மாற்றுக்களில் எதைத்தான் நாம் எடுத்துக் கொண்டாலும் அவை எல்லாமே சுற்றுலாப் பயணியின் ஆசை அபிலாஷைகள், விருந்தோம்பும் நாட்டின மக்களது ஆசை அபிலாஷைகளுக்கு மேலாக முதன்மை யாதுக்கம் செலுத்துவதையும், இது ''காலனித்துவம்'' எனும் சொல் அதன் பூரண அர்த்தத்துடன் இங்கு செயல்படுவதையும் எமக்குக் காட்டுகிறது.

**மறுமுகம்**

சுற்றுலாத் துறையின் கலாச்சார விளைவுகள் பற்றியும், மக்களிடையே புரிந்து கொள்ளலுக்கான ஒரு காரணியாக அது அமைகின்றதா? இல்லையா? என்பது பற்றியும் பெருமளவு விவாதிக்கப்பட்டுள்ளது. ஆபிரிக்க, ஆசிய, லத்தின் அமெரிக்க மற்றும் ஓஸானிய நாடுகளின் கலாச்சாரங்களில் சுற்றுலாப் பயணிகளின் உண்மையான அக்கறையும் அதன் காரணமாக எழக்கூடிய உரையாடல்களும் மிகவும் அரிதானதாகும். பெரும்பாலான சுற்றுலாப் பயணிகள் ஒரு நாட்டின் இயற்கைக் காட்சிகளையும் புகழ்பெற்ற நினைவுச் சின்னங்களையும் பார்வையிடுவதிலேயே கூடுதல் அக்கறையுடையனரே யொழிய உயிரோட்ட முடைய ஒரு கலாச்சாரத்துடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள்வதில் அக்கறையுடையவர்களாயில்லை. தங்களது எதிர்பார்ப்புகள் கிடைத்தலையே அவர்கள் நாடுகின்றனர். அவைகளை அவர்களுக்கு விளக்க வேண்டிய அவசியமுமில்லை. அவர்கள் வெறுமனே அவற்றை அடையாளம் கண்டு கொள்கின்றனர். அவர்கள் விஜயம் செய்வது ஒரு நாட்டுக்கல்ல. ஒரு நாட்டின் உருவத் தோற்றத்துக்கே அவர்கள் விஜயம் செய்கின்றனர். வழமைக்கு மாறான, எதிர்பாராத, அபார விடயங்கள், பூதாகர அல்லது குட்டையான மனிதர்கள் போன்றவைகளே அவர்களது கவனத்தை ஈர்க்கின்றன.

ஆனால் பிரச்சினையின் மிக மோசமான அம்சம் இதுவல்ல. கதவுகள் திறக்கப்பட்டு, சர்வதேச புரிந்து கொள்ளலுக்காக ஒரு சில தனிப்பட்டவர்கள் மேற்கொள்ளும் முயற்சிகள், சுற்றுலாத் துறையினால் மக்களின் கலாச்சார வாழ்க்கையின் பல்வேறு அம்சங்கள் பாதிப்புறுகின்றமைக்கேற்ப ஈடு செய்யக்கூடிய நன்மைகளை அளிக்கின்றனவா என்பது குறித்து சந்தேகப்படக்கூடியதாகவேயுள்ளது.

சுற்றுலாத் துறையினால் விளைவிக்கப்படும் தீங்குகள் பெரும்பாலும் கலைத் துறையிலேயே குறிப்பிடத்தக்க பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளது. உதாரணமாக பல ஆபிரிக்க நாடுகளில் சுற்றுலாப் பயணிகள் குறிப்பிட்ட சில பிரதேசங்களையே தொடர்ந்தும் சுற்றுலாச் செய்வதும், போய் வந்த பாதையைத் தவிர்த்து வேறு பாதைகளில் செல்லாதிருப்பதும் சுற்றுலாத் துறையு




எதியோப்பியாவுக்குச் சுற்றுலாப் பயணிகளை அழைக்கும் 1973ன் இவ்விளம்பரம் 'நிவ் இன்டநசனலிஸ்ட்' சஞ்சிகையிலிருந்து மறு பிரசுரம் செய்யப்படுகிறது. அதன் தலைமை வாசகங்கள் பின்வருமாறு அமைந்துள்ளன:

''பஞ்சத்தைப் பற்றி மறந்துவிட்டு சூரிய வெப்பம் மிகுந்த எதியோப்பியாவுக்கு வாருங்கள். தன் வாழ்க்கைக்காகப் போராடும் ஒரு நாட்டில் அன்னியனாக இருக்கலாம்.''

**வதந்திகள் அவ்வாறு கூறுகின்றன . .**

வதந்திகள் உண்மையாகவும் இருக்கலாம். உயர் குடியினர் பேரம் பேசுவதில் வல்லவர்கள் பட்டு, வாசனைத் திரவியங்கள், தங்கம், தந்தம், மயில் பீலி போன்றவற்றை எங்கிருந்து பெற்று எங்கு வைத்துக் கொள்ளலாம் என்பதை அவர்கள் அறிவார்கள். மதில் சூழ்ந்த ஹரார் நகரிலிருக்கும் சந்தை 7 ம் நூற்றாண்டில் அரேபிய வர்த்தகர்களால் துவக்கப்பட்டது. தினமும் திறந்திருக்கும். அடிஸ் அபாபாவின் சந்தை உலகின் மிகப் பெரியதாகும்.

பேரரசின் கொள்வனவு முகவர்களின் கழிந்துவிட்ட அந்நாட்களில் போலவே இன்றும் உங்களை முகமன் கூறி வரவேற்கின்றது. குன்றாத உற்சாகத்தை அளிக்கின்றது. இங்கு பேரம் பேசுவது ஓர் அழகு, இனிமை. ஒட்டகங்களினதும், கழுதைகளினதும் மீது சவாரி செய்து வருவோரும், கால் நடையாக வருவோருமான கூட்டத்தினர் இங்கு வந்து குழுமி நிற்பர். மறைந்திருக்கும் பேரரசான எதியோப்பியாவின் களங்கமடையாத மற்றொரு அம்சம். நூற்றாண்டு காலமாக வெளியுலகி லிருந்து மறைந்திருந்தது இந்நாடு. ஆவலுடன் காத்திருக்கும் ஒரு சிலருக்குத் தவிர மற்றைய சகலருக்கும் இந்நாடு மறைந்தே இருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டன் தொடர்புடைய மறைமுகமான நாச நோக்குகளைப் புலப்படுத்துகின்றது. கலைப்பணிகள் பர்பர் நகைகளாக இருக்கட்டும், பம்பாரா தலையணி ஆடைகளாக இருக்கட்டும், அல்லது ருவண்டாவின் குத்துவாளாக இருக்கட்டும் அல்லது அறமைக்கில் விலங்குத் தோல்களின் மீது எழுதப்பட்ட பைபிளாக இருக்கட்டும் நடைமுறைகள் அவ்வளவு பெரிதாக வேறுபடுவதில்லை. சர்வதேச ஓட்டல்களுக்கு வெளியே இப்பொருட்களை விற்பதற்காக சேகரித்து நிற்பவர்களே நாட்டில் உள்ளூர்க் கிராமங்கள் வரை சென்று விவசாயிகளைத் தொடர்பு கொண்டு, கடன் பளுவில் நிற்கும் அவர்களிடமிருந்து அவர்களது பாரம்பரிய பொருட்களைப் பெற்று வரும் கடைசித் தொடர்பு கொள்வோராவர். இப் பொருட்கள் பணமீட்டும் நோக்குடன் ஆரம்பத்தில் செய்யப்பட்டதல்ல என்பது குறிப்பிடத்தக்கது.

### கொள்ளையடிக்கத் தூண்டல்:

தங்களது பாரம்பரிய கலைப் பொருட்களை ஏனையோரிடம் ஒப்படைக்கத் தூண்டும் இதே பணப் பேராசை, புதை பொருளாராய்ச்சிக்கான பிரதேசங்களைக் கொள்ளையடித்தலையும், எகிப்து, பாலி, இந்தியா, மத்திய அமெரிக்கா போன்ற நாடுகளில் ஞாபகச் சின்னங்களைச் சிதைவு படுத்தலையும் விளக்குகிறது. இவ்விதமாக சுற்றுலாத் துறையானது தேசிய கலைப்பணிகளைக் கொள்ளையடிப்போருக்கான ஒரு தூண்டுதலாக அமைகிறது. பழம் வீட்டுப் பொருட்கள், பழைய நகைகள், பழங் கம்பளி சீலைகள், முக மூடிகள் என்பவற்றை ஆரம்பத்தில் விற்றபின் அவற்றை மூன்றாம் உலக நாடுகளிலிருந்து சுற்றுலாப் பயணிகள் தமது நாடுகளுக்கு எடுத்துச் செல்வதோடு இக்கொள்ளைக் கோட்பாடு வேகமடைகின்றது.

நடனத்தின் பரிணாம வளர்ச்சியிலும் சுற்றுலாத்துறையின் தாக்கம் வேறு விதமாகச் செயல்படுகிறது. ஆபிரிக்காவில் இன்றும் கூட சுற்றுலாத் துறையினால் பாரம்பரிய நடனங்கள், அழிந்துபட்டு வயிற்றைக் குலுக்கி ஆட்டும் கோலமான நடனமாக மாறி வருகின்றன. சுதந்திரம் பெற்ற பல நாடுகள் இந்தப் போக்கிற்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளன. மூன்றாம் உலகெங்குமுள்ள பல தேச மக்களுக்கு இது பாரிய பிரச்சினையாகியுள்ளது. ஏனெனில் மக்களின் தேசிய கலாச்சார நடனங்கள் அரிதாகிக் கொண்டு போகின்றன. பல சந்தர்ப்பங்களில் அவை மக்களின் வரலாற்றை எடுத்துக் கூறுவனவாகவும், அல்லது இளைஞர்களின் முயற்சிகளின் குறிப்பிடத்தக்க கட்டங்களாகவும் அமைகின்றன. சுற்றுலாப் பயணிகளைக் கவரும் பகுதிகள் மாத்திரம் அகற்றப்பட்டு பணத்துக்காக சுற்றுலாப் பயணிகளின் முன்னிலையில் காண்பிக்கப்படுகின்றன.

கட்டிடக் கலை மீது சுற்றுலாத் துறையின் தாக்கம் மிகத் துரிதமாக உருப்பெற்று எதிர்பாராத விதமாக நன்கு புலப்படக் கூடியதாக உள்ளது. பகோடா கோபுரங்கள், நவ - சோகைப்பாணி, போலி வைக்கோல் குடிசைகள், அதே வேளையில் இன்டர்கொன்டினன்டல் ஓட்டல்கள் என்பன நன்கு பிரபலமான கோட்பாடுகளாகும். ஆனால் இத்தகைய அமைப்புகள் ஏனைய பல கட்டிட அமைப்புக்களில் எவ்வளவு தூரம் ஆதிக்கம் செலுத்துகின்றன என்பது எப்பொழுமே உணரப்படவில்லை.

### சமயத்தின் மீதான தாக்கம்

சுற்றுலாத்துறை நடவடிக்கையின் தாக்கம் சமயத்தின் மீதும் உணரப்பட்டுள்ளதுடன் ஆபிரிக்கா, ஆசியா ஓசானியா நாடுகளின் சமய விசுவாசங்கள் மீதும் தனது தாக்கத்தைப் படர விட்டுள்ளது. சுற்றுலாத் துறையின் தாக்கம் பல்வேறு உருவங்களையெடுக்க முடியும். வணக்கத் தலங்களை அவமதித்தல், அவைகளைப் புகைப்படம் பிடித்தல், அல்லது சிதைவு படுத்தல், வணக்கப் பொருட்களை இழிவு செய்தல், சமய வைபவங்களை ஊறு படுத்தல், அல்லது அத்தகைய வைபவங்களை காலநேரம் பார்க்காது தமது இரசனைக்காக நடத்துமாறு உத்தரவிடல் என்பன சமயங்கள் பாதிக்கப்படும் முறைகளாகும்.

கலாசாரத் துறையில் சுற்றுலா மூலம் ஏற்படும் சிறு நன்மைகள் மேற் கூறப்பட்ட தீங்குகளை ஈடு செய்யக்கூடியதல்ல. சுற்றுலாப் பயணிகளுள்ளும், எமது தேசிய கலைகளின் அழகியல் அம்சங்களை உணரும் நபர்கள் சந்தேகமின்றியே இருக்கத்தான் செய்கின்றனர். சில சுற்றுலாப் பயணிகள் எமது கலாச்சாரத்தின் மீது காட்டும் ஆவல், தேசிய, கலை, கலாச்சார பாரம்பரியங்களை உள்நாட்டில் ஊக்குவிக்கக்கூடிய தன்மையது என்பது உண்மையே. சுற்றுலாப் பயணிகளுக்காகவெனத் தயாரிக்கப்படும் பொருட்களும், உள்ளூர்க் கலைப் பொருட்களின் பிரதிமைகளும் சில கலைகளை, விசேடமாக தரை விரிப்புகள், நகைகள், மட் பாண்டங்கள் என்பனவற்றின் மூலம் ஊக்குவிக்கின்றன.

சுற்றுலாத் துறையினால் கலாச்சார துறைக்களிக்கப்பட்ட மற்றொரு பங்களிப்பு என்னவெனில் நவீன சிந்தனைகள் அறிமுகப்படுத்தப்பட்டமையாகும். தகவலைப் பொறுத்த வரையில் கூட்டு, மற்றும் தனி நபர் சுதந்திரங்களுக் களிக்கப்படும் மதிப்பு, சில மூட நம்பிக்கைகள் அடக்கு முறைகள் போன்றவற்றை சுற்றுலாப் பயணிகளுடன் விருந்தோம்பு நாட்டுக்கு ஏற்படும் தொடர்பின்மூலம் அறிந்து கொள்வதால் மனித முன்னேற்றத்துக்கு வழியேற்படலாம். எவ்வாறாயினும் இந்த ஒரு சில பயனுள்ள பங்களிப்பினை நாம் சுற்றுலாப் பயணி கொண்டு வரும் மொத்தத் தீமைகளிலிருந்தும் வேறுபடுத்திக் காணல் வேண்டும்.

ஆனால் சுற்றுலாத் துறையின் மிகப் பாரதூரமான விளைவு அது ஏற்படுத்தும் தார்மீகச் சீர்குலைவாகும். உழைப்புடன் தொடர்பு காணமுடியாத தன்னிச்சையான வீண் செலவு, நவீன பாணி உபகரணங்கள், ஆடைகள், ஆடம்பர மாளிகைகள், இவைகள் வறுமையால் வாடும் மக்கள் நவீன அழகியற்பாணிகளின்பால் கவரப்படுவதை ஊக்குவிக்கும் அமைப்புகளாகும். அதே வேளையில் அவர்கள் மண்ணைப் புரட்டி தம் சீவனோபாயத்தைத் தேடிக் கொள்வதையும் அது பின்னூக்கப்படுத்துகிறது. சுற்றுலாப் பயணம் காட்டும் சோம்பேறித்தனமான வாழ்க்கை அபிவிருத்திக்கு எதிரான சூழ்நிலைகளை மேலும் ஊக்குவிக்கின்றது. அபிவிருத்தியானது தேசமக்களின் கடின உழைப்பினாலும் விடாமுயற்சியினாலுமே ஏற்பட முடியுமென்பதை உணர்ந்தால் நாம் இதை அறியலாம்.

விருந்தோம்பும் நாட்டின் மக்கள் தம்மை சுற்றுலாப் பயணி முன் தாழ்வு மனப்பான்மையுடையவர்களாகக் கருதிக் கொள்வதற்கும், தேசவாசிகள் அப்படி உணரச் செய்வதற்கும் சுற்றுலாப் பயணி பல வகைகளில் பங்களிப்புச் செய்கின்றான். முதலாவதாகக் கூறின் சிறந்த ஓட்டல்கள் மாத்திரமன்றி உற்பத்தியாகும் சிறந்த பொருட்களும் சுற்றுலாப் பயணிக்காக ஒதுக்கப்படுகின்றன. அடுத்து இவ்வேறுபாடு நன்கு கவனிக்கத்தக்கதாயமைவதற்காக சுற்றுலாப் பயணியும் தன்னை செல்வந்தன்போல் காட்டிக் கொள்கின்றான். ஐரோப்பியர்கள் அமெரிக்கர்களைப் பொறுத்த வரை சுற்றுலாக் கவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ச்சி என்னவெனில் தங்களது செல்வத்துக் கெதிராக விருந்தோம்பும் நாட்டின் வறுமையானது நேர்விகித சமத்தில் இருப்பதாகும். கைத்தொழில் மயநாடொன்றில் தனது வருமானத்தை ஈட்டி அதனை அபிவிருத்தி குன்றிய மூன்றாம் உலக நாடொன்றில் செலவிடுவதன் மூலம் சுற்றுலாப் பயணி உண்மையிலேயே கூடுதல் செலவு ஆற்றலைப் பெறுகின்றான். எனவே மானிட உறவுகளை வர்த்தக மயமாக்கும் நடைமுறையை விரிவுபடுத்த மூன்றாம் உலக நாடுகளில் சுற்றுலாத்துறை பங்களிக்கின்றது என்பது ஆச்சரியத்துக்குரியதொன்றல்ல.

சுற்றுலாப் பயணி தனது பணம் எல்லாவற்றுக்கும் அனுமதி வழங்கி விடுகின்றது என நினைக்கின்றான். இது அப்படித் தான் என நம்பிக்கை கொள்ளவும் அவன் அனுமதிக்கப் பட்டுள்ளான். விபசாரம், மதுப்பழக்கம், குற்றங்கள் என்பவற்றை சுற்றுலாத்துறை மாத்திரம் ஊக்குவிக்கவில்லை என்பது உண்மையாயினும் அவை பரவுவதற்கு சுற்றுலாத்துறை சந்தேகமின்றியே உதவுகின்றது. தொழில்கள் தேடிக் கொள்வதில் உள்ள கஷ்டம் 'நவீன' நுகர்வு மாதிரிகளின் மூலம் விருந்தோம்பும் நாட்டின் மக்களில் சிலரை சுற்றுலாப் பயணிகளின் தேவைகள் பற்றி ஆராயச் செய்கின்றது. சுற்றுலாத் துறையின் ஒரே தர்க்கம் என்னவெனில் சுற்றுலாப் பயணியின் சகல விருப்புக்களையும் பூர்த்தி செய்யும் தொழிற்பாட்டினைக் கொண்ட தொழில் வகைகளின் வளர்ச்சியாகும். ஆனால் இத் துறைத் தொழில்கள் சுற்றுலாப் பயணிக்கும், விருந்தோம்பும் நாட்டின் மக்களுக்கு மிடையிலான அசமத்துவ மனித உறவினை மேலும் மோசமாக்குவதற்குத் துணை புரிகின்றது.

### தேசிய இடைத் தரகர்கள்

இக்கசப்பான உண்மைகளுக்கு மேலும், அப்பாலும், அடிக்கடி வசதிபடைத்த ஒரு குழுவினர் வெளிநாட்டு வர்த்தகருக்கு அவர்களது வர்த்தகங்களை இந்நாடுகளில் ஏற்படுத்துவதற்கு இடைத் தரகர்களாகவும் செயல் படுகின்றனர். அப்படியான சந்தர்ப்பங்களில் சுற்றுலாத்துறை புதிய தோற்றம் பெறுகிறது. இதன் விளைவுகளை பல்வேறு சமூக குழுக்கள் தமக்குச் சாதகமாக்கிக் கொள்கின்றன. ஒரு புறம் முகவராண்மைகளினாலும் சுற்றுலா இயக்குனர்களாலும் செயல்படுத்தப்படும் நடுத்தர மற்றும் தொழிலாளர் வர்க்கத்தினர் தமது பங்கினை எடுக்கின்றனர். மறுபுறம் அபிவிருத்தி குன்றிய விருந்தோம்பு நாட்டில் வசதிபடைத்த குழுவினரும், அவர்களின் ஊழியர்களும், சேரி நகர வாசிகளும், விவசாயிகளும் காத்து நிற்கின்றனர்.

இக் குழுக்களில் சில சுற்றுலா மூலம் சிறப்பாக நன்மை பெறுகின்றன. ஏனையோர் பாதிப்புறுகின்றனர். ஆனால் இவை யெல்லாமே அசமத்துவ நாணய வீதத்தினால் குறிப்பாகவும் மற்றும் வேறு விதங்களினாலும் அபிவிருத்தியுற்ற நாடுகளினால் மூன்றாம் உலக நாடுகள் சுரண்டப்படும் சர்வதேச உறவுகளின் பின்னணியிலேயே நடைபெறுகின்றன. தற்போதைய சூழ்நிலையில் சர்வதேச மட்டத்திலும் பல நாடுகளுக்குள்ளும் நிலவும் விசைச் சம நிலைகள் ஒன்றைச் சுட்டிக் காட்டுகின்றன. அதாவது சுற்றுலாத் துறையைப் பொறுத்த வரையில் அதனை எவ்விதம் கருதினாலும் அது இன்று அபிவிருத்தியுறும் நாடுகளின் அண்டிவாழும் தன்மையை மேலும் மோசமாக்குகின்றன என்பதாகும். ஆனால் இது எந்நாளுமே உண்மையாயிருக்க வேண்டுமென்பது ஏற்றுக் கொள்ளப்படக் கூடியதோ அல்லது தவிர்க்கப்படக் கூடியதோ அல்ல.

சுற்றுலாத் துறையின் பொருளாதார செலவினங்கள் — இலாபங்கள், சமூக நன்மைகள் — குறைபாடுகள், மேலும் பொதுவாக சுற்றாடல் மீதான அதன் மேலெழுந்த தாக்கங்கள் என்பன பற்றி மதிப்பீட்டு ஒப்பாராய்ச்சி இல்லாத சூழ்நிலையில் ஆபிரிக்காவில் பெரும்பாலான சுற்றுலாப் பயணிகளுக்கான திட்டங்களும் நிகழ்ச்சிகளும் இதுகாலவரையுமே சுற்றுலாப் பயணிகளின் தேவைகளின் அடிப்படையிலேயே வகுக்கப்படுகின்றன. வேறு வார்த்தைகளில் கூறினால் அந்நிய சுற்றுலா முகவராண்மைகளின் அக்கறையின் அடிப்படையிலும் மேலும் பொதுவாகக் கூறின் பல்தேசிய கம்பனிகளின் விருப்புக்களின் அடிப்படையிலுமே வகுக்கப்படுகின்றன.

அண்டிப் பிழைப்பதை மேலும் ஊக்குவிக்காததும், நாட்டின் சுற்றாடலின் மீதும் மூன்றாம் உலக நாடுகளின் சமுதாயங்கள் மீதும் நாச விளைவுகளை ஏற்படுத்தாததுமான சுற்றுலாத் துறையொன்றை ஏற்படுத்துவது சாத்தியமானதா?

இன்றைய சூழ்நிலையில் மூன்றாம் உலக நாடுகள் மேற்கொள்ள வேண்டிய அடுக்கான பல நடவடிக்கைகள் உள்ளன.

* நாடுகள் குழுவாக ஒன்றுசேர்ந்து பிரயாண முகவராண்மைகளை நிறுவி சுற்றுலா இயக்குனர்களுடன் போட்டியிடுவது.
* விமானப் போக்குவரத்தினைப் பகிர்ந்து கொள்வது. மிகக் குறைந்தது விமானப் போக்குவரத்தின் சரிபாதியையாவது விருந்தோம்பும் நாட்டுடன் பகிர்ந்து கொள்வது.
* சுற்றுலாத்துறை மூலம் ஏற்படுத்தப்பட்ட சமூக சீர்குலைவை மட்டுப்படுத்துவதற்காக சுற்றுலாப் பிரதேசங்களையும் சுற்றுலாத் துறைக்குத் தேவையான உற்பத்திப் பொருட்களையும் கட்டுப்படுத்துதல்.

இவை ஒரு சில உதாரணங்களே. இவைகள் தீங்கின் அடையாளங்களை மாத்திரமே போக்கக் கூடியவை. இன்று செயற்படுவது போன்ற உலக பொருளாதார அமைப்புக்குள்ளும் கூட நாம் மேலும் கூடுதலாகச் சென்று நல்ல சூழல் நிலவும் நாடுகள் மத்தியிலே ஒரு ஒப்பந்தம் செய்து கொள்வதன் மூலம், அதாவது ''பெறுமதியான சூழல்கள் நிலவும் நாடுகளின் சங்கம்'' அமைத்து செயல்பட எதிர்பார்க்கலாம். இந்த அடிப்படையில் ஏற்படுத்தப்படும் ஒரு அமைப்பு மூலம் சுற்றுலா இயக்குனர்களுக்கு முட்டுக் கொடுக்கும் வங்கிப் பலத்தை சமப்படுத்த முடியும்.

மற்றொரு தீர்வு என்னவெனில் அதிகாரத்திலிருப்போர் சுற்றுலாத்துறையை வேறுவிதமாகக் கண்ணோக்குவதாகும். உள்ளூர் முறையிலான சுற்றுலாவை ஊக்குவிப்பதும், அல்லது அதே அமைப்புடைய, அதே பொருளாதார மட்டமும் அபிவிருத்தி இலக்குகளுமுடைய நாடுகளுடன் சுற்றுலாப் பயணிகளைப் பரிமாறிக் கொள்வதுமாகும். அப்படியாயின் சுற்றுலாத்துறை இந் நாடுகள் மத்தியில் சகவாழ்வுக்கும் அனுபவங்களைப் பரிமாறிக் கொள்வதற்கும் ஒரு இசைய கருவியாக அமையும்.

மூன்றாவது கண்ணோக்கு என்னவெனில் மக்கள் மத்தியில் புரிந்து கொள்ளலையும், கலாச்சாரத்தையும், குறிப்பாக சுரண்டப்படும் நாடுகளிடையே தோழமையையும் வளர்ப்பதற்கு சுற்றுலாத் துறையைப் பயன்படுத்துவது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுற்றுலாத்துறை சர்வதேச ரீதியில் வளர்ச்சியடையாத ஒரு காலத்தில் இத் தந்தச் சிலையை பெனினிலிருந்து லண்டன் நூதன சாலை பெற்றுக்கொண்டது. ஆனால் தற்காலச் சுற்றுலாத் துறையானது, கடந்த காலத்தின் காலனித்துவத்தைப் போன்று தேசியக் கலைச் செல்வங்களைக் கொள்ளையழக்கத் தூண்டுதல் அளிப்பதாக வளர்ச்சியடையக்கூடும்.

தெளிவாகவே, திறந்த மனமும், நல்லெண்ணமும் மாத்திரம் தப்பபிப்பிராயங்களையும் வேறுபாடுகளையும் போக்குவதற்குப் போதாது. சுற்றுலாத் துறைப் பாதையின் இரு அந்தங்களிலும் ஒரு ஆரம்பப் புள்ளிகளே அவை. ஆனால் ஒரு பிராந்தியத்துக்கும் மறு பிராந்தியத்துக்கும், அல்லது ஒரு நகருக்கும் மற்றொன்றுக்கும், அல்லது கிராமங்களுக்கும் கிராமிய குழுக்களுக்கும் இடையில் ஒப்பந்தங்கள் செய்து கொள்வதற்கு பரஸ்பரம் மரியாதை அடிப்படையில் உறவுகள் தொடர்ந்து பேணப்படல் வேண்டும்.

எவ்வாறாயினும், மூன்றும் உலக நாடுகளின் மக்கள் கைத்தொழில்மய நாடுகளின் மக்களை தொடர்ந்தும் வரவேற்பதில் உண்மையாகவே அக்கறையுடையவர்களாக இருப்பின் மாத்திரமே, மேற்கூறிய கண்ணோக்குகள் சாத்தியமாகும். காலனித்துவ காலத்திலும், பின்னரும் இந்நாடுகளின் பாரம்பரிய விருந்துபசாரத்தன்மை துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ள சூழ்நிலையில் இதனை நாம் வெறுமனே ஏற்றுக்கொண்டு குறுக்கமான ஒரு வகை சுற்றுலாத்துறையை ஏற்படுத்துவது மாத்திரம் போதாது.

தொடர்ந்தும் காலனியாதித்துவத்தின் கரங்களில் தங்கி நிற்காது, ஆனால் மக்களை நெருக்கமாகக் கொண்டுவரும், அதே வேளையில் புதிய சூழல்களின் கண்டுபிடிப்புக்களையும், பல்வேறு நாகரிகங்களையும் செழிப்புறச் செய்யும் சுற்றுலாத் துறையானது உண்மையான வளம் காண வேண்டின் கைத்தொழில்மய நாடுகளுக்கும் மூன்றும் உலக நாடுகளுக்கு மிடையிலான பொருளாதார சமூக உறவில் மாற்றமும் பழக்க நடைமுறைகளிலான பரிணும வளர்ச்சியும் அவசியமாகும்.

(நன்றி — டிவலப்மன்ட் போரம் ஐ. நா. மாதாந்திரி)

---

**அபிவிருத்திக்கான . . . .**

(25ம் பக்கத் தொடர்ச்சி)

வதிருப்தி தொடர்புடையதாயுள்ளது. மேலும் காணி உடைமையும், கிராமிய நிறுவனங்களின் பாரம்பரிய படல் அமைப்பும் அதே நிலையிலிருக்கக் கூடியதாக தானிய உற்பத்தியை அதிகரிப்பதற்காக அதிக விளைச்சலைத் தரக்கூடிய விதைகளையும் இரசாயனங்களையும் புகுத்தியதோடு அபிவிருத்தி யடைந்துவரும் நாடுகள் மத்தியில் ஏற்பட்டுள்ள அனுபவங்கள், வருமான வேறுபாடுகள் சம்பந்தமான திரிபுகளையும். சமூக அரசியல் விளைவுகள் பற்றிச் சிந்தியாது புகுத்தப்படும் தொழில் நுட்ப மாற்றங்களினால் ஏற்படும் சமூக சூழ்ச்சிகளையும் எடுத்துக் காட்டுகின்றன.

சுருங்கக் கூறின் தொழில் நுட்ப அபிவிருத்தியின் பிரச்சினைகள், உலகைப் பீடித்துள்ள பாரிய அரசியல் சமூக நெருக்கடியிலிருந்து மேற்கொண்டும் பிரிக்கப்பட முடியாது. புதிய அபிவிருத்திப் படிமுறை முகை விரிக்கையில், தற்போதைய தொழில் நுட்ப அபிவிருத்திப் பரிமாற்ற முறையில் இதற்கென ஒழுங்கு செய்யப்பட்டதும் இடையீடானதுமான மாற்றங்கள் போதுமானவையுமாயிரா. கிடைக்கக் கூடிய சகல விஞ்ஞான அறிவுகளும், ஒவ்வொரு நாடும் தனது தேவைக்கு இணங்க விருத்தி செய்யும் பொருத்தமான தொழில் நுட்பங்களும், இனங் காணப்படுவதற்கு ஒரு முறையான முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டும். அவ்வற் நாடுகளின் தொழில் நுட்பப் பரவல் அதிக பட்ச விளைவுகளைத் தரலாம். உடனடிப் பிரச்சினைகளையும் நீண்டகாலப் பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கு மிக விசாலமான தொழில் நுட்பங்களை அபிவிருத்தி செய்வதற்கு வழி வகுக்கக்கூடிய ஒரு படிமுறை முன்வைக்கப்பட வேண்டும்.

(20ம் பக்கத் தொடர்ச்சி)

கள். திட்ட அமுலாக்க அமைப்பு நடத்திய ஆய்வு ஒன்றிலிருந்து இந்த விவரம் தெரியவந்துள்ளது. படகுகளைத் திருத்தும் நிதி சேர்ப்பும் விநியோகமும் ஒரு சங்கத்தில் எவ்வாறு கையாளப்படுகிறது? அதுவே மேற்சொன்ன மோசடிக்குக் காரணமுமாகும். பல சங்கங்களில், பெருந்தொகையில் மீன் பிடித்துக் கொண்டு வராத படகுகளுக்கே, அவற்றைத் திருத்துவதற்கெனப் பணம் கொடுக்கப்பட்டு வந்தது. அதன் விளைவாக பிரஸ்தாப நிதிக்குப் போதியளவு பணம் சேரவில்லை.

மீன்பிடித் தொகை குறைந்து போவதற்கு, இயந்திரப் படகுகளில் செல்லும் மீனவர்கள், பிரஸ்தாப படகுகள் அரசின் சொத்துத் தானே என்ற மனப்பான்மையுடன் செயலாற்றுவதும் முக்கிய காரணமாகும். மீன்பிடித் தொகையை அதிகரிப்பதற்கும், மீனவர்களின் வருமானத்தை உயர்த்துவதற்கும் இப் படகுகளின் உரிமையை மாற்றுவது அவசியமாகும்.

கூட்டுறவுச் சங்கங்களில் அங்கத்தவனாக உள்ள ஒவ்வொரு மீனவனின் மாதாந்த வருமானமும் 150 ரூபாவுக்குக் குறைந்ததாகவே இருந்தது. அதாவது மீனவர்கள், சமுதாயத்தில் திருப்தியான நிலையில் வாழ்க்கை நடத்த முடியாது நிலை ஏற்பட்டது எனலாம்.

இறக்குமதி செய்யப்படும் நைலோன் சிறகு வலைகளைச் சிறந்த தொழில் நுட்ப சாதனமாகக் கருதி மீனவர்கள் அவற்றைப் பயன்படுத்தப் பெரிதும் விரும்புகிறார்கள். ஆனால் அவை பெருமளவில் நம் நாட்டில் கிடைப்பதில்லை. இவ்வலைத் தட்டுப்பாடும் மீன்பிடித் தொகை குறைவதற்கு ஒரு முக்கிய காரணியாக விளங்குகிறது. ஜப்பான் போன்ற நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது, எமது நாட்டில் மிகமிகச் சொற்ப நைலோன் வலைகளே பயன்படுத்தப்படுகின்றன. ஜப்பானிய சமன் மீன்பிடிப் படகில் தொழிலுக்குச் செல்வோர் 1600 துண்டு வலைகளைப் பயன்படுத்துகின்றனர் (சமன் மீன்பிடிக் கப்பல் ஒன்றோடு 40 படகுகள் செல்வதுண்டு).




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ශ්‍රී ලංකාවේ මිරිදිය මසුන්

# இலங்கையின் நன்னீர் மீன்கள்

# FRESHWATER FISHES OF SRILANKA




1. சேத்துக் கெண்டை
2. கோழிக் கெண்டை
3. புலுட்டை
4. —
5. கோழிக் கெண்டை
6. பூ புலுட்டை
7. கோழிக் கெண்டை
8. கோழிக் கெண்டை
9. கல்கொறவாய்
10. —
11. கோழிக் கெண்டை
12. பாம்புத்தலையன்
13. விரால்
14. சேல்கெண்டை
15. இரு விரால்
16. சுங்கன்
17. வானவில்றவுட்
18. நன்னீர்ச் சுறு
19. சுங்கரா
20. கெண்டை
21. கெழுறு
22. கெழுறு
23. —
24. சேல்கெண்டை
25. கெழுறு
26. சேல்கெண்டை
27. சேத்துக் கெண்டை
28. —
29. பெரிய இறால்
30. திலாப்பியா
31. பனையேறிக் கெண்டை
32. பூ மீன்
33. பால் ஆமை
34. விலாங்கு

(கடற்றொழில் திணைக்களத்தின் அனுமதியுடன் பிரசுரிக்கப்பட்டது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமை தபாற் கந்தோரில் செய்திப் பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது

# பொருளியல் நோக்கு



விலை 2/-

பொருளியல் நோக்கில் இடம் பெற்றுள்ளவற்றை பேற்றுக் குறிப்புடன் மீளப் பிரசுரிக்கவோ மேற்கோள் காட்டவோ அனுமதியுண்டு.

தெஹிவளை, துட்டுகமுனு தெரு, 137 இல் உள்ள, திஸர அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org